வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு வாரமலர்

Eelanadu





மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.


Email : news@eelanadu.lk | மலர் : 04 | 30.07.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 232 | பக்கங்கள் : 20




07 மணிப்பூர் எல்லைப் பாதுகாப்பில் இந்தியாவின் தவறு



08 பதின்மூன்று படும்பாடு



10 தேர்தலுக்காக 13ஐ கையாளும் தென்னிலங்கை அரசியல்வாதிகள்!



11 ரணிலிடம் அகப்பட்டுள்ள '13' குரங்கின் கை பூமாலையா?


# அதிகாரப் பகிர்வுக்கு இது பொருத்தமான நேரமல்ல!

## சரத் பொன்சேகாவும் எதிர்ப்பு



கொழும்பு, ஜூலை 30

சர்வகட்சி மாநாட்டில் அதிகாரப் பகிர்வு நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்றது. நாட்டின் அனைத்து மக்களும் சம உரிமையுடன் வாழவேண்டும். நாட்டில் சுமுகமான நிலை இருக்கும்போதே இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும். இதனை மேற்கொள்ள சரியான நேரம் இதுவல்ல என எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

*அநுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்த போது சர்வகட்சி மாநாடு மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில்-*

*சர்வ கட்சி மாநாட்டில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. எவ்வாறு அதிகாரப் பகிர்வை மேற்கொள்வது? அல்லது எந்த சந்தர்ப்பத்தில்*

19



# இலங்கையில் மீண்டும் முதலீடு செய்யுங்கள்!

## *ஜப்பான் அரசுக்கு அலி சப்ரி அழைப்பு*

*கொழும்பு, ஜூலை 30*

*மின்சாரம், வீதி அபிவிருத்தி மற்றும் துறைமுகங்கள் உள்ளிட்ட திட்டங்களில் முதலீடுகளை மீண்டும் தொடங்குமாறு ஜப்பானுக்கு இலங்கை அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.*

19

# இந்திய முட்டைகளால் இலங்கைக்கு ஆபத்து!

*கொழும்பு, ஜூலை 30*

*இந்தியாவில் இருந்து குறைந்த விலையில் கொள்வனவு செய்யப்பட்ட முட்டைகள் மூலம் பறவைக் காய்ச்சல் பரவும் அபாயம் இருப்பதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின்*

19

# அம்பாந்தோட்டையில் சீனாவின் 2ஆவது வெளிநாட்டு படைத்தளம்!

## *அமெரிக்க பல்கலைக்கழக ஆய்வில் தகவல்*

*கொழும்பு,ஜூலை 30*

*சீனா தனது நாட்டுக்கு வெளியே அமைக்கவுள்ள இரண்டாவது இராணுவத்தளத்தை பெரும்பாலும் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிர்மாணிப்பதற்கான வாய்ப்பு உள்ளதாக சமீபத்திய ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.*

*அமெரிக்காவின் வில்லியம் மேரி பல்கலைக்கழகத்தின் எய்ட் டேற்றா ஆய்வுத் திட்டத்தினால் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*சீனாவின் துறைமுகத் திட்டங்கள் மற்றும்*

19

# அமைச்சு பதவிகள் இல்லை என்பதற்காக ரணிலை ஆதரிக்காமல் இருக்கமுடியாது!

## *கூறுகிறார் பஸில் ராஜபக்ஷ*

*கொழும்பு, ஜூலை 30*

*பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பொறுப்புகள் கிடைக்கவில்லை என்பதற்காக அவர்கள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்காமல் இருக்க முடியாது என அந்த கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.*

*பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்களுடனான சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.*

*தமது நிலைப்பாட்டுக்கு இணங்க ஜனாதிபதி செயற்படவில்லை என்றால், அவருக்கு ஆதரவளிப்பதில் பயனில்லை என சிரேஷ்ட உறுப்பினர்கள் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளனர்.*

*இதுவரை தமக்கு அமைச்சுப் பொறுப்புகள்*

19

# இந்தியாவின் உப மாநிலமாக இலங்கையை மாற்ற முயற்சி

## *பேராசிரியர் ஆனந்த ஜயவிக்ரம குற்றச்சாட்டு*

*கொழும்பு, ஜூலை 30*

*இந்தியாவின் உப மாநிலமாக இலங்கையை மாற்ற முயற்சிக்கின்றனர். பாலத்தை நிர்மாணிப்பதால் இந்தியாவின் நலன்களே நிறைவேறும். இலங்கையின் தேவைப்பாடுகள் பாலம் நிர்மாணிப்பதால் நிறைவேறாது என பேராதனை பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும் ஐக்கிய மக்கள் சக்தியின் புத்திஜீவிகள் ஒன்றியத் தின் தலைவருமான பேராசிரியர் ஆனந்த ஜயவிக்ரம தெரிவித்தார்.*

*எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் புத்திஜீவிகள் பங்கேற்கும் ஊடக*

19

# த.தே.கூ., தமிழரசு எம்.பிக்களை சந்திக்கிறார் இந்தியத் தூதர்!

*கொழும்பு, ஜூலை 30*

*தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், இந்திய தூதருக்கும் இடையே சந்திப்பு இடம்பெறவுள்ளது.*

*எதிர்வரும் முதலாம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு இந்திய தூதரகத்தில் இந்த சந்திப்பு நடைபெறும்.*

*இந்தியாவுக்கு அழைக்கப்பட்டிருந்த இலங்கை ஜனாதிபதி, 13ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முயல்வதாக காண்பித்து வரும் சூழலில், தமிழ் தரப்புடனான சந்திப்பை இந்திய தூதரகம் ஏற்பாடு செய்துள்ளது. (அ)*

# எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்வதற்கு தயார்!

## *ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு*

*கொழும்பு, ஜூலை 30*

*ஐக்கிய மக்கள் சக்தி, எந்தவொரு தேர்தலுக்கும் தயார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.*

*கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில், ஆசிரியர் ஆலோசகர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் அவர் இதனை கூறினார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில்-*

*சுகாதாரக் கட்டமைப்பிலும் ஊழல், மோசடிகள் அதிகரித்துள்ள பின்னணியில், நாட்டில் பெரும் பொருளாதார, சமூக,*

19

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

இந்த ஊர்க்குருவி யாழ்ப் பாணத்தில் எண்பதுகளில் ஈழ நாடுவில் பணியாற்றிய அந்தக் காலத்தில் இரவுக் கடமை முடிந்து அதிகாலை வீட்டுக் குச் செல்வதற்காக யாழ்ப் பாண பஸ் நிலையம் செல்வ தற்கு முன்னதாக அதன் எதிரே உள்ள பூபாலசிங்கம் புத்தகக் கடையில் சில நிமிடங்களைக் கழிப்பதுண்டு.

கடையின் மேற்குப் பக்கத் தில் அன்றைய தினசரிகளை விற்பதற்கான பகுதியின் முன் னால் யாழ்ப்பாணத்தின் பிர முகர்கள் பலரை காணலாம். அங்கே கொட்டடியைச் சேர்ந்த அந்த பதின்மவயது வாலிபனும் தினமும் நிற்பான்.

அன்றைய பத்திரிகைகளில் வந்திருக்கின்ற செய்திகளை மற்றவர்கள் விமர்சித்துக் கொண்டிருக்கும்போது. அவன் மட்டும் எந்தப் பத்தி ரிகையில் எந்த செய்தி வந்தி ருக்கின்றது? அந்தச் செய்தி எந்தப்பத்திரிகை யில் வரவில்லை என்பது போன்ற தகவல்களை சொல்லிக் கொண்டிருப்பான்.

அத்தனை செய்திகளையும் அலசிக்கொண்டு வருவோர் போவோர் எல்லோருடனும் கதைத்துக்கொண்டிருப்பான். அனேகமாக அவனுக்கு அங்கு வருகின்ற வயதான பிரமுகர் களும் நண்பர்கள் மாதிரித் தான்.

அந்த வாலிபன் இப்போது லண்டனில் வாழ்ந்துகொண் டிருக்கின்றார். இப்போது அவருக்கு எத்தனை வயதிருக் கும் என்பதை நீங்கள் ஊகித் திருப்பீர்கள். நான் யாரை சுட்டு கிறேன் என்பதை அவரைத் தெரிந்தவர்கள் புரிந்துகொள்வார்கள். நேற் றையதினம் வட்ஸ்அப்பில் தொடர்பில் வந்தார். வட்ஸ் அப் தொலைபேசி அழைப்புக்களை அழைப் பவர் யார் என்பதை அவர்களின் 'புறோஃபைல்' காட்டித்தந்து விடும். அவர் தான் அழைக்கிறார் என்பதால் தவிர்க்க முடியாமல் பேச வேண்டிவந்தது.

எடுத்த எடுப்பிலேயே அவர் சொன்னார், 'ஈழநாடு வுக்கு ஒரு பாரம்பரியம் இருக்கிறதுதான். அந்தக் காலத்தில் ஒரு பத்திரி கையில் தவறான செய்தி வந் தால் கூட வேறு ஒரு பத்திரிகை அந்த தவறை சுட்டிக்காட்டாது. அதாவது ஒரு பத்திரிகையைப் பற்றி மற்றுமொரு பத்திரிகை செய்திவெளியிடாது. அந்தப் பாரம்பரியத்தில் வந்ததுதான் ஈழநாடு. என்றாலும் எனக்கு சில வேளைகளில் ஈழநாடு மீது கோபம் வருகிறது" என்று ஒரே மூச்சில் சொல்லி முடித் தார் அவர்.

அவர் எதைச் சொல்கிறார் என்பதை புரிந்துகொள்ள முடியவில்லை.

'அப்படி வேறு எந்தப் பத்தி ரிகையைப் பற்றி நாங்கள் தவ றாக எழுதினோம் என்று இப் படியொரு பீடிகை போடு கிறீர்கள்" என்று கேட் டேன்.

'இல்லை, இல்லை, ஈழநாடு தனது பாரம்பரியத்தை இது வரை மீறவில்லைத்தான். ஆனால் இந்த ஒருதடவை என்றாலும் மீறவே வேண்டும்" என்றார் அவர்.

'யாழ்ப்பாணத்திலுள்ள எந்த ஒரு பத்திரிகையுமே - ஈழ நாடு குழுமம் (டான் ரிவியை யும் சேர்த்துத்தான் சொல்கி றேன்) பற்றிய எந்த ஒரு செய்தி யையும் கண்டுகொள்வ தில்லை. ஆனால் நீங்கள் மட்டும் ஒரு பத்திரிகை யின் உரிமையாளரான அந்த அர சியல்வாதியின் செய்திகளை போடுகின்றபோது எரிச்சலாக இருக்கின்றது." என்றார்.

'அண்மையில் வடக்கு கிழக் கின் முக்கிய சிவில் சமூக பிரதி நிதிகள் கையெழுத்திட்டு இந்தி யப் பிரதமருக்கு மனு அனுப்பியிருந்தார்கள். நல்லை ஆதீனத்திலிருந்து ஆயர்கள் வரையும் பல்கலைக்கழக பேராசிரியர்கள், முன்னாள் உபவேந்தர்கள் என்று பலர் கையெழுத்திட்ட அந்த மனு வில், இந்த சமூகத்தின் மீது அக்கறை உள்ள ஒரு பிரஜை யாக ஈழநாடு குழுமத்தலைவர் குகநாதனும் கையெழுத்திட்டி ருந்ததுடன், அந்த மனுவை கைய ளிக்க இந்திய துணைத் தூதரகத்திற்கும் சென்றிருந் தார்.

இதனை ஒரு செய்தியாக் கிய பத்திரிகை ஒன்று, 'தங்களைத் தாங்களே சிவில் சமூகத்தினர் என்று கூறிக் கொள்ளும் சிலர் மனுவை கையளித்தனர்" என்று செய்தி வெளியிட்டிருந்தது.

ஒரேயொருவர் கையெழுத் திட்டு சிவில் சமூகம் என்ற பெயரில் கடிதம் எழுதினாலும் அதனை அப்படியே பிரசுரிக் கின்ற அந்தப் பத்திரிகை, சமூகத்தில் இத்தனை பெரிய பிரமுகர்கள் கையெழுத்திட்டு மகஜர் கையளித்ததை கேவலப் படுத்துவதாக நினைத்துக் கொண்டு தன்னைத்தானே கேவலப்படுத்தியது."

நண்பர் விடுவதாக இல்லை. அவர் சொல்வதை யெல்லாம் அமைதியாக கேட்டுக்கொண்டிருந்த போது, சொன்னார், அதற் குப்பிறகும் அந்த பத்திரிகை யின் தலைவர் பற்றிய செய் தியை நீங்கள் ஒளிபரப்பியதை பார்த்த பின்னர் தான், நான் இப்போது தொலைபேசி எடுத்தேன் என்றார்.

அவரை சமாதானப்படுத் துவதற்காக சொன்னேன்.

'அவர்களைப் போல எங்க ளையும் நடந்துகொள்ளச் சொல்கிறீர்களா?" என்று.

'அதற்காக... குட்டக்குட் டக் குனிபவனும் மடையன் தானே?" என்றார் கோபமாக.

'தங்களைத் தாங்களே ஊட கப் போராளிகள் என்றும், அர சியல் கட்சி ஒன்றில் இருந்து கொண்டும் தங்களை நடுநிலை பத்திரிகை என்றும் எழுது கின்றவர்களைப்பற்றி இனியா வது கண்டுகொள்ளாதீர்கள் என்று விட்டு தொடர்பை துண்டித்து விட்டார் நண்பர்.

**- ஊர்க்குருவி.**

# சிறுநீரக சத்திர சிகிச்சைக்கு பின் மூன்று வயது குழந்தை உயிரிழப்பு

கொழும்பு, ஜுலை 30

கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிறுநீரக சத்திர சிகிச்சைக்கு பின் மூன்று வயது குழந்தை உயிரிழந்த சம்பவம் ஒன்று பதிவாகி உள்ளது.

இதற்கு வைத்தியர்களின் அலட்சியமே காரணம் என குழந்தையின் பெற்றோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

சிறுநீரக சத்திரசிகிச் சையின் பின்னர் கிருமி தொற்று காரணமாக கொட் டாஞ்சேனையைச் சேர்ந்த 3 வயதும் 03 மாதங்கள் வயது டைய ஆண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

குழந்தைக்கு சிறுநீரகம் தொடர்பான நோய் நிலைமை இருப்பதாக வைத்தியர்கள் கண்டறிந்ததாகவும், வலது சிறுநீரகம் ஆரோக்கியமாக உள்ள நிலையில் இடது சிறு நீரகத்தை அகற்ற வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

எவ்வாறாயினும் அறுவைச் சிகிச்சையின்போது ஆரோக்கி யமான வலது சிறுநீரகமும் அகற்றப்பட்டதாக வைத்தி யர்கள் பின்னர் அறிவித்ததாக பெற்றோர்கள் தெரிவித்துள்ள னர்.

இரண்டு சிறுநீரகங்களும் இல்லாததால் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை வரை டயாலிசிஸ் சிகிச்சைக்கு பரிந் துரைக்கப்பட்ட குழந்தை கிருமி தொற்று காரணமாக உயிரிழந்துள்ளது.

இது தொடர்பில் உயிரி ழந்த குழந்தையின் தாய் தெரி விக்கையில்,

பயப்படாதீர்கள், இன்னும் மூன்று மாதத்தில் சிறுநீரகம் ஒன்றை தேடி அவருக்குப் பொருத்தி உயிர்வாழ வைப்ப தாக கூறினார்கள். அதன் கார ணமாக குழந்தையின் நிலையை எதிர்பார்த்து பொறுமையாக காத்திருந் தோம். கடைசியாக எனது குழந்தையின் இரண்டு சிறுநீர கங்களும் இல்லை என கூறி னார்கள்.

தொடர்ந்து அவரின் நிலை கவலைக்கிடமானது. வயிற் றோட்டம் செல்ல ஆரம்பித் தது. அதன் பிறகு, அவர் பலவீனமடைந்தார், சாப்பிடு வதை நிறுத்தினார். ஒரு டம்ளர் தண்ணீர் கூட குடிக்க வில்லை. கடைசியில் என் குழந்தையை நான் இழந்தேன்- என்றார்.

இது தொடர்பில் லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்திய சாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஜி.விஜேசூரிய தெரிவிக்கையில்-

குழந்தையின் சிறுநீரகம் ஒழுங்கற்ற நிலையில் இருந்த மையினால் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. சத்திரசிகிச்சையின் போது ஆரோக்கியமான சிறுநீரகமும் அகற்றப்பட்டது.

இந்தக் குழந்தையின் இரண்டு சிறுநீரகங்களும் பிறந்தது முதலே அருகருகே இருந்ததால், செயலிழந்த சிறுநீரகத்தை அகற்றும் போது மற்றைய சிறுநீரகமும் அகற்றப்பட்டது.

அறுவைச் சிகிச்சையின் போது அதை அடையாளம் காண முடியவில்லை. அத னால்தான் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்கு முன்பே இந்த குழந்தை கிருமி தொற்று ஏற்பட்ட இறந்துவிட்டது எனத் தெரிவித்தார். (அ)

# கொர்வெட் ஏவுகணையுடன் திருமலைக்கு 'கஞ்சர்' கப்பல்

கொழும்பு, ஜுலை 30



இந்தியாவில் தயாரிக்கப்பட்ட குக்ரி வகை கொர்வெட் ஏவுகணையை தாங்கிய இந்தியக் கடற்படைக் கப்பலான 'கஞ்சர்', நேற்று திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்தது.

குறித்த கப்பல் எதிர்வரும் 31ஆம் திகதி வரை திருகோணமலை துறைமுகத்தில் நங்கூரமிட்டி ருக்கும் என இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த பயணத்தின்போது இந்திய கடற் படைக் கட்டளை அதிகாரியான கொமாண்டர் என்.வி.எஸ்.பானிகுமார், கிழக்கு கடற்படைத் தளபதியை சந்திக்கவுள்ளார்.

இதன்போது, ஏவுகணை செயற்பாடுகள் குறித்தும் பல்வேறு தொழில்முறை தொடர்பு கள் குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளன.

அத்துடன், நாளை கடல்சார் கூட்டாண்மை பயிற்சியை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ள தாக இலங்கைக்கான இந்திய தூதரகம் விடுத் துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், இந்திய கடற்படையின் திறன்களை பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பார்வையிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை கடற்படையின் திறன்களை அதி கரிப்பதற்காக இரு நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பின் சாத்தியக்கூறு களை கருத்தில் கொண்டு இந்திய கடற்படை கப்பலான கஞ்ச ரின் விஜயம் அமையவுள்ளதாக இலங்கைக்கான இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

(அ)

# நலன்புரி கொடுப்பனவுகளில் எந்தவிதமான மாற்றமும் இல்லை

கொழும்பு, ஜுலை 30



புதிய முறைமை அமுலாக் கப்படும் வரையில், தற்போது நடைமுறைப்படுத்தப்படும் நலன்புரி கொடுப்பனவு முறை மைகளில் மாற்றம் ஏற்படாது என நிதி இராஜாங்க அமைச் சர் செஹான் சேமசிங்க தெரி வித்துள்ளார்.

குறைந்த வருமானம் கொண்டோர், சிரேஷ்ட பிரஜைகள், சிறுநீரக நோயாளர்கள் உட்பட ஏனைய நோய் நிலைமைகளுக்கு உள்ளா னவர்களுக் காக, தற்போது வழங்கப்படுகின்ற நலன்புரி கொடுப் பனவு களில் மாற்றமில்லை என ருவிட்டர் பதிவொன்றில் அவர் குறிப்பிட்டார்.

எனவே, பயனாளர்கள், எதிர்கால கொடுப்பனவு திட்டத்திற் காக, வங்கிக் கணக்கு ஒன்றைத் திறந்து, அது குறித்து பிரதேச செயலகங்களுக்கு அறியப்படுத்துமாறும் அவர் கோரியுள் ளார். (அ)

# இரும்புக் குழாய்களை திருடிய நால்வர் கைது

கொழும்பு, ஜுலை 30

சபாநாயகரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்திற்கு முன் பாக களஞ்சியப்படுத்தப்பட் டிருந்த இரும்புக் குழாய்களை திருடிய நால்வர் கைது செய் யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாண தெற்கு குற்றத்தடுப்புப் பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர்.

45 இலட்சம் பெறுமதி யான இரும்புக்குழாய்களே திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந் தேக நபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலி ஸார் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளனர். (அ)

# பொருளாதார மீட்சிக்கு பிரான்ஸ் முழு ஆதரவு!

## ரணிலிடம் உறுதியளித்தார் மக்ரோன்





கொழும்பு, ஜூலை 30
இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை முழுமைப்படுத்த தேவையான ஒத்துழைப்புகளை வழங்குவதாக பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் உறுதியளித்துள்ளார்.

அத்துடன், கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்காக அனைத்து பங்குதாரர்களையும் வலியுறுத்துவதற்காக பாரிஸ் கழக செயலாளர் அலுவலகம் மற்றும் பிரான்ஸ் அரசாங்கம் என்பன தமது ஒத்துழைப்பை வழங்குமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் தனது தென் பசுபிக் பிராந்தியத்திற்கான விஜயத்தின் பின்னர் நேற்று முன்தினம் இலங்கைக்கு வரலாற்று சிறப்புமிக்க விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

பிரான்ஸ் ஜனாதிபதி ஒருவர் இலங்கைக்கு வருகை தருவது இதுவே முதல் தடவையாகும்.

இந்த விஜயத்தின்போது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் ஜனாதிபதி இமானுவேல் மெக்ரோன் ஆகியோர் கொழும்பில் சிநேகபூர்வ மற்றும் சாதகமான இருதரப்பு கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிப்பதாக அவர் மீண்டும் உறுதிப்படுத்தியதாகவும் இலங்கையின் நான்காவது பெரிய கடன் வழங்குனர் என்ற வகையில், கடன் மறுசீரமைப்பு செயன்முறைக்கு தனது ஆதரவை வழங்குவதாக அவர் உறுதியளித்ததாகவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மெக்ரோன் ஆகியோர் பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடியதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு கூறியுள்ளது.

கடல்சார் பாதுகாப்பு, இலங்கையில் அபிவிருத்திக்கான பிரான்ஸ் பணியகம் ஒன்றை நிறுவுதல், உயர்மட்ட இராஜதந்திர கலந்துரையாடல்களை ஆரம்பித்தல், கல்வித் துறையில் ஒத்துழைப்பு மற்றும் கடல்வழி ஆட்கடத்தல் செயற்பாடுகளை தடுப்பதற்கான முயற்சிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் இங்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்போதைய உலகளாவிய நகர்வுகள், பிராந்திய மற்றும் பலதரப்பு நலன்கள் குறித்தும் இரு நாட்டுத் தலைவர்களும் கருத்துகளை பரிமாறிக் கொண்டுள்ளனர்.

பிரான்ஸ் அங்கம் வகிக்கும் இந்தியப் பெருங்கடல் பிராந்திய சம்மேளனத்தின் எதிர்வரும் தலைமைப் பதவிக் காலத்தில் இலங்கையுடன் ஒத்துழைப்புடன் செயற்பட ஆர்வமாக இருப்பதாக பிரான்ஸ் ஜனாதிபதி இதன்போது தெரிவித்துள்ளார்.

சர்வதேச தொடர்புகளில் பிரான்ஸின் ஈடுபாட்டிற்கு பாராட்டு தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கால நிலை அனர்த்தங்களை மட்டுப்படுத்தல், வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு மற்றும் இந்து - பசுபிக் வலய பிரச்னைகள் தொடர்பில் வழங்கப்படும் ஒத்துழைப்புகளுக்கும் நன்றி தெரிவித்துள்ளார். (அ)

# யாழ் ராணி ரயில் சேவையின் ஓராண்டு பூர்த்தி விழா நேற்று



கிளிநொச்சி, ஜூலை 30
யாழ் ராணி ரயில் சேவையின் ஓராண்டு பூர்த்தி விழா கிளிநொச்சி ரயில் நிலையத்தில் நேற்று இடம்பெற்றது.

யாழ் ராணி ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியடைந்துள்ளதை கொண்டாடும் வகையில் குறித்த நிகழ்வு கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் கடற்தொழில் அமைச்சரும் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், நிலைய ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

அரச மற்றும் தனியார் ஊழியர்களுக்கு போக்குவரத்து இலகுபடுத்தலுக்காக சேவையில் ஈடுபட்ட யாழ் ராணி, தனது முழுமையான சேவையை வழங்கி வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜனாதிபதி ரணிலைச் சந்தித்தார் ஜப்பான் வெளிவிவகார அமைச்சர்



கொழும்பு, ஜூலை 30
இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் ஹயாஷி யோஷிமாசா நேற்று சனிக்கிழமை கொழும்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடினார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகளை நினைவு கூர்ந்து தொடங்கிய இந்தக் கலந்துரையாலில் பல்வேறு துறைகளில் அந்த உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு இரு தரப்பும் பரஸ்பர புரிந்துணர்வுடன் செயற்படுவதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

இலங்கையில் கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டிற்கு ஜப்பான் அரசாங்கம் வழங்கும் ஆதரவிற்கு இதன்போது நன்றி தெரிவித்த ஜனாதிபதி, கடன் மறுசீரமைப்பு தொடர்பான பொதுவான தளத்தை மேம்படுத்தும் மற்றும் செயல்முறையை விரைவுபடுத்தும் நோக்கில் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனுடன் நடைபெற்ற கலந்துரையாடல் குறித்தும் விளக்கினார்.

மேலும், ஜப்பான்-இலங்கை ஒத்துழைப்பின் முக்கிய விடயமான இலகு ரயில் திட்டம், துறைமுக கிழக்கு முனையம், கண்டி அபிவிருத்தித் திட்டம், மத்திய அதிவேக நெடுஞ்சாலை மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய விரிவாக்கத் திட்டங்களை துரிதப்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்து சமுத்திர பிராந்தியத்தை அமைதியான மற்றும் நிலையான பிராந்தியமாக பேணுவதற்கு ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டதுடன், பிராந்திய மற்றும் பல்வேறு உலகளாவிய பிரச்சினைகள் குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சரும் கலந்துரையாடினர்.

தொழில் சந்தை சார்ந்த பொருளாதாரத்தில் இருந்து உயர் தொழில்நுட்ப பொருளாதார மாற்றத்தை எதிர்பார்த்துள்ள இலங்கையின், உயர் தொழில்நுட்ப கைத்தொழில் முதலீட்டு வாய்ப்புகள் குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஜப்பானிய வெளிவிவகார அமைச்சருக்கு தெளிவூட்டியதோடு அதற்காக ஜப்பானிய முதலீட்டாளர்களை ஊக்குவிக்க அவசியமான பணிகளை மேற்கொள்வதாக ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார். (அ)

# கனடா தூதுவரின் கூற்றிலிருந்து இலங்கை பாடம் கற்கவேண்டும்

## மனோ கணேசன் எம்.பி சுட்டிக்காட்டு




கொழும்பு, ஜூலை 30

“கனேடிய தூதுவர் எரிக் வோல்ஷ், என் பக்கத்தில் இருந்தபடி பகிரங்கமாக, “கனடாவில் எங்களின் சொந்த அனுபவம் இருக்கிறது. ஆதிகுடிகள் தொடர்பில் கனடாவில் இனவழிப்பு நிகழ்ந்ததை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். ஆதிகுடிகளுடனான இனநல்லிணக்க முயற்சிகள் நடைபெறுகின்றன. அது தொடர்பில் நாம் பணியாற்றுகிறோம். அது சுலபமல்ல. அது நீண்ட பணி.” என்று கூறினார். அதாவது தவறு, குற்றம் நிகழ்ந்ததை, அந்நாட்டு அதிகாரபூர்வ தூதுவர் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளார். இதிலிருந்து இலங்கை பாடம் கற்கவேண்டும்.”

-இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன், கனேடிய தூதுவர் எரிக் வோல்ஷ் ஆகியோர் கலந்துக்கொண்டு கொழும்பில் நடைபெற்ற கனடிய தமிழர் பேரவை ஊடக சந்திப்பில் கனேடிய தூதுவர் நிகழ்த்திய உரை தொடர்பில் மனோ கணேசன் எம்பி மேலும் தெரிவிக்கையில்-

வரலாற்றில் தவறுகள், குற்றங்கள் எங்கும் நிகழும். ஆனால் அந்த தவறுகள், குற்றங்கள் மீண்டும் நிகழாமல் இருக்க, முதலில் நாம் தவறுகள், குற்றங்கள் நிகழ்ந்தன என்பதை பகிரங்கமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். மன்னிப்பு கோருவது என்பதுகூட இரண்டாம் பட்சம்தான் என்பது என் நிலைப்பாடு. ஆனால், முதல் தவறுகள், குற்றங்கள் நிகழ்ந்தன என்ற உண்மை ஏற்கப்பட வேண்டும். இதுவே இன, மத, நல்லிணக்கத்துக்கு அடிப்படை என்ற பாடத்தை கனடிய தூதுவர் எரிக் வோல்ஷின் கூற்றில் இருந்து இலங்கை அரசியல், மத, சமூக தலைவர்கள் கற்க வேண்டும்.

கனேடிய தூதுவரின் நிலைப்பாடுகள் எனக்கு புதிதல்ல. அவையே எனது நிலைப்பாடுகளும் ஆகும். தவறுகள், குற்றங்கள் ஆகியவற்றை எல்லா தரப்பும் வரலாற்றில் செய்கின்றன. அரசு நிறுவனமும் செய்கிறது. அரசற்ற நிறுவனமும் செய்கிறது. இங்கு யாரும் புனிதர் அல்ல.

காலம் ஓடுகிறது. இந்த கால ஓட்டத்தில் ஓரிடத்திலேயே தேங்கி தெப்பமாக நிற்க முடியாது. காலம் அனைத்தையும் கடத்தும். இங்கே அனைத்தும் கடந்து போகும். அப்போது புதிய பார்வைகள் தோன்றுகின்றன. புதிய சிந்தனைகள் உதிக்கின்றன. காலம் காட்டும் மாற்றங்களை ஏற்காவிட்டால், காலம் எம்மை தூக்கி வீசிவிட்டு போய் கொண்டே இருக்கும். அது யாருக்காகவும் காத்திருக்காது. எனது பார்வை இதுதான்.

நண்பர் எரிக் வோல்ஷ் தொடர்ந்தும் சொன்னார். “பல்லின, பன்மத, பன்மொழி என்ற பன்மைத்துவதை நாம் கொண்டாடுகிறோம்” என்று சொன்னார். “அதுவே எமது பலம்” என்று சொன்னார். அதையே அவருக்கு முன் பேசும் போது நானும் சொன்னேன். இவற்றை என் சமூக ஊடக தளங்களில் பாருங்கள்.

இலங்கை பன்மைத்துவ நாடு என்ற அடிப்படையை நாம் ஒருபோதும் விட்டுக்கொண்டுக்க கூடாது. அதுவே எமது எதிர்கால மீட்சிக்கு ஒரே வழி. எனது வழி. எமது வலியை போக்கும் வழி-என்றார். (அ)

# இலங்கை-இந்திய மீனவர் பிரச்னை; ஸ்டாலினுடன் ஜீவன் பேச்சுவார்த்தை



சென்னை, ஜூலை 30

மலையக தமிழர்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் கடந்துள்ள நிலையில் அவர்களை கௌரவிக்கும் முகமாக மலையகம் - 200 விழா, இலங்கை, இந்திய மீனவர் பிரச்சினை, மலையக கல்வி அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் பேச்சு நடத்தியுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் இல்லத்தில் மரியாதை நிமித்தம் நேற்று காலை நடைபெற்ற இச்சந்திப்பில், இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையக தமிழ் மக்களின் மேம்பாட்டுக்காக தமிழக அரசின் பங்களிப்பும் அவசியம் என்ற கோரிக்கையை அமைச்சர் ஜீவன் தொண்டமான் முன்வைத்தார்.

இச்சந்தர்ப்பத்தில், கடந்த வருடம் இலங்கையில் ஏற்பட்ட கடும் பொருளாதார நெருக்கடியின் போது தமிழக அரசாங்கம் இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் பாரிய அரிசி தொகையினை நன்கொடையாக வழங்கியிருந்தது. இதற்கு இலங்கை மக்கள் சார்பாக தனது நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டார்.

இந்த சந்திப்பின் போது, சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்தின் துணைத் தூதர் டாக்டர் வெங்கடேஸ்வரன் மற்றும் அரச உயர் அதிகாரிகளும் கலந்துக் கொண்டனர்.

இது குறித்து அமைச்சரின் ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இலங்கை, இந்திய மீனவர் பிரச்னை தொடர்பில் இரு நாட்டு மீனவர்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் சுமூக தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதே தனது எதிர்பார்ப்பு என முதல்வரிடம் குறிப்பிட்ட ஜீவன் தொண்டமான், இவ்விவகாரம் சம்பந்தமாக இலங்கை அமைச்சரவையிலும் பேசவுள்ளதாக அவரிடம் தெரிவித்துள்ளார்.

மலையக கல்வி அபிவிருத்தி சம்பந்தமாக தமிழக அரசிடம் 4 கோரிக்கைகளை முன்வைத்த ஜீவன் தொண்டமான், மலையக மாணவர்களுக்கு தமிழகத்திலும் பட்டப்படிப்பை நிறைவுசெய்வதற்கான புலமைப்பரிசில் திட்டங்கள் பற்றியும் இதன்போது கலந்துரையாடியுள்ளார்.

அத்துடன், மலையக தமிழர்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் கடந்துள்ள நிலையில், அம்மக்களின் இலங்கையின் பொருளாதாரத்துக்கு வழங்கிய - வழங்கி வரும் பங்களிப்பை பாராட்டும் வகையில் அவர்களின் கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களை பிரதிபலிக்கும் வகையிலான மலையகம் - 200 விழா அரச அனுசரணையுடன் எதிர்வரும் நவம்பரில் நடைபெறவுள்ளமை பற்றியும் தமிழக முதல்வருக்கு, ஜீவன் தொண்டமான் தெளிவுபடுத்தினார்.

மேலும், கலைஞரின் ஆட்சி காலத்தில் இலங்கைக்கு பல உதவி திட்டங்கள் வழங்கப்பட்டது. அதையும் நினைவுகூர்ந்த அமைச்சர் ஜீவன் தொண்டமான் தொடர்ந்தும் தி.மு.க அரசு முன்னெடுக்கும் திட்டங்களுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஒத்துழைப்பு வழங்கும் எனவும் தெரிவித்தார். (அ)

# மக்களின் படுகொலையை மறைப்பதற்கே ஆங்காங்கே பௌத்த கோவில்கள் அமைப்பு

## செல்வம் அடைக்கலநாதன் குற்றச்சாட்டு



முல்லைத்தீவு, ஜூலை 30

மக்களின் படுகொலையை மறைப்பதற்கே ஆங்காங்கே புத்த கோவில்கள் அமைக்கப்படுகின்றன என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரியும் சர்வதேச நிபுணத்துவம் மற்றும், கண்காணிப்பை வலியுறுத்தியும் தண்ணிமுறிப்பு குருந்தூர்மலை விவகாரம் உள்ளிட்ட தமிழர் தாயகத்தில் இடம்பெறும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும் நேற்று முன்தினம் முல்லைத்தீவில் இடம்பெற்ற போராட்டத்தில் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்களுடைய எழுச்சிப் போராட்டம் வெற்றி அளிக்க வேண்டும். மக்களை படுகொலை செய்த இராணுவத்தினுடைய முகாமுக்கு அருகாமையில் இப்போது மனித எச்சங்கள் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மன்னாரில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அது தற்போது மூடப்பட்டிருக்கிறது. இவ்வாறு தொடர்ச்சியாக மனித எச்சங்கள் வெளிப்படும்போது அதனை மூடி மறைக்கும் செயற்பாட்டில் இலங்கை அரசாங்கம் ஈடுபடுகிறது.

இந்த இராணுவ முகாம்கள் பெரிதாகுவதற்கான காரணம் மனித எச்சங்களை மறைப்பதற்காகவோ என்னவோ தெரியவில்லை. அதே விட புத்த கோவில்கள் ஆங்காங்கே முளைப்பதற்கான காரணம் மக்களுடைய படுகொலையை மறைப்பதற்கான செயற்பாடுகளாக இருக்கலாம்.

ஆகவே இந்த போராட்டம் நிச்சயமாக உலக நாடுகளை ஈர்க்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

ஆகவே இந்த விடயத்திலே, தமிழ்க் கட்சிகள் அனைவரும் ஒரு குடையின் அணி திரண்டு எங்கள் மக்களின் பிரச்னைகளை தீர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்-என்றார். (அ)

# வடமராட்சியில் இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

வடமராட்சி புலோலி அறிவகம் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நடத்தப்படவுள்ளது.

அறிவகம் சனசமூக நிலையம் தமது 68ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்துள்ள இந்த இரத்த தான முகாம் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை, காலை 8.30 மணி முதல் நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

குருதிக்கொடையாளர்களை சமூகமளித்து குருதிக்கொடை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. (அ)

# பத்து வயதுச் சிறுவனை கத்தியால் குத்திய தந்தை

கொழும்பு, ஜூலை 30

தந்தையின் கத்திக்குத்துக்கு இலக்கான சிறுவன் ஒருவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கொபேகனே பொலிஸார் தெரிவித்தனர்.

பொரலுவெவ - ரத்மலகஸ் வெவ பகுதியைச் சேர்ந்த 10 வயதுடைய சிறுவனே இவ்வாறு காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன் தினம் இரவு 8.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. வீட்டில் ஏற்பட்ட சண்டையின்போது சிறுவன் கத்தியால் குத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரான தந்தை இது வரை கைது செய்யப்படவில்லை, கொபேகனே பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# யானை தாக்கி இருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 30

காட்டு யானைகள் தாக்குதலுக்கு உள்ளாகி இருவர் உயிரிழந்துள்ளனர்.

இங்கினியாகலை கெஹெல் எல்ல பிரதேசத்தில் மீன்பிடிக்கச் சென்ற ஒருவர் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

அம்பாறை பரகஹகலே பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, ஹந்துங்கொட, ஹிம்பிலியாகொட பகுதியில் சைக்கிளில் பயணித்த 69 வயதுடைய நபரொருவர் யானை தாக்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

ஈழநாடு
Eelanadu
30.07.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆடி 14

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

# ரெலோ கூறுவது தவறானதா?

இந்த நாட்டில் தீர்வு இல்லையென்றால், வடகிழக்கினை இந்தியாவின் ஒரு பகுதியாக இணைத்துக் கொள்ளும் சந்தர்ப்பத்தை நாம் கோரவேண்டுமென்று, ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்திருக்கின்றார். ரெலோ கூறுவதை ஏனைய தமிழ் தேசியக் கட்சிகளும் கூறுமா? அண்மையில் இலங்கைக்கும் - இந்தியாவிற்கும் இடையில், நிலத் தொடர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கிலான பல்வேறு திட்டங்கள் ஆராயப்பட்டிருந்தன. இரு நாடுகளுக்குமான எரிசக்தி இணைப்பு தொடர்பில் ஏற்கனவே உடன்பாடு காணப்பட்டிருக்கின்றது. இதற்கான பணிகள் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளன. அதேபோன்று, மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை துறைமுகத்திற்கும் தென்னிந்தியாவிற்கும் இடையிலான எண்ணெய்க் குழாய்கள் பொருத்துவது தொடர்பான சாத்திய ஆய்வுகளை மேற்கொள்வதற்கான இணக்கப்பாடும் எட்டப்பட்டிருக்கின்றது.

பொருளாதார ரீதியில், வடக்கு - கிழக்குடனான இந்தியாவின் தொடர்புகள் வலுவடைந்துவரும் சூழலிலேயே, ரெலோவின் தலைவர் இவ்வாறானதொரு கருத்தை தெரிவித்திருக்கின்றார். இது அடிப்படையில் துணிகரமான ஒரு கருத்து. ஏனெனில் இலங்கைக்குள் தமிழ் மக்கள் தொடர்ந்தும் இரண்டாம் பட்சமாகத்தான் நடத்தப்படுவார்கள் என்றால், தமிழ் மக்கள் வேறு ஏற்பாடுகளைத்தானே கோர முடியும். ஒன்றில் தனிநாட்டை தமிழ் மக்கள் கோர வேண்டும் இல்லாவிட்டால் இந்தியாவுடனான மாநில இணைப்பை கோர வேண்டும். தனிநாட்டை கோரினாலும் அதனையும் இந்தியாதான் பெற்றுக் கொடுக்க வேண்டும். அது சாத்தியமானதல்ல.

ஒரு காலத்தில் சிங்கள தலைவர்கள், இலங்கையையே இந்தியாவின் மாநிலமாக இணைக்குமாறு கோரியிருந்தனர். இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னர் அவ்வாறான பார்வை சிங்கள அரசியல் தலைவர்கள் மத்தியிலிருந்தது. இலங்கையை இந்தியாவின் ஒரு மாநிலமாக இணைக்குமாறு, இந்தியத் தலைவர்களுக்கு கடிதங்கள் கூட அனுப்பப்பட்டிருந்தன.

எனினும் இலங்கை சுதந்திரமடைந்ததை தொடர்ந்து, சிங்கள தேசியவாதம் எழுச்சியுற்றது. இலங்கைத் தீவை ஒரு சிங்கள - பௌத்த தீவாக பேணிப் பாதுகாக்க வேண்டுமென்னும் நிலைப்பாட்டில், சிங்கள ஆளும்வர்க்கம் ஒன்றுபட்டது. இதன் பின்னர் இந்தியாவினால் எப்போதும் தங்களுக்கு ஆபத்து நேரிடலாமென்னும் கருத்துருவாக்கத்தை பரவல்படுத்தினர். தமிழ் மக்களை இந்தியாவின் விரிவாக்கலுக்கான மக்கள் கூட்டமாக கருதும் சிந்தனைமுறைமை சிங்கள தேசியவாத அரசியலில் அங்கமாகியது. இன்றுவரையில் அது தொடர்கின்றது.

இந்திய - இலங்கை ஒப்பந்தமே, முதல் முதலாக, தமிழ் மக்கள் வாழும் வடக்கு - கிழக்கை, தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வாழ்விடமாக அங்கீகரித்தது. இந்த ஒப்பந்தத்தின் விளைவாகவே, மாகாண சபை முறைமை அறிமுகமானது. அதற்கான அதிகாரங்களை உறுதிப்படுத்தும் விடயமே தற்போது விவாதப் பொருளாகியிருக்கின்றது. ஒப்பந்தத்தின்படி, மாகாண சபைகளுக்கு காணி பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். ஆனால், இன்றுவரையில் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதில் தமிழர் பக்கத்திலும் தவறுகள் உண்டு. ஏனெனில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்தில் அனைத்து தரப்புக்களும் ஓரணியாக, அதனை முழுமையாக பயன்படுத்த முற்படவில்லை. ஆனால் தற்போதும், காணி பொலிஸ் அதிகாரங்கள் உறுதிப்படுத்தப்படுவதை, தென்னிலங்கையின் பெரும்பான்மை கட்சிகள் உடன்படவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்தில், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனின் கூற்றில் நியாயமுண்டு. ஏனெனில் தமிழ் மக்கள் வேறு என்னதான் செய்வதென்னும் கேள்விக்கான பதிலாகவே, அடைக்கலநாதனின், கூற்று அமைகின்றது. தமிழ் மக்களின் ஜனநாயக கோரிக்கைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்ட சூழலில்தான், தனிநாட்டுக் கோரிக்கையை நோக்கி, தமிழ் மிதவாத தலைவர்கள் சென்றனர். அதனை அடைவதற்கான திட்டத்துடன் அவர்கள் தனிநாடு தொடர்பில் சிந்திக்கவில்லை. மிதவாதிகளினால் நிலைமைகளை கையாள முடியாமல் போனபோதே, இளைஞர்களின் ஆயுதத் தலையீடுகள் உருவாகின. அதுவே ஒரு உள்நாட்டு யுத்தமாக விரிவுகொண்டது. இப்போது, அரசியலமைப்பிலுள்ள - அதுவும் இரண்டு நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தத்தினால், உறுதிப்படுத்தப்பட்ட அதிகாரங்களைக் கூட, தமிழ் மக்களோடு பகிர்ந்தளிக்க முடியாதென்று, சிங்கள ஆளும் தரப்பு கூறுமானால், அடுத்து என்னதான் செய்வது? இந்தக் கேள்வியிலிருந்து சிந்தித்தால், அடைக்கலநாதன் கூறுவதுடன் ஏனையவர்களும் கைகோர்க்கத்தான் வேண்டிவரும். இது தொடர்பில் தமிழரசுக் கட்சியின், அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் (முன்னணியின்) நிலைப்பாடு என்ன?

# தையிட்டி விவகாரத்திற்கு விரைவில் சுமுகமான தீர்வு

## அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 30

தையிட்டி விகாரை அமைக்கப்பட்டுள்ள பகுதியில் உள்ள மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பாக சாதகமான முடிவு எட்டப்பட்டிருப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா தெரிவித்துள்ளார்.

தையிட்டி விகாரையின் விகாரதிபதி ஜின்தோட்ட நந்தாராமவுடன் நேற்று நடைபெற்ற சந்திப்பு தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டுள்ள பகுதியில் காணப்படும் பொது மக்களுக்கு சொந்தமான காணிகள் தொடர்பாகவும், பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவது தொடர்பாகவும் ஏற்கனவே ஜனாதிபதியுடன் கலந்துரையாடி இருக்கின்றேன்.

அதன் தொடர்ச்சியாக இன்று விகாராதிபதியை சந்தித்து கலந்துரையாடியுள்ளேன். விகாரை அமைந்துள்ள பகுதியில் உள்ள தனியார் காணிகளை விடுவிப்பது தொடர்பாக சாதகமான நிலைப்பாட்டினை வெளிப்படுத்தியுள்ள நிலையில், மாவட்ட கட்டளைத்



தளபதி, பிரதேச செயலாளர் மற்றும் நில அளவையாளர் ஆகியோருடன் தொலைபேசி ஊடாக கலந்துரையாடி மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசிக்கப்பட்டுள்ளது. விரைவில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்." என்று தெரிவித்தார்.

அண்மையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்த விகாரை அமைக்கப்பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்கள், தமக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு பரிகாரம் காணப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 'திருமுறியான்பதி' மீள் உருவாக்க கிராம அங்குரார்ப்பண நிகழ்வு!

முல்லைத்தீவு, ஜூலை 30

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொக்காவில் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் புதிய கிராமம்

"திருமுறியான்பதி" கிராமத்தின் மீள் உருவாக்க அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன் தினம் மு.ப 10.30 மணியளவில் மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரனால் ஆரம்பித்துவைக்கப் பட்டது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள திருமுறுகண்டி மற்றும் இந்துபுரம் கிராமங்களில் 65 குடும்பங்கள் இருப்பதற்கு காணிகள் வீடுகள் இன்றி அல்லல்பட்டு வந்தனர்.

இவற்றை சீர் செய்திடும் நோக்கில் குறித்த குடும்பங்களுக்கு 0.5 ஏக்கர் வீதம் கொக்காவில் பகுதியில் காணி வழங்கப்பட்டுள்ளது. தற்போது 55 குடும்பங்கள்




தற்காலிக ஓலைக்குடில் அமைத்து வாழ்ந்து வருகின்றனர்.

இவர்கள் பௌதீக அடிப்படைக் கட்டுமானங்கள் எதுவுமின்றி வாழ்ந்துவரும் நிலையில் 'புனர்வாழ்வு புதுவாழ்வு' அமைப்பின் பூரண நிதிப் பங்களிப்பில் அரைநிர்மாண வீட்டுத்திட்டமும், அனைவருக்கும் மலசலகூடமும், 5 பொதுக் கிணறுகளும் அமைத்துக் கொடுக்கும் ஆரம்ப நிகழ்வாக இந்நிகழ்வு அமைந்தது.

இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் (நிர்வாகம்), மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குண பாலன் (காணி ), மாவட்ட பதில் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ஜெயபவாணி, ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் திருமதி. ப.ஜெயராணி, புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பின் தலைவர் கலாநிதி திரு. சர்வேஸ்வரன், திட்டமிடல் உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -88

# சிறுவர்களை மேம்படுத்த உதவும் வழிமுறைகளை...

**கணபதி சர்வானந்தா**

யாழ்பாண மாவட்டத்தில், தரம் 9இற்கு உட்பட்ட மாணவர்களுக்கு ஜுலை முதலாம் திகதி முதல் வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்றுகிழமைகளில் தனியார் வகுப்புக்களை நடத்துவதற்கு தடைவிதிக்கும் தீர்மானம் யாழ் மாவட்ட செயலகத்தினால் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது.

தனியார்கல்வி நிலையங்களில், சுகாதார உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதும், மாணவர்களுக்கு சமய சம்பந்தமாகவும், ஒழுக்கக்கல்வி, மற்றும் சமூகம் சம்பந்தமாகவும் 15நிமிடம் தொடக்கம் 30நிமிடம் வரை கற்பிக்க வேண்டும் என்றும் மாவட்டச் செயலர் குறிப்பிட்டிருக்கிறார்.

மேற்படி தீர்மானங்கள் தொடர்பாகப் பலர் பலவிதமான கருத்துகளை வெளியிட்டிருக்கின்றனர்.அதே வேளை குறித்த திட்டத்தை மறுபரிசீலனை செய்யுமாறு யாழ். வணிகர் கழகம், மாவட்ட செயலாளருக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது. மிகவும் ஆழமாகச் சிந்தித்து முடிவெடுக்க வேண்டியதொரு விடயத்தை மேலோட்டமாகப் பார்த்து மறுபரிசீலனை செய்யச் சொல்வது அத்துணை பொருத்தமற்றதொரு விடயம் என உளவியல் துறைசார்ந்த ஒருவர் தனது கருத்தை முன்வைத்திருக்கிறார். அது பற்றியும் நாம் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

யாழ்.மாவட்டச் செயலர் எடுத்த இம் முடிவினை வரவேற்றுப் பேசிய ஒரு சமூக சேவகர் அது பற்றிக் குறிப்பிடுகையில் “கடந்த 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதமளவில் பாராளுமன்ற உறுப்பினர் மரிக்காரினால் இது தொடர்பான யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளதை, தான் ஓர் இணையத்தளத்தில் படித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். அது தொடர்பாக அவர் மல்வத்தை மஹாநாயக்க தேரரைச் சந்தித்து விளக்கமளித்தபோதே அது பற்றி பாராளுமன்ற உறுப்பினர் சொல்லியுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தன்னால் முன்வைக்கப்பட்ட தனிப்பட்ட யோசனையைச் சட்டமாக்குவதற்கு சகல மதத் தலைவர்களினதும் ஒத்தழைப்பைப் பெற்றுக் கொள்வேன் என்றும் பா.உ சொல்லியுள்ளதாகவும் அந்த இணையத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்தும் யாழ்.மாவட்டச் செயலர் குறிப்பிட்டதைப்போல இல்லாது சமூகத்தில் 9 ஆண்டு வரையிலான மாணவர்களின் மத அறிவு வீழ்ச்சியடைந்து வருவதைச் சுட்டிக்காட்டியே “கிழமைக்கு ஒரு நாளாவது மாணவர்களின் மத அறிவை மேம்படுத்தப் பெற்றோர்கள் முனவரவேண்டும்” எனவும் அவர் கேட்டுக் கொண்டதாகவும் அக்கட்டுரையிலே ஒரு குறிப்பும் காணப்படுகிறது.

போதைவஸ்து பாவனைகளில் மாணவர்கள் பலர் ஈடுபட்டிருப்பது தெரியவந்தபோதே தனியார் வகுப்புகள் பற்றிகதையும் அதனுட்புகுந்ததாகவும் சொல்லப்படுகிறது. தனியார் வகுப்புக்குச் செல்லும் மாணவர்களை அவ் வகுப்புகளை நடத்தும் நிறுவனங்கள் அவர்களின் வருகையை எவ்வாறு ஒழுங்கமைக்கின்றன? அவர்களை எவ்வாறு கட்டுப்படுத்துகின்றன? போன்ற விடயங்களில் கவனம் செலுத்தத் தவறும் பட்சத்தில் மாணவர்கள் ஒன்று கூடிப் பேசுகின்றனர். இடிபாடுடைய கைவிடப்பட்ட கட்டடங்களைத் தேர்வு செய்து அதனுள் சென்று தொலைபேசிகளில் ஆபாசப் படங்களைப் பார்க்கின்றனர். அத்துடன் போதை வஸ்துகளுக்கும் அடிமையாகின்றனர். வாரத்தில் ஏழு நாட்களும் அவர்கள் பொது வெளியிலே நடமாடக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதால் அவர்கள் அவர் தம் பெற்றோர்களால் அவதானிக்கப்படுவதற்குரிய சந்தர்பங்கள் இல்லை என்றுதான் கூறவேண்டும்.

ஒரு மாணவன் போதைக்கு அடிமையாகிறான் என்பதை அவனைத் தொடர்ந்து அவதானிப்பதால் அறியலாம். ஆனால் வாரம் முழுவதும் அவன் கல்வியைக் காரணம் காட்டிப் பெற்றோர்களிடம் இருந்து விலகி இருப்பதால் அதற்கு இடமே இல்லாது போகிறது. எனவே வாரத்தில் ஒரு நாளாவது அவன் தன் குடும்பத்தோடு இருக்கக் கூடிய சந்தர்ப்பத்தை வழங்குவோமானால் அவனை அல்லது அவனது போக்கை அல்லது அவனில் ஏற்படும் மாற்றத்தை அவன் சார்ந்தவர்களால் அவதானிக்க முடியும் எனப் போதைத் தடுப்புப் பிரிவில் வளவாளராகக் கடமையாற்றும் ஓர் அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

இது போன்ற தடைகளை விதிக்கின்றபோது அது சார்ந்த பல விடயங்களை நாம் சிந்தித்தாக வேண்டும். அவர்கள் வகுப்புகள் அற்று வீடுகளில் இருக்கும்போது அவர்களிடை ஏற்படும் நேர முகாமைத்துவத்தை எவ்வாறு கடைப்பிடிக்கப் போகிறோம். அவர்கள் புலனை நல்வழிப்படுத்தக் கூடிய மாற்றீடுகளையும் செய்தாக வேண்டும். அவர்கள் எண்ணங்களை மேம்பாடுடைய செயற்திட்டங்களோடு ஒன்றித்துப்போக வழி வகுக்கும் செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும்.

அதிலே வெள்ளி, ஞாயிறுக் கிழமைகளில் சமய வகுப்புகளை நடத்த அது தொடர்பான அறநெறிப் பாடசாலைகள் போன்ற சமூகச் செயற்பாட்டு நிறுவனங்கள் தமது செயற்பாடுகளை விரிவு படுத்த வேண்டும்.

கிராமங்கள் தோறும் காணப்படுகின்ற சமூக சேவை நிறுவனங்களான “சன சமூக நிலையங்கள்” தமது செய்பாடுகளை மீள் ஆய்வுக்குட்படுத்தி மாணவர்களுக்கான நட்டவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் தமது பங்களிப்பைச் செய்யலாம். பல சனசமூக நிலையங்கள் தினசரிகளை வாசிக்க உதவும் வாசிப்பு மையங்களா மட்டும் செயற்படுவதை அவதானிக்க முடிகிறது. அதற்கப்பால் சென்று சமூகம் சார்ந்த மேம்பாட்டுச் செயற்பாடாகக் கருதும் மாணவர்களுக்கு அவர்களை வளம்படுத்த மேலதிக பெறுமதி சேர்க்கும் விளையாட்டு, இலக்கிய முயற்சிகள் போன்றவற்றையும் அதனுள் உள்வாங்குவது சிறப்பு.

இணுவில் அறிவாலயத்தின் செயல்பாடு ஒன்றினை இதில் குறிப்பிடலாம் என்று எண்ணுகிறேன். அவர்கள் மாணவர்களை மேம்படுத்த உதவும் ஒரு போட்டியினைச் சில மாதங்களுக்கு முன்னர் தொடங்கித் தொடர்ந்து தற்போது ஐந்தாவது மாத மாக அதனை நடத்திவருகின்றனர். மாதந்தோறும் வரும் பௌர்ணமி தினத்தில் முழு நிலாக் கலையரங்கு ஒன்றினையும் திருக்குறள் மனனப் போட்டியையும் நடத்தி வருகின்றனர். அதில் சராசரி 100 மாணவர்கள் பங்கு பற்றி வருகிறார்கள். அந்நிகழ்வு இணுவில் கிராமம் என்ற எல்லையைத் தாண்டித் தற்போது யாழ்.குடாநாடு என்று விரிவாக்கம் பெற்றிருக்கிறது. அத்துடன் ஞாயிறு தோறும் சிறுவர்களுக்கான திரைப்படங்களைத் தெரிவு செய்து திரையிடலை மேற்கொள்ளவிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. •

# இந்தவார ராசிபலன் 30.07.2023 - 04.08.2023

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - ஆடி 14
நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : திரயோதசி




தேவையற்ற நெருக்கடிகள் தேடி வரும். எனவே முக்கிய நபர்களைச் சந்திப்பது, பணம் சம்பந்தமாக கையெழுத்திடுவது போன்றவற்றை தள்ளி வைப்பது நல்லது. நீங்கள் எடுக்கும் முயற்சிகளில் எல்லாம் சிறப்பாக முடிந்தாலும், சிறு சிறு தடைகளும், தலைகாட்டும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் நிலை உயரப்பெறுவார்கள். சக ஊழியர்களின் வேலையில் ஈடுபட்டு பிரச்சினையில் சிக்கிக் கொள்ள வேண்டாம். குடும்பத்தில் பணம் சேரும்.




செயல்கள் அனைத்தும் சீர்மிகு பயன் தரும் சிறந்த வாரம் இது. வழக்கமான விஷயங்கள் சிறப்பாக நடைபெறும். சிலர் புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வர். உத்தியோகஸ்தர்கள் சிலருக்கு பதவி உயர்வு கிடைத்து, வேறு இடங்களுக்கு செல்வார்கள். சொந்தத் தொழிலில் உள்ளவர்கள், வாடிக்கையாளர்களின் தேவைகளை அவ்வப்போது நிறைவேற்றி வைப்பதால், பொருளாதாரம் மேம்படுவதோடு வாடிக்கையாளர்களின் நட்பும் பலப்படும்.குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சி நடைபெற சந்தர்ப்பம் உருவாகும்.




முயற்சிகளில் உற்சாகத்துடன் பாடுபட்டு வெற்றி பெறுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் பொறுமையுடனும், கவனமுடனும் பொறுப்புகளில் ஈடுபடுவது அவசியம். பணம் சம்பந்தப்பட்ட பொறுப்பில் உள்ளவர்கள் கணக்குகளில் கவனமாக இருப்பதுடன், கொடுக்கும் பொழுதும், வாங்கும் பொழுதும் சரிபாருங்கள். சொந்தத் தொழில் செய்பவர்கள், வாடிக்கையாளர்களுக்குப் பொருட்களைச் சேர்ப்பதில் சிறு தடைகளைச் சந்தித்தாலும், அவற்றை சமாளித்து விடுவீர்கள். குடும்பத்தில் குதூகலம் இருக்கும்.




உங்கள் முயற்சிகள் பலவும் வெற்றியைத் தேடித்தரும். எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணம் கைக்கு வந்து சேரும். உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு பதவி மாற்றம் ஏற்பட்டு, குடும்பத்துடன் சேர்ந்து வாழும் வாய்ப்பினைப் பெறுவர். சொந்தத் தொழிலில் லாபம் அதிகரிக்கும். கூட்டுத்தொழிலில் உள்ளவர்கள் புதிய மாற்றங்கள் செய்யும் பொழுது கூட்டாளிகளின் ஒப்புதலுடன் செய்வது நிர்வாகப் பிரச்சினைகளைத் தவிர்க்கும்.




அலுவலக அதிகாரிகளையும், நிதி சம்பந்தமானவர்களையும் சந்திக்கும் வாரம் இது. உத்தியோகஸ்தர்களுக்கு சிரமம் உண்டாகும் சூழ்நிலை அமையலாம். பொறுமையைக் கடைப்பிடியுங்கள். வேலைப்பளு அதிகரிக்கும். சகப் பணியாளர்களுடன் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. சக ஊழியரின் பணியையும் செய்யவேண டியதிருக்கும். சொந்தத் தொழிலில் எதிர்பார்க்கும் வருமானம் வந்துசேரும்.




உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு இருக்கும். பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்றவற்றால் மகிழ்ச்சி அடைவீர்கள். சொந்தத்தொழிலில் உள்ளவர்கள் சுறுசுறுப்பாக பணியாற்றுவர். தயாரிப்புப் பணியில் உள்ள இயந்திரங்களை பழுதுநீக்கும் பணியை மேற்கொள்வீர்கள். கூட்டுத்தொழிலில் கூட்டாளிகளின் ஒத்துழைப்பால் கூடுதல் லாபம் வந்துசேரும். மூலதனத்தை அதிகப்படுத்தி முன்னுக்கு வரக்கூடிய வாய்ப்புகள் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சியும், உற்சாகமும் சேர்ந்திருக்கும்.




முயற்சிகளில் வெற்றி காண தீவிரமாக உழைக்க வேண்டிய வாரம் இது. வழக்கமான உற்சாகமும், சுறுசுறுப்பும் கொண்டு செயல்களில் ஈடுபடுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் தங்களிடம் தரப்பட்டுள்ள பொறுப்புகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும். சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு, பணியாளர்களால் சிறு தொல்லை ஏற்படலாம். எனவே தொழிலை பலப்படுத்த வேண்டியது அவசியம். கூட்டுத் தொழிலில் உள்ளவர்கள் தங்கள் கூட்டாளிகளின் பிரச்சினைகளை நேரில் பேசித் தீர்த்துக் கொள்ளுங்கள்.




சிந்தனையும், செயலும் வலுப்படும் வாரம் இது. முன்னேற்றமான செயல்களைச் செய்வதில் ஏற்றமான பலன்களை அடைய முடியும். அரசாங்க வழிகளில் நன்மை உண்டாகும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் கடமைகளில் கவனமாகச் செயல்பட்டு, மேலதிகாரிகளின் பாராட்டினைப் பெறக்கூடும். ஒரு சிலருக்கு பதவி உயர்வுடன் வெளியூர் மாற்றம் வரலாம். சொந்தத் தொழிலில் உள்ளவர்கள் அயராத உழைப்பினால் முன்னேற்றம் காண்பர்.




உங்கள் முயற்சியால் இடையூறுகள் அகன்று இன்பம் கூடும். உத்தியோகஸ்தர்கள் சம்பள உயர்வு, பதவி ஏற்றம் பெற்று, வேறு இடங்களுக்கு மாறுதலாகிச் செல்வர். சொந்தத் தொழிலில் இதுவரை இருந்து வந்த மந்தமான நிலைமாறும். கூட்டுத் தொழில் செய்பவர்கள், தொழிலை மேம்படுத்தும் முயற்சிகளில் கவனம் செலுத்துவர். மூலதனத்தை அதிகப்படுத்தி தொழில் வளர்ச்சி பெற முயற்சிப்பீர்கள்.




எதிலும் சற்று கவனத்துடன் செயல்படுவது நல்லது. உத்தியோகஸ்தர்கள் பதவி உயர்வு, இடமாற்றம் பெறக் கடுமையான முயற்சி மேற்கொள்ள வேண்டியதிருக்கும். வெளியூர் பயணங்களில் அலுவலகம் சம்பந்தமான பொருட்களைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள். கூட்டுத்தொழிலில் உள்ளவர்கள், கூட்டாளியின் செயல்களையும், கணக்குகளையும், அவ்வப்போது சரிவர பராமரிப்பது நல்லது.





பயணங்களை தவிர்ப்பது நல்லது. உத்தியோகஸ்தர்களுக்கு, அலுவலகத்தில் எதிர்பார்க்கும் பண உதவி கிடைக்கும். சொந்தத் தொழில் புரிபவர்கள், அதிக லாபம் பெற்றாலும் செலவுகளும் இருக்கலாம். வாடிக்கையாளரிடம் சுமூகமாக நடந்து கொள்வது அவசியம். கூட்டுத்தொழிலில் உள்ளவர்கள் அவ்வப்போது தொழில் வளர்ச்சியைப் பற்றி கூட்டாளிகளுடன் ஆலோசிப்பது நல்லது. குடும்பத்தில் தன வரவும், செலவுகளும் இருக்கும். தடைபட்டிருந்த சுபநிகழ்ச்சிகள் நடைபெறும் .




அதிக வரவுகள் இருந்தாலும், செலவுகளும் இருக்கும். உத்தியோகஸ்தர்கள் பொறுப்புகளைக் கவனமாகச் செய்து மேலதிகாரிகளைத் திருப்திப்படுத்த முயற்சிப்பீர்கள். சொந்தத் தொழில் செய்பவர்கள், நல்ல வளர்ச்சியைக் காண்பார்கள். சிலர் வண்டி, வாகனம் முதலியவற்றில் முதலீடு செய்வர். கூட்டுத்தொழில் சிறப்பாக நடைபெறும். மூலதனத்தை அதிகரித்து வியாபாரத்தை அதிகப்படுத்துவீர்கள். புதிய கூட்டாளியைச் சேர்க்க முயலுவீர்கள். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். கணவன்-மனைவி இடையே ஒற்றுமை பலப்படும். பழைய கடன்கள் தொல்லையளித்தாலும் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.

# மணிப்பூர்: எல்லைப் பாதுகாப்பில் இந்திய அரசின் தவறுதல்



சென்னை மடல்
-பகவான் சிங்-





இந்திய நாடாளுமன்றத்தில் அண்மைக் காலங்களில் கண்டறியாத அளவில் கொந்தளிப்பு நிலவி வருகிறது. இதற்குக் காரணம், மணிப்பூர் பற்றி எரிவது மட்டுமல்ல. அந்தச் சிறிய வடகிழக்கு மாநிலத்தில் ஏற்பட்டுவரும் உயிரிழப்புகளையும் அழிவுகளையும் பார்த்தும் பிரதமர் நரேந்திர மோடி காத்து வரும் காதைப் பிளக்கும் மௌனம் தான் முக்கிய காரணம். புரிந்துகொள்ள முடியாத இந்த மௌனம், இந்தியாவின் தலைமை காட்டும் மன்னிக்கமுடியாத பாராமுகம் என்றே தோன்றுகிறது. இதை நான் கடந்த ஞாயிறன்று 'ஈழநாடு' கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன். மே 3ஆம் திகதியிலிருந்து நடைபெற்றுவரும் மணிப்பூர் வன்முறை குறித்துப் பிரதமர் தனது மௌனத்தைக் கலைத்தது, ஜூலை 19 அன்று இரண்டு பெண்கள் நிர்வாணமாக இழுத்துச் செல்லப்பட்ட காணொலி வெளியான பிறகே என்பதில் எனக்கேற்பட்ட அதிர்ச்சி பற்றியும் நான் அதில் கூறியிருந்தேன். இந்தக் கொடூரச் சம்பவம் தேசத்திற்கே அவமானம் என்றும், குற்றவாளிகள் தப்ப முடியாது என்றும் பிரதமர் பேசியிருந்தார். மத்தியிலும் மாநிலத்திலும் அரசு இயந்திரம் முழுவதும் பாஜகவின் கட்டுப்பாட்டில் இருந்தும் கூட, இரண்டு மாதங்களுக்கும் மேலாகத் தொடர்ந்து வரும் இந்த வன்முறையை ஏன் கட்டுப்படுத்த முடியவில்லை என்பது தான் இவரை விமர்சிப்பவர்கள் எழுப்பும் கேள்வி. அந்தக் கூக்குரல் இன்னும் உரத்து ஒலிக்கிறது. நாடாளுமன்ற அவைகளுக்குள் அது உயர்ந்து ஒலிக்கிறது. அங்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பிரதமரிடமிருந்து ஒரு விளக்கத்தை வேண்டிக் கதறிக்கொண்டிருக்கின்றனர்.

மணிப்பூர் என்ற சொல்லின் பொருளே மணிகளின் அதாவது விலையுயர்ந்த கற்களின் பூமி என்பதுதான். முடியாட்சியின் கீழ் இருந்த இந்த மாநிலம், 'இந்தியாவின் ஆபரணம்' என்ற பெயர் பெற்றதற்குக் காரணம், நீள்வட்ட வடிவிலான பள்ளத்தாக்கைச் சுற்றிலும் ஒன்பது மலைகள் அமைந்து, இயற்கையான ஓர் ஆபரணம்போல் இது இருப்பதுதான். இன்று இந்த 'ஆபரணம்', இனக் கலவரத்தால் தீயில் கருகி, குருதியில் குளித்து 140க்கும் மேலான உயிர்களை இழந்து, 300 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்து, 50 ஆயிரத்துக்கும் மேலானோர் இடம் பெயர்ந்து சின்னாபின்னமாகியிருக்கிறது. 2022இல் மணிப்பூரின் மொத்த மக்கள் தொகை 32 லட்சம் என்று கணிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் 140 கோடி மக்கள் தொகையில் இது 0.23 சதவிகிதம்தான்.

இந்தியாவின் மொத்த பரப்பளவான 3.287 மில்லிய ன் சதுர கிலோமீட்டரில் மணிப்பூர் வெறும் 22,327 சதுர கிலோமீட்டர்தான். ஆனால், அளவில் சிறியதாக இருப்பதால் டில்லியின் பாராமுகம் நியாயப்படுத்தப்பட்டு விடுமா? இந்தியாவின் பிற பகுதிகள் என்ன செய்கின்றன? பிரதமரைத் தவிர மற்ற ஆளுமைகள் என்ன செய்கிறார்கள்? தேசத்தையே நிர்வாணப்படுத்திய இந்தக் காணொலி வெளியாகும்வரை ஊடக முதலாளிகள் என்ன செய்துகொண்டிருந்தார்கள்? காணொலி வெளியான பிறகு அனைவரும் பொங்கி எழுகிறார்கள் ஆனால் நீண்ட காலமாக மணிப்பூரில் அரங்கேறி வந்த பாலியல் கொடுமைகள் மற்றும் கொலைகள் பற்றி யார் கண்டுகொண்டார்கள்? நாட்டின் வடகிழக்கு மூலையில் அமைந்திருக்கும் மணிப்பூரின் வடக்கில் நாகாலாந்து மாநிலமும் தெற்கில் மிஸோரம் மாநிலமும் மேற்கில் அஸ்ஸாமும் இருக்கின்றன.

மியன்மாரின்(பர்மா) இரண்டு பகுதிகளும் இதன் எல்லையில் அமைந்துள்ளன - கிழக்கில் சாகாயிங்க் பகுதி மற்றும் தெற்கில் சின் மாகாணமும் அமைந்திருக்கின்றன. இந்தியாவை நிலைகுலையச் செய்ய, சீனா குறி வைத்துள்ள எல்லை மாநிலங்களில் மணிப்பூர் இருக்கி றது. குகி மற்றும் நாகா பழங்குடியினர் வசிக்கும் மலைப்பகுதிகளில் வாழும் ஒரு நண்பருடனான எனது உரையாடல் குறித்துக் கடந்த ஞாயிறு கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன். தற்போது மோதல் ஏற்பட்டுள் ளது, மலைவாசிகளான குகி இனத்தவருக்கும் பள்ளத் தாக்கில் வசிக்கும் மெய்த்தி இனத்தவருக்கும் இடையில் தான். சிறுபான்மையினரான குகி இனத்தவரில் பெரும்பான்மையினர் கிறித்தவர்கள் பெரும்பான்மை யினரான மெய்த்தி இனத்தவர் இந்துக்கள். நாகாலாந்து வழியாக, சீனாவிடமிருந்து நவீன ஆயுதங்களைப் பெற்றுவருகின்றனர் குகி இனத்தவர். சீன ஆயுதங்கள், மியான்மர் வழியாகவும் குகி இனத்தவரை வந்தடைகின்றன.

## 'குகி' இனத்தவருக்கு சீன நிதி, ஆயுதம்?

இத்தனை கொடுமைகளுக்கு மத்தியி லும், இராணுவத்தை முகாம்களிலேயே இருக்கச் சொல்லி உத்தரவிட்டிருக்கும் அரசு, அமை தியை நிலைநாட்ட, மெய்த்தி இனத்தவர் நிரம்பிய மாநிலக் காவல் துறையிடம் பொறுப்பை ஒப்படைத் துள்ளது. இது முற்றிலும் அர்த்தமற்ற அணுகுமுறை. காரணம், காவல் துறை தாங்கள் சார்ந்த மெய்த்தி

இனத்தவருக்கு ஆதரவாகவும், குகி இனத்தவரிடம் கொடூரமாகவும் நடந்து கொள்கின்றனர். மாறாக, இராணுவத்திடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தால், நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருக்கலாம். இராணுவம் அழைக்கப்பட்டிருந்தால், பொதுமக்கள் உயிரிழப்புகள் துப்பாக்கிச் சூடுகளில் அதிகரிக்கும் என்றும் அரசு கருதியிருக்கலாம். ஆனால், இப்போது மட்டும் என்ன நடக்கிறது? இந்தியாவின் ஆபரணத்தின் நிலை மிகவும் சீரழிந்திருக்கிறது. மீண்டும் இதை இங்கு நான் குறிப்பிடுவது எதனால்? நான் மட்டுமல்லாமல், நாட்டைப் பற்றியும் சீனா மற்றும் விரோதப் போக்கு கொண்ட பிற அண்டை நாடுகளிலிருந்து வரும் பாதுகாப்பு அச்சுறுத்தல் பற்றியும் கவலை கொள்ளும் அனைத்து இந்தியர்களும் அடைந்துள்ள வேதனையும் கோபமும்தான் இதற்குக் காரணம். மத்திய அரசு, ஆபத்து நிறைந்த எல்லைப்பகுதிகளில் தேசிய நலனைப் பாதுகாக்கத் தவறி, அப்பாவி மக்களை எதிரிகளின் பிடியில் சிக்க விட்டு விடுகிறதே என்ற அச்சம்தான் இந்த வேதனைக்கும் கோபத்துக்கும் காரணம். அது மட்டுமல்ல. மேற்குலக ஊடகங்களும் 'மனித உரிமை' அமைப்புகளும் இந்தக் காணொளியை உடனடியாகக் கையிலெடுத்து, இந்தியாவையும் மோடியையும் கொச் சைப்படுத்தக் கிடைத்த வாய்ப்பைத் தவறவிடாமல் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றன. நிர்வாணமாகப் பெண்களை ஊர்வலமாக இழுத்துச் சென்றதையும், பாலியல் வன்கொடுமைச் செய்திகளையும் எடுத்த  ாண்டு, மணிப்பூரில் பெரும்பான்மை இந்துக்களுக்கும் சிறுபான்மை கிறிஸ்தவர்களுக்கும் இடையில் போர் என்றும் மத்திய, மாநில காவி அரசுகள் இந்துக்களான மெய்த்திகளை ஆதரிக்கின்றன என்றும் பிரச்சாரத்தைத் துவக்கிவிட்டன. ஆனால், குகி இனத்தவருக்குச் சீனாவிடமிருந்து நிதியும் நவீன ஆயுதங்களும் கிடைத்து வருவது பற்றியோ, பணத்தாசையில் அவர்கள் மலைப்பகுதிகளில் போதைச் செடிகளைப் பயிரிட்டு வருவது பற்றியோ அவை வாய் திறக்கவில்லை.

எனது 'ஈழநாடு' கட்டுரைகளில் நான் பல முறை குறிப்பிட்டதை இங்கு மீண்டும் கூறுகிறேன். மேற்குலகமும், அவர்களின் ஊடகங்களும் வெள்ளையர் ஆதிக்கம் செலுத்தும் சர்வதேச அமைப்புகளான ஐநா சபை, ஐநா மனித உரிமைகள் ஆணையம் (UNHRC) ஆகியவற்றுக்கு மூன்றாம் உலக நாடுகள், வளரும் நாடுகள், வளர்ச்சி குன்றிய நாடுகள் குறித்த எந்த அக்கறையும் இருந்ததில்லை. நமக்கு நாமே துணை. நமது கடின உழைப்பு, துணிச்சல் மூலமாகவே நாம் ஆற்றல் பெற வேண்டும். பொது தார்மீகம் மற்றும் சமூகப் பொறுப்பில் நம்மிடம் குறைபாடு உள்ளது. நமது சிறப்பான வரலாறு, பூர்வீகம் குறித்து நாம் பெருமை கொண்டாலும், ஒரு சமூகமாக நாம் இன்னும் முதிர்ச்சி அடையவில்லை. நீர்ச் சுழலில் சிக்கிக்கொண்டால், மரக் கட்டைபோல் மிதந்து கொண்டிருக்காமல், எதிர் நீச்சல் போட்டுக் கரையை அடைய முயலவேண்டும் என்பதை நாம் இன்னும் புரிந்து கொள்ளவில்லை. கொடுங்கோல் சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து நம்மைக் காப்பாற்ற இந்தியாவிடமும் உலக நாடுகளிடமும் கையேந்துவதை விடுத்து, நமது உரிமைகளுக்காக நமது வலிமையை ஒன்று திரட்டி நாம் போராடவேண்டும். இந்த முயற்சியில், நமது சுயநலமிக்க அரசியல் தலைவர்களை நம்புவதைத் தவிர்த்து, மக்கள் சமூக அமைப்புகளை வலுப்படுத்துவது மிகவும் அவசியம். இது கடினமான செயல்தான். ஆனால், அவசியமானது.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி பற்றியும், நீதி கோரி சர்வதேச தலையீடு நாடி மக்கள் முன்னெடுத்த போராட்டம் பற்றியும் படித்து நான் மிகவும் மன வேதனைக்குள்ளானேன். 'நீதி கோரி முல்லையில் திரண்டனர் தமிழர்கள்' என்ற தலைப்புடன் சனிக்கிழமை 'ஈழநாடு' இதழில், ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் துக்கத்துடன் ஊர்வலமாகச் செல்லும் படமொன்றைப் பார்த்தேன். முல்லைத் தீவிலும் ஈழத்தின் பிற பகுதிகளிலும் இந்தப் பேரணியில் பங்கு பெற்றவர்களில் பெரும்பாலானவர்கள், ஈழப்போருக்குப் பிறகு காணாமல்போன தங்கள் உறவினர்கள் குறித்த தகவலைப் பெற்றுத் தர, அரசிடம் பல ஆண்டுகளாகக் கோரிக்கையுடன் போராடிவருபவர்கள்தான். குடும்பத்தினரின் தனிப்பட்ட இழப்பைச் சந்திக்காத பலரும்கூடத் தங்கள் ஆதரவைக் காட்ட, இன்னும் அதிக அளவில் அங்கு கூடியிருந்தனர். இலங்கையின் பல பகுதிகளிலும் இந்த உணர்வை வலுப்படுத்தி, பொது மக்களை ஒருங்கிணைத்து, ஒரு சமூகக் கூட்டமைப்பை உருவாக்க நாம் முயல வேண்டும். இந்தக் கூட்டமைப்பில், முற்போக்கு மனப்பான்மை கொண்ட சிங்கள சகாக்களையும் அமைப்புகளையும்கூட உடன் சேர்த்துக்கொண்டால், இன்னும் விரைவாகவே நீதியும் சம உரிமையும் பெறும் நமது இலக்கை எட்டலாம். சிங்கள மக்கள் உணவு மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டைச் சந்தித்தபோதுதான் நடந்த காலிமுக போராட்டம்போல, ஒரு மனிதப் புதைகுழியைக் கண்டறியும்போதுதான் நாமும் இப்படிப்பட்ட ஒற்றுமைப் பேரணிகளுக்காக ஒன்று கூடவேண்டுமா? சிந்திப்பீர்!

## மனித புதைகுழி கண்டுதான் ஒன்றுகூடுவோமா?

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.



# 13 படும்பாடு



வீரகத்தி தனபாலசிங்கம்

இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பு 45 வருடங்களுக்கும் அதிகமான காலமாக நடைமுறையில் இருந்துவருகிறது. இதுவரையில் அதற்கு 21 திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. பதவியில் இருந்த ஜனாதிபதிகள் தங்களது அரசியல் நலன்களுக்கு வசதியான முறையில் கொண்டுவந்த திருத்தங்களே -அடிப்படையில் ஜனநாயக விரோதமான ஏற்பாடுகளைக் கொண்ட திருத்தங்களே அவற்றில் அதிகமானவை எனலாம்.

ஆனால், அத்தகைய ஜனநாயக விரோத திருத்தங்களையும் விட மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பரவலாக்கம் செய்வதை நோக்கமாகக் கொண்ட - ஜனநாயக பரிமாணத்தைக் கொண்ட 13 வது திருத்தமே மிகவும் நீண்டகாலமாக கடுமையான அரசியல் சர்ச்சைக்குரியதாக இருந்து வருகிறது.

1983 கறுப்பு ஜூலைக்கு பிறகு இலங்கை இனப்பிரச்னையில் இந்தியாவின் நேரடித் தலையீட்டை அடுத்து 1987 ஜூலை 29 இரு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட சமாதான உடன்படிக்கையின் பிரகாரம் மாகாணசபைகளை அமைப்பதற்கு வசதியாக அதே வருடம் நவம்பர் 14 பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அந்த திருத்தம் தற்போது 36 வருடங்களுக்கு பிறகு முன்னென்றும் இல்லாத அளவுக்கு பெரும் சர்ச்சைக்குள்ளாக்கப்படுகிறது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வந்த பிறகு இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கென்று கூறிக்கொண்டு முன்னெடுக்கும் முயற்சிகளே இதற்கு காரணமாகும்.

இந்த சர்ச்சை குறித்து ஆராய்வதற்கு முன்னதாக மாகாணசபைகளின் வரலாற்றை சுருக்கமாக நோக்குவது பொருத்தமாக இருக்கும்.

13வது திருத்தத்துடன் சேர்த்து மாகாணசபைகள் சட்டமும் நிறைவேற்றப்பட்டு முதன்முதலாக 1988 ஏப்ரில் 28 வடமத்திய, வடமேற்கு, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணசபைகளுக்கும் அடுத்து அதே வருடம் ஜூன் 2 மத்திய, தென் மற்றும் மேல் மாகாண சபைகளுக்கும் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

சமாதான உடன்படிக்கையின் பிரகாரம் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக1988 செப்டெம்பரில் இணைக்கப்பட்டன. ஒரே இணைந்த மாகாணத்துக்கு (இந்திய அமைதி காக்கும் படை நிலைகொண்டிருந்த காலப்பகுதியில்) 1988 நவம்பர் 19 தேர்தல் நடத்தப்பட்டது.

இந்தியப் படைகள் 1990 மார்ச் இறுதியில் இலங்கையில் இருந்து முற்றாக வாபஸ் பெறப்படுவதற்கு முன்னதாக இணைந்த மாகாணத்தின் முதலமைச்சர் அண்ணாமலை வரதராஜப்பெருமாள் ' ஒருதலைப்பட்ச சுதந்திர பிரகடனத்தை ' செய்துவிட்டு இந்தியாவுக்கு சென்ற பிறகு அன்றைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அந்த மாகாணசபையைக் கலைத்துவிட்டு நேரடி ஆட்சியைக் கொண்டுவந்தார். இணைந்த மாகாணம் 2008 வரை ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஆளுநர்களினாலேயே நிருவகிக்கப்பட்டுவந்தது.

இரு மாகாணங்களும் இணைக்கப்பட்டு ஒரு வருடத்துக்கு பிறகு இணைப்பு தொடரவேண்டுமா இல்லையா என்பதை தீர்மானிப்பதற்கு கிழக்கு மாகாணத்தில் மாத்திரம் சர்வஜனவாக்கெடுப்பொன்றை நடத்துவதற்கான ஏற்பாடு சமாதான உடன்படிக்கையில் இருந்தது.

அந்த வாக்கெடுப்பை முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவினாலோ அல்லது அவருக்கு பிறகு பதவிக்கு வந்த வேறு எந்த ஜனாதிபதியினாலுமோ நடத்தக்கூடியதாக இருக்கவில்லை. ஒவ்வொரு



வருடமும் இணைப்பை நீடிக்கும் பிரகடனங்களை ஜனாதிபதிகள் தொடர்ச்சியாக பிறப்பித்துக்கொண்டே வந்தனர். தற்காலிக இணைப்பு சுமார் இருபது வருடங்கள் நீடித்தது.

ஆனால், இணைப்பை துண்டித்து இரு மாகாணங்களுக்கும் தனித்தனியான மாகாணசபைகள் அமைக்கப்படவேண்டும் என்று கோரி ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) 2006 ஜூலை 14 தாக்கல்செய்த மூன்று மனுக்களை விசாரணைசெய்த உயர்நீதிமன்றம் இரு மாகாணங்களையும் இணைப்பதற்கு ஜனாதிபதி ஜெயவர்தன செய்த பிரகடனங்கள் செல்லுபடியற்றவை என்றும் சட்டரீதியாக வலுவற்றவை என்றும் கூறி 2006 அக்டோபர் 16 தீர்ப்பளித்தது. 2007 ஜனவரி முதலாம் திகதி வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் உத்தியோகபூர்வமாக பிரிக்கப்பட்டன. தனியான கிழக்கு மாகாணசபைக்கு 2008 மே மாதத்திலும் நீண்டகால இழுபறிக்கு பிறகு வடக்கு மாகாணசபைக்கு 2013 செப்டெம்பரிலும் தேர்தல்கள் நடத்தப்பட்டன.


மாகாணசபைகள் முறை அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களிலும் இரண்டாவது தடவையாக 1993 ஆம் ஆண்டிலும் மூன்றாவது தடவையாக 1999 ஆம் ஆண்டிலும் நான்காவது தடவையாக 2004 ஆம் ஆண்டிலும் தேர்தல்கள் நடத்தப்பட்டன. ஐந்தாவது தடவையாக 2008/09 ஆண்டுகளில் கிழக்கு மாகாணம் உட்பட எட்டு மாகாணங்களில் கட்டங்கட்டமாக தேர்தல்கள் நடத்தப்பட்டன.

ஆறாவது தடவையாகவும் 2012/14 ஆண்டுகளில் வடக்கு மாகாணம் ( 25 வருடங்களுக்கு பிறகு முதற்தடவையாக ) உட்பட எட்டு மாகாணங்களுக்கு கட்டங்கட்டமாக தேர்தல்கள் நடத்தப் பட்டன.

இறுதியாக தேர்தல்கள் நடந்த மாகாணசபைகளின் பதவிக்காலங்கள் முடிவடைந்த பிறகு தற்போது ஒன்பது மாகாணங்களும் ஐந்து வரு டங்களாக - அதிகாரப்பலவலாக்க கோட்பாட்டை அவம திக்கும் வகையில் - ஆளுநர் களின் நிருவாகத்தின் கீழ் இருந்துவருகின்றன.

மாகாணசபை முறையை எதிர்க்கும் அரசியல்வாதிகளும் ஊடகங்களும் தேர்தல் கள் மூலம் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் இல்லா மல் இவ்வளவு நீண்டகாலத்துக்கு மாகாணசபைகள் ஆளு நர்களினால் நிருவகிக்கப்பட்டு வருவதற்கு எதிராக நாட்டு மக்கள் கிளர்ந்தெழவில்லையே என்று கூறுவதையும் காண்கிறோம்.

உள்ளூராட்சி சபைகளைப் போன்று மாகாண சபைகளுக்கும் கலப்பு தேர்தல் முறையை ( விகிதாசாரப் பிரதி நிதித்துவமும் தொகுதி முறையும் ) அறிமுகம் செய்வதற்கு 'நல்லாட்சி ' அரசாங்க காலத்தில் 2017 செப்டெம்பரில் மாகாணசபை தேர்தல்கள் சட்டத்துக்கு ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டது. எல்லை நிர்ணயக்குழு 2018 ஆகஸ்டில் சமர்ப்பித்த அறிக்கையை பாராளுமன்றம் அங்கீகரிக்க மறுத்ததை அடுத்து மீளாய்வுக்கு பிரதமர் விக்கிரமசிங்க தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவும் சட்டத்தின் பிரகாரம் இரு மாதங்களுக்குள் அதன் அறிக் கையை ஜனாதிபதியிடம் கையளிக்கத் தவறியது. அதனால் மாகாண சபை தேர்தல்கள் ஐந்து வருடங்களாக நடத்தப் படாமல் இருக்கின்றன.



இத்தகையதொரு பின்புலத்திலேயே 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்த ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் முயற்சிகள் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் மீண்டும் வாதங்களை மூளவைத்திருக்கின்றன.

கடந்த வருட பிற்பகுதியில் பாராளுமன்றத்தில் பட்ஜெட் விவாதத்தின்போது இனப்பிரச்சினைக்கு இலங்கையின் 75 வது சுதந்திர தினத்துக்கு (2023 பெப்பவரி 4) முன்னதாக அரசியல் தீர்வைக் காணப்போவதாக அறிவித்த ஜனாதிபதி விக்கிரமசிங்க டிசம்பரிலும் இவ்வருடம் ஜனவரியிலும் இரு தடவைகள் பாராளுமன்ற கட்சிகளின் மகாநாட்டைக் கூட்டினார்.

எமது இனப்பிரச்சினை திகதி குறித்து தீர்வு காணக்கூடிய ஒரு விவகாரம் அல்ல என்பதை புரிந்துகொள்ளமுடியாத அளவுக்கு அவர் அரசியல் அனுபவம் இல்லாதவர் அல்ல என்றபோதிலும், அவ்வாறு தன்னை ஒரு பொருந்தாத் தன்மைக்கு ஏன் உட்படுத்தினார் என்பதை புரிந்து கொள்ளமுடியவில்லை.

பாராளுமன்ற கட்சிகளின் அந்த மகாநாட்டில் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல உடனடிப் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காணுமாறு தமிழ் அரசியல் கட்சிகள் முன்வைத்த கோரிக்கைகளுக்கு இணக்கத்தை ஜனாதிபதி தெரிவித்த போதிலும் அதில் முன்னேற்றம் காணமுடியாமல் போய்விட்டது. அதனால் மகாநாட்டில் தொடர்ந்தும் பங்கேற்பதில் பயனில்லை என்ற முடிவுக்கு அந்த கட்சிகள் வந்தன.

தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரை, விக்கிரமசிங்கவின் முயற்சிகளின் ஊடாக இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காணமுடியும் என்ற நம்பிக்கையில் அல்ல, அவரின் முயற்சிகளுக்கு ஒத்துழைக்கவில்லை என்ற பழி தங்களுக்கு வந்துவிடக்கூடாது என்பதற்காகவே மகாநாட்டில் பங்கேற்பதற்கு முன்வந்ததாக வெளிப்படையாகவே கூறத்தவறவில்லை.

இதற்கிடையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தைப்பொங்கல் விழாவில் உரையாற்றிய விக்கிரமசிங்க 13 வது திருத்தத்தை இரு வருடங்களில் முழுமையாக நடைமுறைப்படுத்த தனது அரசாங்கம் படிப்படியாக நடவடிக்கைகளை எடுக்கும் என்று அறிவித்தார்.

அவரின் அந்த ' தைப்பொங்கல் பிரகடனத்துக்கு' தென்னிலங்கையில் குறிப்பாக மகாசங்கம் மற்றும் சிங்கள பௌத்த தேசியவாத சக்திகளிடம் இருந்து கடுமையான எதிர்ப்பு கிளம்பியது. முன்னைய ஜனாதிபதிகளில் எவருமே 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த ஒருபோதும் முயற்சிக்கவில்லை என்பதால் விக்கிரமசிங்கவும் அவர்களைப் போன்றே நடந்துகொள்ள வேண்டும் என்று பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்கள் கூட்டாக அவருக்கு கடிதம் எழுதினர்.

அந்த திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் இலங்கை முன்னென்றும் காணாத மிகப்பெரிய இனக்கலவரம் மூளும் என்ற விமல் வீரவன்ச, சரத் வீரசேகர போன்ற கடும்போக்கு சிங்கள தேசியவாத அரசியல்வாதிகள் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் எச்சரிக்கை செய்தனர்.

கிளம்பிய எதிர்ப்பைக் கண்டு பின்வாங்கிய ஜனாதிபதி சுதந்திர தினத்தன்று மாலை நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சி மூலம் ஆற்றிய உரையிலும் பெப்ரவரி 8 பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத்து நிகழ்த்திய கொள்கை விளக்க உரையிலும் 13 வது திருத்தத்தை பற்றி வாய்திறக்கவேயில்லை.

கொள்கைவிளக்க உரையை அவர் நிகழ்த்திக்கொண்டிருந்தபோது பாராளுமன்றத்துக்கு அண்மையாக கூடி ஆர்ப்பாட்டத்தில் இறங்கிய பிக்குமார் 13 வது திருத்தத்தின் பிரதிகளை தீயிட்டுக் கொளுத்தியதைக் கண்டோம்.

அரசியலமைப்பில் ஏற்கெனவே இருப்பதை நடைமுறைப்படுத்த வேண்டிய கடமை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற முறையில் தனக்கு இருப்பதாக ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்று கூட்டத்தில் கூறிய விக்கிரமசிங்க ஒன்றில் 13 திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் அல்லது அதை இல்லாதொழிக்கவேண்டும் என்று அதை எதிர்க்கும் சிங்கள அரசியல்வாதிகளைப் பார்த்துக் கூறினார். அந்த திருத்தத்தை இல்லாதொழிக்க பாராளுமன்ற உறுப்பினர்களில் எவராவது அரசியலமைப்புக்கான 22 வது திருத்தச்சட்ட மூலத்தை தனிநபர் பிரேரணையாகக் கொண்டுவரலாம் என்று யோசனை சொல்லிக்கொடுத்தார்.

(மறுபக்கம் பார்க்க)

சிங்கள தேசியவாத சக்திகளைப் பொறுத்தவரை, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கு குறிப்பாக 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு விக்கிரமசிங்கவுக்கு மக்கள் ஆணை கிடையாது என்பதும் அவ்வாறு அவர் செய்யவிரும்பினால் ஜனாதிபதி தேர்தல் ஒன்றில் மக்களிடம் புதிய ஆணையைப் பெறவேண்டும் என்பதுமே நிலைப்பாடாக இருக்கிறது.

கடந்த வாரம் கூட ராஜபக்சாக்களின் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவாசம் நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும் பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும் மக்களுக்கு நிவாரணங்களை அளிக்கவுமே விக்கிரமசிங்கவை தாங்கள் ஜனாதிபதியாக பாராளுமன்றத்தின் மூலம் தெரிவுசெய்ததாக கூறியிருந்தார்.

சிங்கள பெரும்பான்மையினவாத அணிதிரட்டலின் மூலமாக ராஜபக்சாக்கள் கட்டியெழுப்பிய ஒரு கட்சியின் பாராளுமன்ற ஆதரவில் தனது ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கும் ஜனாதிபதி எந்த நம்பிக்கையில் இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வைக்காணும் முயற்சிகளை முன்னெடுக்கத் தைரியம் கொண்டார் என்பது புரியவில்லை.

ஜெயவர்தனவும் அவருக்கு பிறகு பதவிக்கு வந்த சகல ஜனாதிபதிகளும் வெறுமனே மாகாண சபைகளுக்கு தேர்தல்களை நடத்தினார்களே தவிர 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி மாகாணசபைகள் முறையாக இயங்குவதை உறுதிப்படுத்த ஒருபோதும் முன்வந்ததில்லை. மாறாக இந்திய -- இலங்கை சமாதான உடன்படிக்கையின் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதை உறுதிசெய்வதில்தான் அவர்கள் அக்கறையாக இருந்தார்கள் எனலாம்.

ஜனாதிபதி பதவியில் இருந்து இறங்கிய பின்னர், ராஜீவ் காந்தி பற்றி அவரின் நெருங்கிய சகாவும் முன்னாள் மத்திய அமைச்சருமான மணிசங்கர் ஐயர் எழுதிய நூல் ஒன்றின் வெளியீட்டு வைபவத்தில் கலந்துகொள்ளச் சென்ற முன்னாள் ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்க அதை வெளிப்படையாகவே ஒத்துக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இந்திய அரசாங்கத்தினால் கூட இலங்கை ஆட்சியாளர்களை வழிக்குக் கொண்டுவர முடியவில்லை என்பதே உண்மையாகும். இந்தியாவையும் கடந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களின் வாயிலாக அந்த திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை சர்வதேச சமூகத்தின் ஒரு வலியுறுத்தலாக மாறிய பின்னரும் கூட இலங்கை அரசாங்கங்கள் அவற்றின் போக்கை மாற்றவில்லை.

அதேவேளை , முன்னைய ஜனாதிபதிகளைப் போலன்றி 13 வது திருத்தத்தின் நடைமுறைப்படுத்தல் தொடர்பில் கூடுதலானளவுக்கு வெளிப்படையாகப் பேசுகின்ற விக்கிரமசிங்கவினால் கூட நிலைவரத்தில் நேர்மறையான ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியாமல் இருக்கிறது. தனது முயற்சிகளுக்கு எதிரான சிங்கள தேசியவாத சக்திகளின் நெருக்குதல்களின் விளைவாக அவர் தனது முன்னைய நிலைப்பாடுகளில் தளர்வை ஏற்படுத்தவேண்டியிருக்கிறது. அடுத்த ஜனாதிபதி தேர்தலை குறிவைத்து வியூகங்களை வகுக்கும் அவர் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் பெரிய நகர்வுகளைச் செய்வது சாத்தியமில்லை என்பது தெளிவானது.

அண்மையில் உத்தியோகபூர்வ விஜயமாக இந்தியாவுக்கு செல்வதற்கு முன்னதாக ஜூலை 18 தமிழ்க்கட்சிகளின் தலைவர்களை அழைத்துப் பேசிய விக்கிரமசிங்க தேசிய நல்லிணக்கம் மற்றும் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி குறித்த 16 பக்கங்கள் கொண்ட திட்டத்தை சமர்ப்பித்து பொலிஸ் அதிகாரங்கள் இல்லாமல் 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் யோசனையை முன்வைத்தார். அதை திட்டவட்டமாக நிராகரித்த தமிழ்க்கட்சிகள் ‘அபிவிருத்திக்கும் அதிகாரப்பரவலாக்கலுக்குமான’ அவரது யோசனையை ‘இன்னொரு வெற்று உறுதிமொழி’ என்று வர்ணித்தன.

அரசியலமைப்பில் ஏற்கெனவே இருப்பதை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தயாராயில்லையானால், 13 வது திருத்தத்துக்கு அப்பால் செல்வதற்கும் அர்த்தபுஷ்டியான அதிகாரப் பரவலாக்கத்தை செய்வதற்கும் அதற்கு அரசியல் விருப்பமோ துணிவாற்றலோ இல்லை என்பதே உண்மையாகும் என்றும் தமிழ்க்கட்சிகள் சுட்டிக்காட்டின. தங்களால் இனிமேலும் ஏமாறமுடியாது என்று இரா. சம்பந்தன் அவர்கள் நேரடியாகவே ஜனாதிபதியிடம் கூறவும் தவறவில்லை. அதனால் ஆத்திரமடைந்த அவர் தன்னுடன் பேசவிரும்பினால் பேசலாம் அல்லது வெளியேறிச் செல்லலாம் என்று ஆவேசமாகக் கூறியதாகவும் செய்திகள் வெளியாகின.

பொலிஸ் அதிகாரம் இல்லாத 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் யோசனையை தமிழ்க்கட்சிகளுக்கு முன்வைத்ததன் மூலம் தற்போதைய சூழ்நிலையில் தன்னால் செய்யக்கூடியதாக இருப்பதைப் பற்றிய செய்தியை தனது புதுடில்லிக்கு விஜயத்துக்கு முன்னதாக இந்திய அரசாங்கத்துக்கு ஜனாதிபதி தெரியப்படுத்தினார்.

புதுடில்லியில் ஹைதராபாத் இல்லத்தில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்திய பிரதமர் நரேந்திர மோடி அவருடன் கூட்டாக நடத்திய செய்தியாளர்கள் மகாநாட்டில் எமது இனப்பிரச்சினை மற்றும் உத்தேச





தீர்வு குறித்து பின்வருமாறு கூறினார்.

“தமிழர்களின் அபிலாசைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றும் என்றும் சமத்துவம், நீதி மற்றும் சமாதானத்துக்கான செயன்முறையை முன்னெடுக்கும் என்றும் 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி மாகாணசபை தேர்தல்களை நடத்துவதுடன் இலங்கை தமிழ்ச் சமூகத்தின் கௌரவத்துடனும் கண்ணியத்துடனுமான வாழ்வை உறுதிப்படுத்தும் என்றும் நம்புகிறோம்.”

அதற்கு பதிலளித்த விக்கிரமசிங்க இந்தியாவுக்கு வருவதற்கு முன்னதாக அந்த வாரம் தன்னால் முன்வைக்கப்பட்ட பரவலாக்கம் மற்றும் வடக்கு அபிவிருத்தி திட்டத்தின் பல்வேறு அம்சங்கள் ஊடாக நல்லிணக்கத்தையும் அதிகாரப்பகிர்வையும் முன்னெடுப்பதற்கான யோசனைகளை இந்திய பிரதமருடன் பகிர்ந்துகொண்டதாக கூறினார்.

**1983 கறுப்பு ஜூலைக்கு பிறகு இலங்கை இனப்பிரச்னையில் இந்தியாவின் நேரடித் தலையீட்டை அடுத்து 1987 ஜூலை 29 இரு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட சமாதான உடன்படிக்கையின் பிரகாரம் மாகாணசபைகளை அமைப்பதற்கு வசதியாக அதேவருடம் நவம்பர் 14 பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அந்த திருத்தம் தற்போது 36 வருடங்களுக்கு பிறகு முன்னென்றும் இல்லாத அளவுக்கு பெரும் சர்ச்சைக்குள்ளாக்கப்படுகிறது.**

“இந்த முன்னெடுப்புகள் தொடர்பில் கருத்தொருமிப்பைக் கண்டு தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்துவதை நோக்கி பணியாற்றுவதற்கு பாராளுமன்றத்தில் உள்ள சகல கட்சிகளினதும் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்திருக்கிறேன். அதற்கு பிறகு பொருத்தமான அரசாங்கம் பாராளுமன்றத்துக்கு கொண்டுவரும் “ என்றும் அவர் கூறினார். இந்த முயற்சிகளுக்கான தனது ஒருமைப்பாட்டையும் நல்லெண்ணத்தையும் பிரதமர் மோடி வெளிப்படுத்தியதாக அவர் முன்னிலையில் செய்தியாளர்களுக்கு விக்கிரமசிங்க தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இரு தலைவர்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையை தொடர்ந்து விசேட செய்தியாளர்கள் மகாநாட்டில் உரையாற்றிய இந்திய வெளியுறவு செயலாளர் வினாய் குவாட்ரா தமிழ்ச் சமூகத்தின் அபிலாசைகளை, ஐக்கியப்பட்டதும் சுபிட்சமுடையதுமான இலங்கை கட்டமைப்புக்குள் சமத்துவம்,நீதி மற்றும் சுயமரியாதைக்கான அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய ஒரு அரசியல் தீர்வை இந்தியா தொடர்ந்து எதிர்பார்க்கிறது என்று குறிப்பிட்டார்.

“அர்த்தபுஷ்டியான அதிகாரப்பரவலாக்கமும் 13 வது திருத்தத்தின் முழுமையான நடைமுறைப்படுத்தலும் இலங்கையில் நல்லிணக்கச் செயன்முறையை வசதிப்படுத்துவதற்கு அவசியமான அம்சங்கள் என்ற எமது நம்பிக்கையை பிரதமர் வெளிப்படுத்தினார். இதுவே எமது உறுதியான நிலைப்பாடாக இருந்துவருகிறது. இரு தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பின்போது இது முன்வைக்கப்பட்டது “ என்றும் வெளியுறவு செயலாளர் கூறியிருந்தார்.

ஆனால், விக்கிரமசிங்கவின் விஜயத்தின்போது வெளியிடப்பட்ட எந்தவொரு எழுத்துமூல ஆவணத்திலும் இந்த விடயங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

இதை சுட்டிக்காட்டி ஆசிரிய தலையங்கம் தீட்டிய இந்தியாவின் முக்கியமான தேசிய ஆங்கிலப் பத்திரிகைகளில் ஒன்றான ‘தி இந்து’ விக்கிரமசிங்க டில்லியில் வெளியிட்ட கருத்துக்களிலோ அல்லது கூட்டு அறிக்கையிலோ இந்த முக்கிய விடயங்கள் தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படாதமையே இரு தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பின் மூலமான முக்கியமான செய்தியாக இருக்கக்கூடும் என்று கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளுக்குள் தமிழர் பிரச்சினை தொடர்பிலான வரலாற்று ரீதியான அக்கறைகளை இந்திய அரசாங்கம் கொண்டுவருவதை இனிமேலும் கொழும்பு வரவேற்கப் போவதில்லை என்பதே பிரதமர் மோடிக்கும் ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு கூறும் மிகப் பெரிய செய்தி என்று அந்த பத்திரிகை குறிப்பிட்டிருக்கிறது.

அதேவேளை, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடை யிலான எதிர்காலத்துக்கான எந்தவொரு நோக்கும் இனப் பிரச்சினைக்கு இணக்கமான ஒரு தீர்வை உள்ளடக்காத பட்சத்தில் பூரணத்துவமானதாக இருக்கப்போவதில்லை என்று கூறிவைக்கவும் ‘இந்து’ தவறவில்லை.

இதை வெறுமனே ஒரு பத்திரிகையின் கருத்தாக மாத்திரம் நோக்கிவிடமுடியாது. தமிழர் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் இந்தியாவிடம் இருந்து இனிமேலும் நெருக்குதல்களோ அல்லது நல்லெண்ண அடிப்படையிலான வேண்டுகோள்களோ வருவதை இலங்கை ஆட்சியாளர்கள் இனிமேல் விரும்பமாட்டார்கள் என்ற ஒரு கசப்பான புரிதல் இந்திய அரசின் உயர்மட்டத்தில் ஏற்படத் தொடங்கியிருப்பதன் ஒரு பிரதிபலிப்பாகவே நோக்கவேண்டியிருக்கிறது.

இலங்கை திரும்பிய கையோடு கடந்த வாரம் ஜனாதிபதி விக்கிரமசிங்க பாராளுமன்ற கட்சிகளின் மகாநாட்டைக் கூட்டினார். தேசிய நல்லிணக்கத் திட்டத்தையும் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி திட்டத்தையும் ஆராய்ந்து கருத்தொருமிப்புக்கு வருவதே மகாநாட்டின் நோக்கமாக கூறப்பட்டாலும் 13 வது திருத்தம் தொடர்பில் தற்போது தோன்றியுள்ள சர்ச்சையை கையாளுவதே அதன் உண்மையான நோக்கமாகும்.

அந்த திருத்தத்தை அதுவும் மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்கள் நீங்கலாக நடைமுறைப் படுத்துவதாக இருந்தாலும் பாராளுமன்றத்தின் ஆதரவுடன்தான் தன்னால் செய்யமுடியும் என்பதே மகாநாட்டில் ஜனாதிபதி வெளிப்டுத்திய கருத்துக்களின் மூலமான செய்தியாகும்.

அதேவேளை தமிழ்க்கட்சிகள் உட்பட எதிரணிக்கட்சிகளின் தலைவர்கள் மாகாணசபை தேர்தல்களை விரைவில் நடத்தவேண்டும் என்று விடுத்த கோரிக்கை ஜனாதிபதிக்கு ஆவேசத்தை ஏற்படுத்தியது.

ஒன்றில் அதிகாரப் பரவலாக்கத்தைப் பற்றி பேசவேண்டும் அல்லது மாகாணசபை தேர்தல்களைப் பற்றி பேசவேண்டும். இரண்டையும் ஒன்றாக பேசமுடியாது என்பதே அவரது நிலைப்பாடாக இருக்கிறது. உண்மையில் இதை புரிந்துகொள்ள முடியவில்லை. ஜனாதிபதி தேர்தலை தவிர வேறு எந்த தேர்தலையும் பற்றி அவர் சிந்திக்கத் தயாராக இல்லை.

இந்த நிகழ்வுப்போக்குகள் எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாக நோக்கும்போது 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது மாத்திரமல்ல, பொலிஸ் அதிகாரம் உட்பட பல அதிகாரங்கள் இல்லாமல் கூட அதை நடைமுறைப்படுத்துவதும் பிரச்சினையாக உருவெடுத்திருக்கிறது.

கறுப்பு ஜூலைக்கு பிறகு 40 வருடங்கள் கடந்த நிலையில் இலங்கையில் அதிகாரப்பரவலாக்கத்துக்கான ஒரேயொரு சட்டரீதியான ஏற்பாடாக இருந்துவரும் அந்த திருத்தத்தின் இலட்சணம் இவ்வாறாக இருக்கிறது.

தமிழர்களுக்கு எவற்றைக் கொடுக்கக்கூடாது என்பதில் தென்னிலங்கையில் சிங்கள அரசியல் சமுதாயத்திற்குள் ( பல்வேறு முரண்பாடுகளுக்கு மத்தியிலும் ) ஒரு கருத்தொருமிப்பு காணப்படுகிறது. ஆனால் தமிழ் மக்களுக்கு எது தேவை என்பதை கேட்பதில் ஒருமித்து நிற்க முடியாததாக தமிழ் அரசியல் சமுதாயம் சிதறுண்டு காணப்படுகிறது. இந்தியாவினாலும் கூட எதையும் செய்ய இயலாமல் போயிருக்கும் நிலையில், மிகவும் பலவீனப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் சமுதாயத்துக்கு இருக்கக் கூடிய மாற்று வழி என்ன என்ற கேள்வி முன்னால் வந்து அச்சுறுத்துகிறது.

# தேர்தலுக்காக 13ஐ கையாளும் தென்னிலங்கை அரசியல்வாதிகள்!



**கந்தையா அருந்தவபாலன்**

தமிழ் மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகள் தொடர்பாக இலங்கையில் ஆட்சியிலிருந்த, இருக்கின்ற, இருக்க விரும்பும் எல்லா அரசியல் தலைவர்களின் நிலைப்பாடும் ஒரே மாதிரியானவை. இந்நாடு பௌத்த சிங்களவருக்குரியது, அவர்களைச் சுற்றிப் படரும் கொடிகளே ஏனைய இனத்தவர்கள், அதற்கமைய அவர்களின் விருப்பத்துக்கு அமைவாக மற்றைய இனத்தவர்கள் வாழவேண்டும் என்பதே அவர்களின் அந்நிலைப்பாடாகும். இந்நிலைப்பாட்டை சிலர் வெளிப்படையாகவே சொல்வார்கள். ஏனையோர் வெளியே சொல்லாமல் அரச நடவடிக்கைகளில் கையாளுவர். அதேவேளை சூழ்நிலைகளுக்கேற்பவும் தமது தேவைகளுக்காகவும் தமிழ் மக்களின் கோரிக்கைகள் தொடர்பாக தாராளவாதிகளாக தம்மைப் பேச்சளவில் வெளிப்படுத்தவும் அவர்கள் ஒருபோதும் தயங்கமாட்டார்கள். தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் உடன்படிக்கையும் செய்து கொள்வார்கள். ஆனால் சொன்ன வார்த்தைகளைக் காப்பாற்ற வேண்டுமென்றோ செய்த உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமென்றோ அவர்கள் ஒருபோதும் எண்ணுவதில்லை. இதற்கான எடுத்துக்காட்டுகள்தான் 13 பிளஸ்சும், 13ஆம் திருத்தமும். தமிழ் மக்கள் தமக்கான உரிமைகளைக் கோரும்போதெல்லாம் தாமே உருவாக்கிக்கொண்ட அரசியலமைப்பு அதற்கு இடம் தராது எனச் சுலபமாகத் தட்டிக் களிப்போர் அதே அரசியலமைப்பிலுள்ள 13ஆம் திருத்தத்தை 35 ஆண்டுகள் கழிந்த பின்னர் கூட நடைமுறைப்படுத்தாது இருப்பது ஓர் அரசியலமைப்பு மீறல் என்பதை ஏற்றுக்கொள்ளவும் தயாராகவில்லை. அரசியலமைப்பின் 6ஆவது திருத்த்தை மறுதலித்து பிரிவினை பேசும் ஒருவர் மீது குற்றவியல் மற்றும் பயங்கரவாத வழக்குகளைத் தொடுக்கும் காவல் துறை அதே அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை மறுதலிப்போர் மீது எவ்வித நடவடிக்கைகளையும் எடுப்பதில்லை. பாராளுமன்றத்தினால் ஆக்கப்படும் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் ஆட்சித் துறையின் நிறைவேற்றுத் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி நாட்டின் அதியுயர் சட்டமான அரசியலமைப்பை நடைமுறைப் படுத்தவேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளார். அதேபோலவே பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப் பட்ட சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒத்துழைப்பை வழங்க வேண்டியது அம்மன்றத்திலுள்ள அனைத்து உறுப்பினர்களதும் கடப்பாடாகும். அந்தவகையில் அவ்வரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்திலுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஜனாதிபதியும் பாராளுமன்றமும் எடுப்பதற்குப் பதிலாக அது தொடர்பாக பேச்சுவார்த்தை என்ற நாடகம் மீண்டும் ஒருமுறை அரங்கேற்றப்படுவது ஏன்? இந்நாடகத்தின் இயக்குநர், மற்றும் நாடகத்தில் பங்கெடுக்கும், பங்கெடுக்காமல் தவிர்க்கும் பாத்திரங்களான கட்சிகளின் நோக்கங்கள் யாவை?

பேச்சுவார்த்தை என்ற நாடகத்தின் இயக்குநரான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைப் பொறுத்தமட்டில் இதன் மூலம் பல காய்களைப் பறிக்க விரும்புகிறார். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தனதுவெற்றியை உறுதி செய்யும் நோக்கில் ஒவ்வொரு காய்களையும் நகர்த்தி வரும் அவர் சிங்களவாக்குகளை இழக்காது தமிழ் வாக்குகளையும் அறுவடை செய்ய நினைப்பது அதில் ஒன்று. பொதுஜனபெரமுனவில் தங்கி நின்று ஆட்சி செய்யும் ரணில், தான் விரும்பினாலும் கூட 13 தொடர்பாக ஒரு அங்குலமேனும் முன்னோக்கி நகர்த்த முடியாது என்று தெரிந்திருந்தும் இந் நாடகத்தின் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்க விரும்பும் ஒரே தலைவன் தான்தான் என்ற மாய விம்பத்தை ஏற்படுத்த விரும்புவது. மற்றது சஜித்தை இக்கட்டில் தள்ளிவிடுவது. சென்ற ஜனாதிபதித் தேர்தலைத்தவிர ஏனைய எல்லா ஜனாதிபதித் தேர்தல்களிலும் தமிழ் மக்களின் வாக்குகள் நேராகவோ அல்லது எதிராகவோ வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாக இருந்து வந்துள்ளன. அடுத்துவரும் தேர்தலில் இவ்வாக்குகள் இன்னும் பெறுமதி உடையவையாகவே இருக்கப் போகின்றன. இந்நிலையில் பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் சென்ற ஜனாதிபதித் தேர்தல் தொடக்கம் இன்றுவரை சஜித் பக்கத்தில்தான் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் வாக்குகளை அதிகளவில் பெற்றுத் தரக்கூடிய தமிழரசுக் கட்சி சஜித்துக்கு ஆதரவான போக்கையே இன்றுவரையும் கடைப் பிடித்து வருகிறது. ரணில் பொதுஜன பெரமுனவின் அரவணைப்பில் இருக்கும்வரை இத்தமிழ்க்கட்சிகளின் ஆதரவை ரணில் எதிர்பார்க்க முடியாது. எனவே இப்பேச்சு வார்த்தை என்ற நாடகத்தின் மூலம் ஒன்றில் தமிழ் மக்களின் வாக்குகளைத் தான் பெறுவது இல்லையேல் அவ்வாக்குகளை சஜித்துக்குச் செல்லாமல் தடுப்பதுவே ரணிலின் தந்திரம். ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின்தெரிவு இரண்டுதான். ஒன்று தாம் நம்பும் ஒருவருக்கு வாக்களிப்பது. மற்றது யாருக்கும் வாக்களிக்காதுவிடுவது. பேச்சுவார்த்தையில் 13 க்கு எதிரான நிலைப்பாட்டை சஜித் தரப்பை வெளிப்படுத்தச் செய்வதன் மூலம் தமிழ் மக்களின் வாக்குகளை அத்தரப்புக்குக் கிடைக்காமல் செய்வது ரணிலின் நோக்கமாக இருக்கலாம். அதாவது தன்னைத் தாராளவாதியாகக் காட்டுவது, எதிர்க்கட்சிகளின் மீது குறிப்பாக சஜித் மீது எதிர்மறையான விம்பத்தை உருவாக்குவது, காலங் கடத்துவது என்பன ரணிலின் நோக்கமாகும். தன்னை நடுநிலைவாதியாகக் காட்டிக் கொண்டு அதேநேரம் பொதுஜன பெரமுன மூலம் பௌத்த சிங்கள தேசியவாதிகளின் வாக்குகளையும் பெறுவதே ரணிலின் நோக்கமாகும். சமகாலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கத் தான் முயல்வதாகவும் இந்தியாவுக்கும் மேற்குலகுக்கும் போக்குக் காட்டுவது ரணிலின் மற்றொரு நோக்காகும். மேலும் எதிர்க்கட்சிகளின் கவனத்தை இதன்மீது திருப்புவதன் மூலம் எரிந்து கொண்டிருக்கும் ஏனைய பிரச்சினைகளின் மீதான விமர்சனங்களைக் கட்டுப் படுத்தித் தன்மீதான மக்களின் செல்வாக்கைத் தக்க வைக்க முடியும் என ரணில் நம்பக்கூடும். இவ்வகையில் தற்போது எந்த விளைவையும் தராத பேச்சுவார்த்தை என்ற புதிய அரசியல் களத்தை ரணில் திறந்து வைத்து தனது நிலையை ரணில் உறுதிபடுத்த விரும்புகிறார் என ஊகிக்கமுடியும்.

எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டியிடுவார் என்று உறுதியாகக் கூறமுடியும். அவருக்கு இரண்டு தெரிவுகள் உள்ளன. ஒன்று பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் களமிறங்குவது. மற்றது பொதுஜன பெரமுனவின் கணிசமான உறுப்பினர்களையும் ஐக்கிய மக்கள் சக்தியின் கணிசமானஉறுப்பினர்களையும் பிரித்தெடுத்து பிற உதிரிக் கட்சிகளின் ஆதரவுடன் களமிறங்குவது. தற்போதைய நிலையில் ரணிலுக்கு எதிரான போட்டியாளர்களில் சஜித்தே முன்னிலையில் உள்ளார். அதனால் சஜித்தைப் பலவீனமாக்கும் உத்திகளை ரணில் கையாளத் தொடங்கி விட்டார். ஏலவே ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களைத் தன்வசப்படுத்தும் காரியங்களைத் தொடங்கிவிட்டார். அவ்வுறுப்பினர்களில் கணிசமானோர் பழைய ஐக்கிய தேசியக் கட்சியின் விசுவாசிகள் என்பதற்கு மேலாக சஜித் பலமான ஒரு தலைவரல்லர் என்ற கருத்தும் அவரது கட்சி உறுப்பினர்களிடம் பரவலாக்க் காணப்படுகிறது. இதனால் ரணிலின் வெற்றி வாய்ப்புகள் பிரகாசமாகும்போது ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து மட்டுமல்ல ஏனைய கட்சிகளிலிருந்தும் கணிசமானோர் ரணிலின் பக்கம் தாவுவர். இது தென்னிலங்கை அரசியல்வாதிகளின் இயல்பான பண்பு. தமிழ், முஸ்லிம் தரப்புகள் பற்றிச் சொல்ல வேண்டிய அவசியமேயில்லை. இதனால் சஜித்தை பலவீனமாக்கும் இன்னொரு உத்திதான் 13 தொடர்பான பேச்சுவார்த்தை நாடகம். சஜித் இயல்பாகவே தீவிர சிங்கள தேசியவாதி. ஜே.ஆர். ஜெயவர்த்தனா மிகப் பலம் பொருந்திய நிலையிலிருந்த போதே சஜித்தின் தந்தையான பிரேமதாச இலங்கை இந்திய ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்ததுடன் பிரதமராக இருந்தும்கூட ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வையும் புறக்கணித்திருந்தார். மேலும் அவர் ஜனாதிபதியாக இருந்தபோது மாகாண சபைகளுக்கரிய அதிகாரங்களைப பறித்து மத்தியுடன் சேர்க்கும் காரியத்தையும் தொடக்கி வைத்தார். சஜித் தன் தந்தைக்கு எவ்விதத்திலும் குறைந்தவரல்லர் என பலமுறை வெளிப்படுத்தியிருக்கிறார். நல்லாட்சி என்று அவர்களே கூறிய காலத்தில் ரணிலால் முன்னர் அரங்கேற்றப்பட்ட புதிய அரசியலமைப்பை உருவாக்கும் நாடகத்துக்கு வெளிப்படையாகவே எதிர்ப்பை வெளியிட்டவர் சஜித். அது மட்டுமல்ல வடக்கு கிழக்கில் 1000 விகாரைகளின் நாயகன் அவர். தற்போது தமிழ்க் கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்காக அடக்கி வாசிக்கிறார் என்பதே உண்மை. கட்சிகளுடனான பேச்சுவார்த்தைக்கு வருகை தந்த சஜித் 13 தொடர்பாக எதுவும் கதைக்காது குறிப்பாகக் காணி, பொலிஸ் அதிகாரம் தொடர்பாக எதுவும் கூறாது மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு மட்டும் கோரிவிட்டு உடனேயே சென்று விட்டார். காணி, பொலிஸ் அதிகாரம் தொடர்பான கட்சியின் நிலைப்பாட்டை அவர் கூறவும் முடியாது. கூறவும் மாட்டார். ஏனினில் அதற்கு ஆதரவை வெளிப்படுத்தினால் சிங்கள வாக்குகள் இழக்கப்படும். எதிர்த்தால் தமிழ் வாக்குகள் இழக்கப்படும். அவருடன் கூடி நிற்கும் தமிழ்த்தரப்புகளும் சஜித்தின் நிலைப்பாட்டைத் தெரிவிக்குமாறு கோரவில்லை. கோரவும் மாட்டார்கள். ஏனெனில் எல்லோரதும் நோக்கமும் தேர்தல் வெற்றி அன்றி வேறில்லை. ஆனால் ரணிலின் நோக்கம் தனது வெற்றிக்காக சஜித்தை இவ்வாறான நிலைக்குத் தள்ளுவதே.

13ஆவது திருத்தம் தொடர்பான அனுர குமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி)யின் நிலைப்பாடு வெளிப்படையானது. அவர்கள் இந்திய இலங்கை ஒப்பந்தத்துக்கும் மாகாண சபை முறைமைக்கும் எதிரானவர்கள். அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த அனுர குமார தாம் 13ஐ எதிர்க்கப் போவதில்லை என இங்கு கூறியிருந்தாலும் அக்கட்சி உறுப்பினர்கள் அதற்கு எதிரான கருத்துக்களையே தொடர்ந்து கூறி வருகின்றனர். தங்களை ஒரு இடது சாரி இயக்கம் எனக் கூறிக் கொள்ளும் ஜே.வி.பி இதுவரை தமிழ்மக்களுக்கான தமது அரசியல் தீர்வு வடிவம் பற்றி எதுவுமே குறிப்பிட்டதில்லை. அவர்கள் தமிழர்களை ஒரு தேசிய இனமாகக் கருதுவதற்கான எந்த வெளிப்பாடும் இல்லை. அவர்கள் உண்மையான இடதுசாரிகள் எனில் தேசிய இனமான தமிழர்களுக்கு பிரிந்துசெல்லும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய அடிப்படையிலான கூட்டாட்சி முறைமையை ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் ஒற்றையாட்சியின் கீழான மாகாண சபையையேஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை என்பதுதான் யதார்த்தம். ஆனால் ரணிலின் தெரிவை அவர்கள் நிராகரிப்பதாலும், ரணில் தேர்தல் நோக்கில் பேச்சுவார்த்தையை நடத்துவதாலும் தாங்கள் பேச்சுவார்த்தையில் பங்கெடுக்கவில்லை எனக் கூறிக்கொள்கிறார்கள். உண்மையில் அவர்களின் இந்தமுடிவும் தேர்தலை மையமாகக் கொண்டதே. சில அரசியல் ஆய்வாளர்கள் கூறுவது போல அவர்கள் சிவப்புச் சட்டைக்குள் மறைந்திருக்கும் சிங்கள கடும்போக்குவாதிகளா என்பதை அவர்கள் ஆட்சிக்குவந்தால் தான் முழுமையாக நாம் அறியமுடியும்.

பொதுஜன பெரமுனவைப் பொறுத்த மட்டில் வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தமது கையைச் சுட்டுக் கொள்ளுமளவுக்கு

(18ஆம் பக்கம் பார்க்க)

# ரணிலிடம் அகப்பட்டுள்ள '13' குரங்கின் கை பூமாலையாகிறது!

பனங்காட்டான்

கடந்த ஆண்டு ஜூலையில் நாடாளுமன்றத்தால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றார். இதனைத் தொடர்ந்து அந்த ஆண்டின் இறுதிக்குள் தமிழர் பிரச்னைக்குத் தீர்வு காணப் போவதாக அறிவித்தார்.

அப்போது பலரின் மனதிலும் இரண்டு கேள்விகள் எழுந்தன. எழுபது ஆண்டுகளுக்கு மேலாக புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்னையை ஆறு மாதத்துக்குள் எவ்வாறு தீர்க்க முடியும் என்பது முதலாவது கேள்வி. சிங்கள அரசியல்வாதிகளதும் பௌத்த பீடங்களதும் எதிர்ப்புகளைத் தாண்டி, தமிழர் எதிர்பார்க்கும் ஆகக்குறைந்த அம்சங்களுடன் கூட இவரால் தீர்வுகாண முடியுமா என்பது இரண்டாவது கேள்வி.

1977ம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமது பெரியப்பாவான ஜே.ஆர். ஜெயவர்த்தன ஆட்சி அமைத்தபோது அதில் 28 வயது இளைஞனாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவானவர் ரணில். 1987ல் ராஜிவுடன் ஜே.ஆர். இலங்கை - இந்திய ஒப்பந்தம் செய்யும்போது ரணிலுக்கு வயது 38. அப்போது அரசியலில் கிழட்டுநரி என வர்ணிக்கப்பட்ட ஜே.ஆரினால் 'நரிப்பால்' ஊட்டி வளர்க்கப்பட்ட குட்டிநரியான ரணிலுக்கு இப்போது வயது 74. ஜே.ஆரும் ரணிலும் எழுபது வயது தாண்டி முதியோர் பராமரிப்பு நிலையங்களில் நாட்களை கழிக்க வேண்டிய காலங்களிலேயே நாட்டின் தலைமைப் பதவிக்கு வந்தது அதன் சாபக்கேடு.

இருவரது வயதையும் குறிப்பிட்டு இதனை எழுதுவதற்கான அடிப்படைக் காரணம், தமிழரின் இனப்பிரச்னையை தீர்ப்பதில் இருவரும் எவ்வாறு ஒரே பாதையில் பயணிக்கின்றனர் என்பதை எடுத்துக்காட்டவே.

1987ல் ராஜிவுடன் ஒப்பந்தம் செய்த ஜே.ஆர். அதனை நடைமுறைப்படுத்த பதின்மூன்றாம் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியபோது தமிழரில் ஒரு தரப்பினர் இனப்பிரச்னைக்குத் தீர்வு காணப்பட்டு விட்டதாக எண்ணினர். ஜே.ஆரைப் போற்றவும் இவர்கள் தவறவில்லை.

இதற்குக் காரணம், 13ஆம் திருத்தமே மாகாண சபை நிர்வாகம் எனவும், மாகாண சபை முறைமையே பதின்மூன்றாம் திருத்தம் என்றும் பார்க்கப்பட்டதுவே. அரசியல் அமைப்பில் ஒரு திருத்தத்தை ஏற்படுத்தி அதனை நாடாளுமன்றம் அங்கீகரித்தால் அது சட்டமாகிவிடும். அதனை எவரும் மீறக்கூடாது.

இந்த அடிப்படையில் 1988ல் வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்பட்டதும், முதலமைச்சர் தலைமையில் இணைந்த மாகாண சபை நான்கு அமைச்சர்களுடன் இயங்க ஆரம்பித்தது என்பதும் வர லாறு. இதற்கு வழியமைத்தது 13ஆவது அரசியல் திருத்தமே.

ஆனால் பதின்மூன்றாம் திருத்தம் - தமிழருக்கான அரசியல் தீர்வுக்கான முதல்படியான அதிகாரப் பகிர்வை கொண்டிருக்கவில்லை. காலக்கிரமத்தில் அதிகாரப்பகிர்வு கிடைக்கலாமென்ற நம்பிக்கை இருந்தது. கடந்த 36 ஆண்டுகளில் அது பொய்யாகிப் போய்விட்டது.

அதிகாரங்கள் இல்லாவிட்டாலும் பரவாயில்லை, தமிழரின் தற்காலிக பாதுகாப்புக்கும் அவர்களின் நிலபுலங்களை கட்டிக்காக்கவுமாவது மாகாண சபை இருக்கட்டும் - காலக்கிரமத்தில் முழுமையான அதிகாரங்களை படிப்படியாக பெற்றுக் கொள்ளலாமென்ற எதிர்பார்ப்புடனேயே மாகாண சபை தேர்தல்களை தமிழர் தரப்பு சந்தித்தது என்பது ரகசியமன்று.

கடந்த மூன்று தசாப்தத்துக்குள் நிகழ்ந்தவை கசப்பானவை. வடக்கு கிழக்கு இணைப்பை உச்ச நீதிமன்றம் ரத்தாக்கியது. பதின்மூன்றாம் திருத்தத்தில் பல அம்சங்கள் சட்டப்படி பறிக்கப்பட்டன, அல்லது இல்லாமற் செய்யப்பட்டன. எதுவுமே இல்லாத மாகாண சபை தேர்தல்கூட வருடக்கணக்காக நடைபெறவில்லை.



எஸ்மன்ட் விக்கிரமசிங்க

**1983 - 84 காலப்பகுதியில் இந்திரா காந்தியின் ஆலோசகராகவும் விசேட தூதுவராகவும் இருந்த கோபாலசுவாமி பார்த்தசாரதி, ரணிலின் தந்தையான எஸ்மன்ட் விக்கிரமசிங்க ஊடாகவே மாகாண சபை முறைமையை ஜே.ஆரிடம் தெரிவித்தார். அன்று இளம் அமைச்சராகவிருந்த ரணிலுக்கு இது ஞாபகமில்லைப் போலும். அல்லது வசதி கருதி மறந்துவிட்டாரா?**

இந்தப் பின்னணியில் தமிழர் பிரச்னைக்கு ஆறு மாதத்துக்குள் தீர்வு அறிவிக்கப்படுமென ஜனாதிபதியாக பதவியேற்ற ரணில் திடீரென அறிவித்தபோது அது அதிர்ச்சி வைத்தியமாக இருந்தது.

நல்லாட்சிக் காலத்தில் புதிய அரசியலமைப்பை உருவாக்கி அதனூடாக தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு காணவென நூற்றுக்கும் அதிகமான அமர்வுகளை நடத்தியவேளை பிரதமராக இருந்தவர் ரணில். தமிழரசின் சம்பந்தனதும் சுமந்திரனதும் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவும் இவரே இருந்தார். அதனால் கூட்டமைப்பின் பங்காளிகளாகவிருந்த ரெலோவும் புளொட்டும் ரணிலை நம்பி ஆதரவு அளித்து வந்தன.

ஆனால், நல்லாட்சிக் காலம் தமிழருக்கு நல்ல காலமாக அமையவில்லை. ரணிலுக்கும் மைத்திரிக்கும் இடையிலான இணக்கமின்மையால் தமிழரின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லையென கூறப்பட்டிருப்பினும் அது உண்மையன்று. ரணில் தாம் திட்டமிட்டவாறு தமிழரை கைவிட்டார்.

இத்தகைய சூழ்நிலையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற ரணிலின் புதிய தோற்றம் தமிழர் பிரச்னைக்கு ஒரு தீர்வைக்காண வழிவகுக்கலாமென சிலர் நம்பினர். சொல்லப்போனால் 13ஆம் திருத்தம் அரசியலில் இருப்பதையே அவர் அடியோடு விரும்பவில்லை என்பது இப்போது வெளிப்படை இதற்கு உதாரணமாக 13ஆம் திருத்தத்திலிருந்து சிலவற்றை எவ்வாறு நீக்கலாமென்று அவர் முன்மொழிந்த கைங்கரியம்.

அரசியலமைப்பில் அதிகாரப் பகிர்வு இருக்கும்வரை அதனை நிறைவேற்ற வேண்டும். நாடாளுமன்றத்தில் பிரேரணை சமர்ப்பித்து அதிகாரப் பகிர்வை நீக்காதவரை தமது கைகள் கட்டப்பட்டிருப்பது போன்ற அவரது வார்த்தைப் பிரயோகம் சிங்கள பௌத்த இனவாதிகளுக்கு ஒரு விடயத்தை காதுக்குள் போட்டது. இப்போது, அந்தத் திருத்தத்தை அரசியலமைப்பு 22ம் திருத்தமாக நாடாளுமன்றத்தில் கொண்டு வரப் போவதாக உதய கம்மன் பில அறிவித்துள்ளார். இந்தப் பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேறுமானால் ரணிலின் எதிர்பார்ப்பு சுலபமாகிவிடும். அதன் பின்னர் அதிகாரப் பரவலை எவரும் கேட்க முடியாது. இதுதான் ரணிலின் குள்ளநரி மூளை.

மாகாண சபை முறைமை என்பதுவே இன்று சிங்களவர் தமிழர் தரப்பில் அதிகம் பேசப்படுவதாக இருக்கிறது. மாகாண சபை ஆலோசனையின் பிதாமகர் யார் என்ற கேள்வி இங்கு வருகிறது. ராஜிவ் காந்தி, டிக்சிற், டில்லியின் சவுத் புளொக் என்று பல பெயர்கள் அடிபடுகின்றன.

இலங்கையின் மூத்த சிவில் சேவை அதிகாரியான சரத் அமுனுகம தமது நூல் ஒன்றில் முக்கிய தகவலொன்றைத் தந்துள்ளார். நீண்டகாலம் இலங்கையின் தகவல் திணைக்கள தலைமை அதிகாரியாகவும் பின்னர் ஜே.ஆரின் ஆட்சிக் காலத்தில் தகவல் ஒலிபரப்பு அமைச்சின் செயலாளராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றதையடுத்து அரசியல்வாதியாகி பல அமைச்சுப் பதவிகளையும் வகித்தவர் சரத் அமுனுகம.

1983 தமிழின அழிப்பின் பின்னர் இந்திய பிரதமர் இந்திரா காந்தியின் நேரடித் தலையீடு இலங்கையில் இருந்தது. இதனால் உள்நாட்டில் சிங்கள பௌத்த தீவிர எதிர்ப்பை ஜே.ஆர். சந்திக்க நேர்ந்தது. அப்போது இந்திரா காந்தியின் ஆலோசகராகவும் தனிப்பட்ட தூதுவராகவும் இயங்கிய தமிழரான கோபாலசுவாமி பார்த்தசாரதியின் உதவி இவருக்குத் தேவைப்பட்டது. அவ்வேளை எஸ்மன்ட் விக்கிரமசிங்கவும் (ரணிலின் தந்தை) பார்த்தசாரதியுடன் நெருக்கமான உறவு பேணி வந்தார்.



இது தொடர்பான முக்கிய விடயமொன்றை திரு. சரத் அமுனுகம தமது சுயவாழ்க்கைச் சரிதத்தின் இரண்டாம் பாகத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"Esmond Wickremasinghe (Ranil Wickremasinghe's father) briefed us of the Parathsarathy proposals which at that time was hotly opposed by many including the monks like Walpola Rahula and the Mahanayake of Asgiriya, Palipane Chandananda. The Parthasarathy proposals were for the setting up of Provincial Councils in a merged North and East. He was a proponent of devolution of powers within a sovereign state."

(வல்பொல ராகுல போன்ற பிக்குகள் மற்றும் அஸ்கிரிய மகாநாயக்கர் பாலிபனே சந்தனந்தா உள்ளிட்ட பலராலும் கடுமையாக எதிர்க்கப்பட்ட பார்த்தசாரதி முன்மொழிவுகள் குறித்து எஸ்மன்ட் விக்கிரமசிங்க (ரணில் விக்கிரமசிங்கவின் தந்தை) எமக்கு விளக்கினார். இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கில் மாகாண சபைகளை அமைப்பதற்கான யோசனைகள் பார்த்தசாரதியின் முன்மொழிவுகளாகும். அவர் இறையாண்மை கொண்ட நாட்டிற்குள் அதிகாரப் பகிர்வை ஆதரித்தவர்).

இதனூடாக முக்கியமான விடயமொன்று வெளியாகியுள்ளது. வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாண சபை என்பது 1987 ஒப்பந்தத்தில் கருவானதல்ல. அதற்கு மூன்றாண்டுகளுக்கு முன்னரே பார்த்தசாரதியினால் முன்மொழியப்பட்டது. அப்போது ஜே.ஆரின் தொடர்பிலிருந்த பார்த்தசாரதி மறுபுறத்தே தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் நம்பிக்கைக்குரியவராகவும் ரணிலின் தந்தையின் நேரடித் தொடர்பாளராகவும் இருந்துள்ளார்.

இதனை ரணில் மீள்நினைவுக்கு உட்படுத்த வேண்டும். ஆனால் அவர் கையில் சிக்கியுள்ள மாகாண சபை குரங்கின் கையில் கிடைத்த பூமாலை நிலைக்குள்ளாகி வருகிறது. அல்லது, குரங்கு அப்பம் பங்கிட்டது போன்று மாகாண சபை அதிகாரங்களை பிய்த்துப் பிய்த்துத் தள்ளி இல்லாமற் செய்ய முயற்சிக்கப்படுகிறது என்றும் சொல்லலாம்.




**திரைப்படம் - எல்.ஜி. எம்.**
**இயக்கம், இசை - ரமேஷ் தமிழ்மணி**
**நடிப்பு - ஹரிஷ் கல்யாண், இவானா, நதியா, யோகிபாபு**

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் எம். எஸ். டோனி தயாரித்துள்ள முதல் திரைப்படம் இது.

தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தில் வேலை பார்ப்பவர் ஹரிஷ் கல்யாண். அவருடன் வேலை பார்க்கும் இவானாவைக் காதலிக்கிறார். இரண்டு வருடங்கள் காதலித்த பிறகு திருமணம் செய்து கொள்ள நினைக்கிறார்கள். ஆனால், தனது வருங்கால மாமியாரான நதியாவுடன் பழகிப் பார்த்த பின்புதான் திருமணம் என ஒரு 'ஐடியா' கொடுக்கிறார் இவானா. அதனால் ஒரு சுற்றுலா போக ஆசைப்படுகிறார்கள். அம்மா நதியாவிடம் பொய் சொல்லி சுற்றுலாவுக்கு அழைத்துப் போகிறார் ஹரிஷ்.

இவானா குடும்பத்தினர், தோழி, ஹரிஷ் குடும்பத்து தோழி வினோதினி குடும்பத்தினர், ஹரிஷ் நண்பர் ஆர். ஜே. விஜய் ஆகியோரும் சுற்றுலாவில் கலந்து கொள்கிறார்கள். ஒரு கட்டத்தில் நதியாவுக்கு உண்மை தெரிய வர கூர்க் வரை சென்ற பின் சுற்றுலாவை நிறுத்துகிறார்கள். ஆனாலும், நதியா, இவானா திடீரென தனியாகச் செல்கிறோம் என பிரிந்து போகிறார்கள். இதன் பின் என்ன நடக்கிறது என்பதுதான் படத்தின் கதை.

இந்த மாதிரியான கதைகளை உளவியல் ரீதியான, கலகலப்பான, உணர்ச்சிகரமான படமாகக் கொடுத்திருந்தால் ரசிகர்களைக் கவர்ந்திருக்கும். ஆனால், எதிலுமே ஒரு முழுமை இல்லாமல் திரைக்கதை அதன் போக்கில் எங்கெங்கோ போய்க் கொண்டிருக்கிறது. சுற்றுலா போகும் சாலைகளிலாவது திருப்பங்கள் அடிக்கடி வரும். இந்தப் படத்தில் இடைவேளையின் போது வரும் ஒரே ஒரு திருப்பம் தவிர மேடு, பள்ளங்களில் மட்டுமே திரைக்கதை பயணிக்கிறது.

ஹரிஷ் கல்யாண் படம் முழுவதும் எதையோ பறிகொடுத்தவர்போல உம்மென்றே இருக்கிறார். அம்மா நதியா ஒரு பக்கம், காதலி இவானா ஒரு பக்கம் என இரண்டு பக்கமும் மாட்டிக் கொள்பவர்கள் இப்படித்தான் இருப்பார்கள் என நினைத்திருப்பார் போலிருக்கிறது. ஹரிஷ் கல்யாண் இப்படி ஒரு பக்கம் 'உம்' மென்று இருக்க, இன்னொரு பக்கம் இவானா 'ஐயே' என அடிக்கடி அலுத்துக் கொள்கிறார்.

நதியா முகத்தில் அவ்வளவு களைப்பு ஏன் என்று தெரியவில்லை. கண்களுக்குக் கீழே தூக்கமில்லாததால் வரும் சுருக்கம் அவரது தோற்றத்தையே கெடுத்துவிடுகிறது. இடைவேளை வரை அம்மா நதியாவாக இருப்பவர், இடைவேளைக்குப் பின் 80களின் நதியாவாக மாறிவிடுகிறார், ஆடைகளில் மட்டுமே அந்த மாற்றம்.

யோகிபாபு படத்தில் நடித்தேயாக வேண்டும் என யோகிபாபுவிடம் கேட்டதால் வந்து நடித்துக் கொடுத்திருப்பாரோ?. திடீரென வந்து திடீரென காணாமல் போய் மீண்டும் திடீரென வந்து போகிறார், சிரிக்க வைக்காமல்- ஹரிஷ் கல்யாணின் நண்பனாக ஆர். ஜே. விஜய். ஒரு சில வசனங்களில் மட்டும் கலகலப்பூட்டுகிறார்.

படத்தின் இயக்குநர் ரமேஷ் தமிழ்மணியே படத்துக்கு இசையமைத்திருக்கிறார். காட்சிகளில் ஓர் அழுத்தம் இருந்தால்தானே இசையிலும் எதிரொலிக்கும். விஸ்வஜித் ஒடுக்கத்தில் ஒளிப்பதிவு செய்திருக்கிறார். படம் முழுவதுமே 'ப்ளீச்' ஆகி வெளிறிப் போயிருக்கிறது. அவரின் ஒளிப்பதிவில் குற்றமா அல்லது அதை கிரேடிங் செய்தவரின் குற்றமா?.

இடைவேளை வரை ஓரளவுக்குத் தாக்குப் பிடித்து ரசிக்க முடிகிறது. அதற்கு பின்னால் "என்னென்ன கதை சொல்றாங்க பாருங்க," என களைப்படைய வைத்துவிடுகிறது.




# 15 ஆண்டுகளின் பின்னர் பெண் வேடத்தில் கமல்



15 ஆண்டுகளுக்குப் பிறகு நடிகர் கமல்ஹாஸன் 'இந்தியன் 2' படத்துக்காக பெண் வேடத்தில் நடித்துள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 1996ஆம் ஆண்டு கே. எஸ். ரவிக்குமார் இயக்கத்தில் கமல்ஹாசன், மீனா நடிப்பில் வெளியான படம் 'அவ்வை சண்முகி'. இந்தப் படத்தில் நடிகர் கமல்ஹாசன் வயதான பெண் வேடத்தில் நடித்திருந்தார்.

இதையடுத்து, கே. எஸ். ரவிக்குமார் இயக்கத்தில் 2008 ஆம் ஆண்டு தசாவதாரம் வெளியானது இதில், கமல் கிருஷ்ணவேணி பாட்டி வேடத்தில் நடித்திருந்தார்.

தற்போது 15 ஆண்டுகளுக்கு பிறகு 'இந்தியன் 2' படத்துக்காக அவர் மீண்டும் பெண் வேடமிட்டு நடித்துள்ளார் என்று கூறப்படுகின்றது. சிறிது நேரமே அவர் பெண் வேடத்தில் நடித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.



# மீண்டும் சுப்ரமணியபுரம்

ஒகஸ்ட் 4ஆம் திகதி 'சுப்ரமணியபுரம்' திரைப்படம் தமிழ்நாட்டில் மீள் வெளியீடு செய்யப்படும் என படத்தின் இயக்குநர் சசிகுமார் அறிவித்துள்ளார்.

2008 ஜூலை 4ஆம் திகதி வெளியான படம் 'சுப்ரமணியபுரம்'. சசிகுமார் இயக்கி, நடித்து, தயாரித்திருந்த இந்தப் படத்தில் ஜெய், சமுத்திரக்கனி, ஸ்வாதி, கஞ்சா கறுப்பு உள்ளிட்ட பலர் சசிகுமாருடன் நடித்திருந்தனர்.

விமர்சன ரீதியாகவும், வசூல் ரீதியாகவும் 'சுப்ரமணியபுரம்' மாபெரும் வரவேற்பைப் பெற்றது. தமிழ் சினிமாவின் கிளாசிக் படங்களில் ஒன்றாக இன்று வரை இப்படம் கொண்டாடப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# விஜய் சேதுபதியுடன் மஞ்சு!



வெற்றிமாறனின் 'விடுதலை பாகம் 2' படத்தில் விஜய் சேதுபதிக்கு ஜோடியாக நடிகை மஞ்சு வாரியர் நடிக்கவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இயக்குநர் வெற்றிமாறன் 'விடுதலை' படத்தை இரண்டு பாகங்களாக இயக்குகிறார். இந்தபடத்தின் முதல் பாகம் கடந்த மார்ச் 31ஆம் திகதி வெளியானது. இதில் சூரி, விஜய் சேதுபதி முதன்மை கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர். இளையராஜா இசையமைத்திருந்தார். வேல்ராஜ் ஒளிப்பதிவு செய்திருந்த 'விடுதலை பாகம் 1' ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றது. இந்நிலையில், தற்போது 'விடுதலை பாகம் 2'இற்கான படப்பிடிப்பில் வெற்றிமாறன் கவனம் செலுத்தி வருகிறார்.

# தனுஷுடன் ராஷ்மிகா

நடிகர் தனுஷ் 'கேப்டன் மில் லர்' படத்தை முடித்து விட்டார். இதில் பிரியங்கா அருள் மோகன், சிவராஜ் குமார் உட்பட பலர் நடிக்கின்றனர். சத்ய ஜோதி பிலிம்ஸ் தயாரிக்கும் இதை அடுத்து, தனது 50ஆவது படத்தை இயக்கி நடிக்கிறார். இதில் துஷாரா விஜயன், சந்தீப் கிஷன் உட்பட பலர் நடிக்கின்றனர்.

தமிழ், தெலுங்கு, ஹிந்தி மொழிகளில் இந்தப் படம் வெளியாகவுள்ளது. இதில் நடிகர் நாகார்ஜுனா நடிக்க இருப்பதாகக் கூறப்படுகிறது. தனுஷுக்கு ஜோடியாக ராஷ்மிகா மந்தனாவை நடிக்க வைக்கப் பேச்சு நடப்பதாகக் கூறப்படுகின்றது.



# மீண்டும் வில்லன்

ராஜு முருகன் இயக்கத்தில் ஜப்பான் என்ற படத்தில் நடித்து முடித்துள்ளார் கார்த்தி. தற்போது இறுதி கட்ட பணிகள் தொடங்கப்பட்டுள்ளஅந்த படம் வருகிற தீபாவளிக்கு திரைக்கு வருகிறது. இதையடுத்து நலன் குமாரசாமி இயக்கும் படத்தில் அவர் நடிக்கிறார். இந்த படத்தை முடித்ததும் விஜய் சேதுபதி - திரிஷா நடிப்பில் 96 என்ற படத்தை இயக்கிய பிரேம் குமார் இயக்கும் தனது 27ஆவது படத்தில் நடிக்கப் போகிறார் கார்த்தி.

இந்தப் படத்தை சூர்யாவின் 2டி என்டர்டைன்மென்ட் நிறுவனம் தயாரிக்கிறது. குடும்ப பாசக் கதையில் உருவாகும் இந்த படத்தில் அரவிந்த்சாமி வில்லன் வேடத்தில் நடிக்கிறார். ஏற்கனவே ஜெயம் ரவியுடன் தனி ஒருவன் படத்தில் நடித்தது போன்று, இந்த படத்திலும் ஒரு வலுவான வில்லன் வேடத்தில் அவர் நடிக்கிறார் என்று கூறப்படுகிறது.



# மாற்றப்படும் போட்டிகள்

ஒருநாள் உலகக் கிண்ணத் தொடர் ஒக்ரோபர் 5 ஆம் திகதி முதல் நவம்பர் 19 ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெற இருக்கிறது. இதற்கான போட்டி அட்டவணையும் வெளியிடப் பட்டுவிட்டது. இந்நிலையில், இந்திய கிரிக்கெட் சபை உலகக் கிண்ணம் குறித்த சில புதிய தகவல்களை வெளியிட்டிருக் கிறது.

குஜராத்தில் நவராத்திரி கொண்டாட் டங்கள் தொடங்கும் நேரம் என்பதால் ஒக்ரோபர் 15 ஆம் தேதி அகமதாபாத் தில் நடக்கவிருந்த இந்தியா - பாகிஸ் தான் போட்டியை வேறு நாளுக்கு மாற் றும் முடிவில் இந்திய கிரிக்கெட் சபை இருப்பதாகத் தகவல்கள் வெளியாகின. இந்நிலையில், உலகக் கிண்ணப் போட்டி களை நடத்தும் மாநிலங்களின் கிரிக்கெட் சபைகளுடன் இந்திய கிரிக்கெட் சபை செயலாளர் ஜெய் ஷா அவசர கூட்டத்தை கூட்டியிருந்தார். அதில் சில முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கிறது.

அதாவது, 'சில நாடுகளின் கிரிக்கெட் சபைகள் போட்டி அட்டவணையில் மாற்றம் செய்ய வேண்டும் என சர்வதேச கிரிக்கெட் சபையிடம் கோரிக்கை வைத்திருக்கின்றன. அந்த நாடுகள் ஆடும் போட்டிகளுக்கிடையேயான இடை வெளி போதுமானதாக இல்லை என்பதால் இந்தக் கோரிக்கையை எழுப்பியிருக்கின் றனர். ஆக, போட்டி நடைபெறும் திகதி களில் சில மாற்றங்கள் இருக்கக்கூடும். ஆனால், முடிந்தளவுக்கு போட்டி நடை பெறும் இடங்களில் எந்த மாற்றமும் செய்யப்படாது.' என ஜெய் ஷா கூறியி ருக்கிறார்.




மேலும், இது சார்ந்து இந்தியா - பாகிஸ்தான் மோதும் போட்டி ஒக்ரோபர் 15 ஆம் திகதியிலிருந்து ஒக்ரோபர் 14 ஆம் தேதிக்கு மாற்றப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

"போட்டிகளுக்கான ரிக்கெற் விற்பனை செய்யும் நிறுவனமும் முடிவு செய்யப் பட்டுவிட்டது. ரிக்கெற் விற்பனை தொடர்பான அறிவிப்புகள் அடுத்த வாரம் வெளியிடப்படும். மேலும், போட் டிகளை காண வரும் ரசிகர்கள் கட்டாய மாக ரிக்கெற்களை வைத்திருக்க வேண் டும். ரிக்கெற்களை விநியோகம் செய்யப் போட்டிக்கு சில நாட்களுக்கு முன்பே மைதானங்களில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும். மேலும், போட்டி களின்போது ரசிகர்களுக்கு இலவச குடி தண்ணீர் வசதியும் செய்யப்பட்டிருக் கும்." என்றும் ஜெய் ஷா கூறியிருக்கிறார்.

போட்டி அட்டவணையில் மாற்றம் இருக்கும்பட்சத்தில் மாற்றப்பட்ட போட்டி அட்டவணை வெளியான பிறகுதான் ரிக்கெற் விற்பனை தொடங் கப்படும் என எதிர்பார்க்கலாம்.

## கோடிகளுக்காக ஆட மறுக்கும் எம்பாப்வே?



பிரான்ஸ் நாட்டு உதைபந்தாட்ட வீரர் கிலியன் எம்பாப்பேவை சுமார் 33.2 கோடி டொலருக்கு - நம் நாட்டு மதிப் பில் சுமார் 10 ஆயிரத்து 560 கோடி ரூபாய் வாங்க சவூதி அரேபிய நாட்டை சேர்ந்த அல் ஹிலால் உதைபந்தாட்ட கழக அணி முன்வந்துள்ளதாக தகவல் வெளியானது. இதனை பி. எஸ். ஜி. கழக அணி உறுதி செய்துள்ளது.

24 வயதான எம்பாப்பே, சர்வதேச கால்பந்தாட்ட போட்டிகளில் பிரான்ஸ் நாட்டுக்காக விளையாடி வருகிறார். அந்த அணியின் பிரதான முன்கள வீரராக அவர் உள்ளார். ரொனால்டோ, மெஸ்ஸி போன்ற வீரர்களை தொடர்ந்து அடுத்த தலைமு றையை சேர்ந்த நட்சத்திர ஆட்டக்கார ராகவும் அறியப்படுகிறார். கழக அளவி லான போட்டிகளில் விளையாட அவர் தற்போது பி. எஸ். ஜி. அணியில் உள்ளார். அவருக்கான ஒப்பந்தம் அடுத்த பருவ காலம் வரை இருப்பதாகத் தெரிகிறது.

அந்த ஒப்பந்தத்தை நீட்டிக்க பி. எஸ். ஜி. முயன்றுள்ளது. ஆனால், எம்பாப்பே அதை நீட்டிக்க மறுத்து விட்டாரெனத் தகவல் வெளியானது. அதனால், அந்த அணியின் ஆசிய சுற்றுப் பயணத்துக் கான தொடரில் அவர் இடம்பெறவில்லை என சொல்லப்படுகிறது. அதோடு பி. எஸ். ஜி. அணியிலிருந்து அவர் வெளியேறுகி றாரா என்ற கேள்வியும் எழுந்தது.

இந்தச் சூழலில் சவூதி அரேபிய நாட்டை சேர்ந்த அல் ஹிலால் உதைபந் தாட்ட அணி அவரை ஒரு பருவகாலத் துக்குசுமார் 332 மில்லியன் டொலருக்கு வாங்க முன்வந்துள்ளது. இது உலக சாத னையாக பார்க்கப்படுகிறது. போர்த்துக் கல் நாட்டு உதைபந்து வீரர் ரொனால்டோ, சவூதி அரேபியாவின் அல் நஸர் (Al Nassr) கழக அணிக்காகத்தான் விளையாடி வருகி றார்.

## அறிவிப்பை மீளப்பெறமாட்டேன்

இங்கிலாந்து அணியின் நட்சத்திர சகலதுறை வீரராக இருப்பவர் பென் ஸ்ரோக்ஸ்.

இங்கிலாந்து அணியின் டெஸ்ட் போட்டியின் தலைவரான இவர் 2019 ஆம் ஆண்டு இங்கிலாந்து அணி உலகக் கிண்ணம் வெல்வதற்கு மிக முக்கிய கார ணமாக இருந்தார். டெஸ்ட் மற்றும் ஒரு நாள் கிரிக்கெட், 20 ஓவர் போன்ற போட் டிகளில் அணிக்கு மிகவும் பக்கபலமாக இருந்த அவர் ஒருநாள் போட்டிகளில் இருந்து விடைபெறுவதாக கடந்த ஆண்டு அறிவித்து அனைவருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தினார். ஆனால், அவர் ஓய்வு முடிவை திரும்பப் பெற்று விடுவார் என்று பலராலும் பேசப்பட்டது.

இந்நிலையில் ஆஷஷ் தொடர் நடை பெற்று வரும் லண்டன் ஓவல் மைதானத் தில் பென் ஸ்ரோக்ஸ் செய்தியாளர்களை சந்தித்தப்போது அவரிடம், ஓய்வில் இருந்து மீண்டு வந்து ஒருநாள் போட்டி களுக்கான உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்பீர்களா? என்று கேள்வி எழுப் பப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், "நான் ஒருநாள் போட்டிகளில் ஓய்வை அறிவித்துவிட்டேன். அதனை திரும்பப் பெறுவதற்கான வாய்ப்பே இல்லை" என்று தெரிவித்திருக்கிறார்.

இதன் மூலம் பென் ஸ்ரோக்ஸ் ஓய்வு முடிவைத் திரும்ப பெறுவதற்கான வாய்ப்புகள் இல்லை என்பது உறுதியாகி இருக்கிறது. இதனால் பென் ஸ்ரோக்ஸ் இல்லாமலேயே, பட்லர் தலைமையில் இங்கிலாந்து அணி உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்கும் என்று எதிர்பார்க் கப்படுகிறது.



# உலகை அழிக்கும் எமன் ஆகிவிட்டேன்: அணுகுண்டு கண்டுபிடித்த விஞ்ஞானி வேதனை

ஓபன்ஹைமர் கடந்த 1904-ம் ஆண்டு அமெரிக்காவின் நியூயார்க்கில் பிறந்தார். இவரது குடும்பத்தினர் அமெரிக்காவில் வந்து குடியேறிய ஜெர்மன்-யூதர்கள். ஓபன்ஹைமரின் தாய் ஓவியர், தந்தை ஜவுளி இறக்குமதியாளர். பள்ளியில்படிக்கும் போதே மிகவும் திறமைசாலியாக விளங்கிய ஓபன்ஹைமர், பள்ளி இறுதியாண்டு படிப்பை முடிப்பதற்கு முன்பே ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் வேதியியல் பட்டப்படிப்பில் சேர்ந்து விட்டார்.

காட்டின்ஜென் பல்கலைக்கழகத்தில் பிஎச்.டி பட்டம் பெற்றபின், கலிபோர்னியா தொழில்நுட்ப கழகத்தில் கடந்த 1927ஆம் ஆண்டு தனது கூட்டு ஆய்வுப் பயிற்சியை தொடங்கினார். பின்னர் பெர்கிலியில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். 1936ஆம் ஆண்டு, இவர் பேராசிரியராக பதவி உயர்வு பெற்றார்.



கடந்த 1940இல் கேத்தரீன் என்பவரை மணந்தார். (ஓபன்ஹைமர் படத்தில் இந்த கதாபாத்திரத்தில் எமலி பிளன்ட் நடித்துள்ளார்). இவர்களுக்கு பீட்டர் மற்றும் டோனி என்ற 2 குழந்தைகள்பிறந்தனர். பின்னர் ஜேன் டேட்லாக் என்ற பெண் விஞ்ஞானியுடன் காதல் ஏற்பட்டது. ஆனாலும் கடைசி வரை கேத்தரீனுடன் வாழ்ந்தார்.


**மேன்ஹாட்டன் திட்டம்:**

கடந்த 1942ஆம் ஆண்டு அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புத்துறை ஆராய்ச்சி குழு தலைவராக, ஓபன்ஹைமர் படித்த ஹார்வர்டு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் நியமிக்கப்பட்டார். அப்போது அணுகுண்டு தயாரிக்கும் திட்டத்துக்கு அப்போதைய அமெரிக்க அதிபர் ஃபிராங்கிளின் டி ரூஸ்வெல்ட் ஒப்புதல் அளித்திருந்தார். அணுகுண்டு தயாரிக்கும் திட்டத்தில் இணைய ஓபன்ஹைமரை அவரது முன்னாள் பேராசிரியர் அழைத்தார். இத்திட்டத்தில் நியூட்ரான்களின் செயல்பாடுகளை கவனிப்பது ஓமன்ஹைமரின் பொறுப்பு. இந்த திட்டத்தை மேன்ஹாட்டன் என்ற பெயரில் அமெரிக்கா ரகசியமாக நடத்தியது.

இதற்காக உருவாக்கப்பட்ட லாஸ் அலாமாஸ் சோதனைக் கூடத்தின் முதல்இயக்குநர் ஓபன்ஹைமர். அணுகுண்டு ஆராய்ச்சி பணிகள், மூலப் பொருட்கள் கொள்முதல் போன்ற பணிகளை மேன்ஹாட்டன் அலுவலகம் கவனித்தது. அணுகுண்டு சோதனையை நியூ மெக்சிகோவின் டென்னசே பகுதியில் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. மான்ஹாட்டன் திட்டத்தை நியூ மெக்சிகோவின் பாலைவனப் பகுதிக்கு கொண்டு சென்றார் ஓபன்ஹைமர். பரிசோதனை முயற்சியாக தயாரிக்கப்பட்ட புளூடோனியம் குண்டுக்கு 'தி கெட்ஜெட்' என பெயரிடப்பட்டது. இதன் சோதனை 1945ஆம் ஆண்டு ஜூலை 16ஆம் தேதி அன்று நியூ மெக்சிகோவின் அலமோகோர்டோ பகுதியில் மேற்கொள்ளப்பட்டது.

இந்த குண்டு வெடித்ததை பார்த்த ஓபன்ஹைமருக்கு, பகவத் கீதையில் அவர் படித்த வாசகம்தான் நினைவுக்கு வந்தது. "இப்போது நான் உலகை அழிக்கும் எமனாகி விட்டேன்" என்பதுதான் அந்த வாசகம். சம்ஸ்கிருதத்தில் புலமை பெற்றிருந்த ஓபன்ஹைமர் பகவத் கீதை நூலை தனது மேஜையில் எப்போதும் வைத்திருந்தார். அதில் "மிகப்பெரிய இழப்பு ஏற்பட்டாலும், மகாபாரத போரில் அர்ஜூனன் தனது கடமையை நிறைவேற்ற போரிட்டார்" என தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனால் ஓபன்ஹைமரும் அர்ஜூனனைப் போல் நாட்டுக்கு தனது கடமையை செய்தார்.

'தி கெட்ஜெட்' குண்டு பரிசோதனைக்குப் பின்பு 'ஃபேட் பாய்' மற்றும் 'லிட்டில் பாய்' என்ற இரு அணு குண்டுகள் உருவாக்கப்பட்டு ஜப்பானின் ஹிரோஷிமா மற்றும் நாகசாகியில் வீசப்பட்டன. இந்த குண்டுகள் ஜப்பானில் ஏராளமான மக்களை கொடூரமாக கொன்றது ஓபன்ஹைமரின் மனதை வெகுவாக பாதித்தது. அதன்பின் அரசுக்காக மேலும் அணுகுண்டுகள் தயாரிக்க அவர் மறுத்து விட்டார். 'வெடிகுண்டுகள் தயா



ரித்ததன் கையில் ரத்த கறை படிந்ததை போல் உணர்வதாக அப்போதைய அமெரிக்க அதிபர் ட்ரூமேனிடம் ராபர்ட் ஓபன்ஹைமர் கூறினார்.

அதன்பின்பு அவருக்கு போருக்கு எதிரான எண்ணங்கள் வலுவடைந்தன. சோவியத் யூனியனுடன், அமெரிக்காவுக்கு இருந்த உறவு மோசமடைந்ததால், ஹைட்ரஜன் குண்டு தயாரிக்க அமெரிக்கா திட்டமிட்டது. இந்த நடவடிக்கை குறித்து வெளிப்படையாக விமர்சித்தார் ஓபன்ஹைமர்.

அதன்பின் இவர் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆதரவு தெரிவித்து நன்கொடைகளையும் வழங்கினார். ஆனால் அந்த கட்சியில் அவர் உறுப்பினராகவில்லை. அமெரிக்க அரசுடன் இவருக்கு முரண்பாடு அதிகரித்ததால், அமெரிக்க அணுசக்தி ஆணையத்துடன் ஓபன்ஹைமருக்கு இருந்த ஒப்பந்தம் ரத்தானது. கடந்த 1954ஆம் ஆண்டு இவர் அணுசக்தி ஆணையத்தின் விசாரணையையும் சந்திக்க நேர்ந்தது.

குற்ற உணர்வுடன் கடந்த 1960ஆம் ஆண்டு அவர் ஜப்பான் சென்று பொதுக் கூட்டங்களில் தனது செயலுக்காக வருத்தம் தெரிவித்தார். ஓபன்ஹைமரின் அணுகுண்டு கண்டுபிடிப்பு அமெரிக்கா, சோவியத் யூனியன் இடையே மிகப்பெரிய அணு ஆயுத போரை ஏற்படுத்தும் என அச்சம் உருவானது. ஆனால், அதை இரு நாடுகளும் ஒருவழியாக நிறுத்திக் கொண்டன. கடைசி காலத்தில் மிக வருத்தத்துடன் வாழ்க்கையை கழித்த ஓபன்ஹைமருக்க தொண்டையில் புற்று நோய் ஏற்பட்டது. இதனால் அவர் கடந்த 1967ஆம் ஆண்டு இறந்தார்.

---




**எம். அகிலேஸ்வரன் சித்தன்கேணி.**

**கேள்வி:** அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் மாத்திரம் கலந்துரையாடுவது போதுமானதல்ல எனவும் அது முழுநாட்டிலும் தாக்கம் செலுத்தும் விடயம் என்பதால் அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடி தீர்மானம் எடுக்க வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரி வித்திருக்கிறாரே?

**வியுக்தியார்:** அதைவிட அரசமைப்பின் 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் எண்ணம் தனக்கு இல்லை என்று நேரடியாகவே அவர் சொல்லியிருக்கலாம். அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடுவது சரி, அதற்காக பாராளுமன்றத்தில் இடம்பெற்றுள்ள கட்சித் தலைவர்களுடன் பேசப்போவதாக அறிவித்திருந்த அவர், கூட்டத்திற்கு அப்படிச் செய்ததாக தெரியவில்லை. யார் யாரெல்லாம் அதற்கு எதிரானவர்களோ அவர்களை எல்லாம் அழைத்திருந்த போதே அவர் எதனைச் சொல்ல வருகிறார் என்பது உங்களுக்கு புரிந்திருக்க வேண்டுமே.

---

**சபா. சிவநாதன், குரும்பசிட்டி, தெல்லிப்பழை.**

**கேள்வி:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் அல்லர் என சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** அவர் சொல்வதில் என்ன தவறிருக்கின்றது. அவர் சொல்வது சரி, கூட்டமைப்பினர் தாங்கள்தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று எப்போதாவது சொல்லியிருக்கிறார்களா? அவர் இப்படிச் சொல்வதன் மூலம் தான் சிங்கள மக்களின் ஏகப்பிரதிநிதி அல்ல என்றும் சொல்ல வருகிறார் போலும்.

---

**கந்தையா முகுந்தன் சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

**கேள்வி:** பாராளுமன்றத்தை மூடிவிட்டு நாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் மட்டும் ஒப்படைக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்திருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்.?

**வியுக்தியார்:** அதையும் யாருக்காவது விற்பதற்கு விலைபேசிவிட்டாரோ தெரியவில்லையே. நஷ்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்கள் எல்லாவற்றையும் தனியார் மயமாக்குவதற்குத்தானே இந்த அரசு முக்கியத்துவம் கொடுக்கின்றது.

---

**இரா. ஜெயரூபன், பூந்தோட்டம், வவுனியா.**

**கேள்வி:** இலங்கை நாட்டுக்குள் எந்த தீர்வும் சாத்தியமில்லை என்றும் இதனால் சுதந்திர தமிழீழமா இல்லையா என்று சர்வஜன வாக்கெடுப்பை நடத்துங்கள் என்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மாகாணசபை உறுப்பினருமான சிவாஜிலிங்கள் கூறியிருப்பதை கவனித்தீர்களா?

**வியுக்தியார்:** எண்பதுகளின்ஆரம்பத்திலும் இப்படித்தான், எந்தத்தீர்வும் சாத்தியமில்லை என்று கூறிக் கொண்டு ஆயுதத்தைக் கையில் எடுத்தவர்களில் அவரும் ஒருவர்தான். அந்த ஆயுதத்தால் பெறமுடியாததை வாக்கெடுப்பால் பெறமுடியும் என்று நம்புகின்றார் மனுசன். அவர் செய்கின்ற விடயங்கள், சொல்கின்ற விடயங்களை பார்க்கின்றபோது நகைச்சுவையாக இருந்தாலும், அவர் மனுசன் சொல்கின்ற செய்கின்ற அனைத்தையும் விவாசமாக நம்பிக்கொண்டே செய்வார்.

அமெரிக்க தேர்தலில் கில்லரி கிளின்ரன் போட்டியிட்டபோது அவர் வெற்றி பெற வேண்டுதல் வைத்து நல்லூரில் ஆயிரம் தேங்காய் களை அடித்து வேண்டுதல் விடுத்தார். அவரைப் பொறுத்தவரை அப்படி கில்லரி வென்றால் அதனால் தமிழ் மக்களுக்கு நன்மைகிடைக்கும் என்ற நம்பிக்கை யில்தான் செய்தார். அதனால் அவர் நம்பிக்கையில் நாம் ஏன் கருத்துச் சொல்லுவான் என்று பார்க்கின்றேன்.

---

**எஸ். செந்துஜன், ராசவீதி, கோப்பாய்.**

**கேள்வி:** இந்தியாவின் பாண்டிச்சேரியில் ஆயுதம் வழங்காத பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதை போன்று 13ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள பொலிஸ் அதிகாரத்தை நடைமுறைப்படுத்தலாம் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி. வி. விக்னேஸ்வரன் தெரிவிக்கின்றாரே?.

**வியுக்தியார்:** எல்லோரும் மாகாணசபைகளுக்கு தேர்தல் நடாத்தவேண்டும் என்று கோரிக்கை வைத்த போது அவர், மாகாணசபைகளுக்கு தேர்தல் நடத்தப் படும்வரை அவற்றை நிர்வகிக்க ஆலோசனைச் சபை ஒன்றை அமைக்கவேண்டும் என்று கோரிக்கை வைத்தார். இப்போது எல்லோரும் பொலிஸ் அதிகாரம் வேண்டும், என்று கேட்கின்றபோது அது பிரச்சினைக் குரியதாக மாறியது. அதனால் பொலிஸ் அதிகாரத்தை பின்னர் பார்ப்போம், மாகாணசபை தேர்தலை நடத்துங்கள் என்கின்றபோது, பாண்டிச்சேரி பாணி பொலிஸ் அதிகாரத்தை கேட்கிறார். உடனே ரணிலும் காலம் கடத்த கிடைத்த சந்தர்ப்பத்தை தவறவிடாமல், அதனை பற்றிப்பிடிக்கத் தொடங்கிவிட்டார். விக்கினேஸ்வரன் ஐயா எப்படியும் ரணிலின் திட்டப்படி தேர்தல் நடத்துவதை தள்ளிப்போட சந்தர்ப்பம் கொடுப்பதிலேயே கவனமாக இருக்கிறார் போலும்.

# நிறம்மாறும் ஓணான்கள்

ஆசி கந்தராஜா



அந்த முடிவில் அவருக்கு உடன்பாடில்லை. முடிவைத் தீர்மானித்தவர்களில் அவரும் ஒருவர் என்பது மனதைச் சுட்டெரித்தது. ஒத்துப்போவதென்பது போலிகளுக்குத் துணைபோவதுதானோ?

அபொர்ஜினி என்று அழைக்கப்படும் ஆஸ்திரேலிய ஆதிவாசிகளுக்கு அரச நிறுவனங்கள், மற்றும் கல்விச்சாலைகளில் பல சலுகைகள் உண்டு. ஆனால் இந்த உதவிகள் உண்மையான ஆதிவாசிகளைச் சென்றடைவதில்லை என்ற கசப்பான உண்மை, பலருக்குத் தெரிவதில்லை. இதற்கான 'சட்டப் புழைவாய்'களைப் புரிந்து கொள்ள, பரமலிங்கத்துக்கு அதிக காலம் செல்லவில்லை. சொந்த மண்ணில் உரிமைகள் மறுக்கப்பட்டு, இனக் கலவரம் என்ற பெயரால் உடமைகள் கொள்ளையடிக்கப்பட்டு, அகதியாக ஆஸ்திரேலியா வந்தவர் அவர். அந்த வேதனை இன்றும் அவரை வாட்டுவதால், ஆதிவாசிகளுக்கு இழைக்கப்படும் அநீதிகளை, அவரால் பொறுக்க முடியவில்லை.

ஆஸ்திரேலிய ஆதிவாசிகள் மத்தியிலே பல பேச்சு மொழிகள் உண்டு. இவர்கள் ஆதிகாலத்தில் தனித் தனி குழுக்களாக, தொடர்பின்றி வாழ்ந்ததினால் இது ஏற்பட்டிருக்கலாம். இவர்களின் தோற்றத்தில் தமிழ்ப் பழங்குடி மக்களின் சாயல், மற்றும் சடங்கு சம்பிரதாயம் என்பன பெரிதும் ஒத்திருப்பதுடன், பேச்சு மொழிகளில் தமிழ் மொழியின் வேர்ச் சொற்களும் கலந்திருக்கின்றன என்பதைப் பரமலிங்கம் நாளடைவில் புரிந்து கொண்டார். இதனால், அகண்டு பரந்த ஆஸ்திரேலியாக் கண்டத்தின் ஒரு மூலையிலே, திராவிட தேசமொன்றைக் கற்பனை பண்ணி மகிழ்ந்த காலங்களும் உண்டு.

பரமலிங்கம் பணிபுரியும் கல்விச்சாலைக்கு முதல் முறையாக ஒரு ஆதிவாசி இளைஞன் படிக்க வந்தான். சப்பை மூக்கும் இருண்ட உருவமுமாக அவன் தம்பித்துரை அண்ணரின் மகன் இராசதுரையை அச்சு அசலாக ஒத்திருந்தான். அடுத்த ஆண்டு அதே சாயலில் இன்னும் சிலர் வந்தார்கள். வந்தவர்கள் அனைவரும் கல்வி வசதிகளற்ற சூழலில், புதர்களின் மத்தியில் வாழ்ந்தவர்கள் என, அழைத்து வந்த செஞ்சிலுவைச் சங்க அதிகாரி சொன்னார். இதனால் விரிவுரைகளுக்கு அப்பால், அறிவியல் பாடங்களில் அவர்களுக்கு உதவி தேவைப்பட்டது. இந்தப் பணிக்கு கல்விச்சாலை பரமலிங் கத்தை நியமித்தது என்பதிலும்பார்க்க, கேட்டுப் பெற்றுக் கொண்டார் என்பதே பொருத்தமாக இருக்கும். இதற்கும் காரணம் உண்டு. கல்விச்சாலையில் அந்த வருடம் கொண்டாடப்பட்ட ஆஸ்திரேலிய தினக் கொண்டாட்டத்தில் ஆதிவாசிகளின் நடனம் இடம் பெற்றது. கன்னத்திலும் நெற்றியிலும், உடம்பிலும் திருநீற்றால் குறிவைப்பது போலன்று, வெள்ளை நிற மண்ணைக் குழைத் துப் பூசிக்கொண்டு, கையிலே யூக்கலிப்ரஸ் மரக் கிளைகளைகளுடன் ஆதிவாசிகள் அரங் கிற்கு வந்தார்கள். டிட்ஜெரிடூ எனப்படும் நாதஸ்வரம் போன்ற, குழாய் வடிவ மரக் கருவி இசை எழுப்ப, தாளக் குச்சிகள் தாளம் போட்டன. வாத்திய இசையும் தாளமும் ஒன்றிணைந்த ஒரு உச்ச நிலையில், ஆட்டக்காரர்கள் பார்வையாளர்கள் மத்தியில் ஆடத் துவங்கினார்கள்.

பரமலிங்கம் சிறு வயதில் பாட்டுக் கரவடியும் கரகமும் பழகி, ஊர்க் கோவில்களில் ஆடி அசத்தியவர். ஆதிவாசிகளின் தாளத் துக்கு கால்கள் துருதுருக்க, தன்னை மறந்து அவரும் ஆடத்துவங்கினார். இதைக் கண்ட வெள்ளையர்கள் அதையும் இதையும் முடிச்சுப் போட்டு கொமன்ற் அடித்துச் சிரித்தார்கள். வேறு சிலர் பரமலிங்கத்தின் ஆட் டத்தை ரசித்தார்கள். இதிலிருந்து ஆசிவாசிகளுடனான அதீத நட்பு பரமலிங்கத்துக்கு ஆரம்பமாகியது.

அடுத்த சில ஆண்டுகளிலே, ஆதிவாசிகளெனத் தம்மை அடையாளப் படுத்திய கலப் பின வெள்ளை நிற மாணவர்கள் சிலரும் பரமலிங்கத்தின் விரிவுரைக்கு வந்தார்கள். சப்பை மூக்கு மட்டுமே இவர்களின் அபொர் ஜினி அடையாளம். தோற்றம் அச்சுஅலாக வெள்ளையர்களைப் போல இருந்தது. பரமலிங்கத்தைச் சந்திக்க வந்த ஆதிவாசிகளின் நலன்களைப் பேணும் இளைஞன் ஒரு வன், இவர்கள் பற்றிய வர்த்தமானத்தைக் கதையோடு கதையாகச் சொன்னான்.

வெள்ளையர்களுக்கு காமம் தலைக்கேறும் போதெல்லாம் அதற்கு வடிகால் அமைக்க முடியாதவர்கள், ஆதிவாசி பெண் களுடன் பலவந்தமாக வல்லுறவு கொண்ட தால் பிறந்தவர்களே இவ் வெள்ளைத் தோல் குழந்தைகள். கறுப்பு நிற ஆதிவாசித் தாயுடன் இக்குழந்தைகள் வாழ்வதை, வெள்ளையர்கள் விரும்பவில்லை. இதனால், கலப்பினக் குழந்தைகள், ஆதிவாசி பெற்றோரிடமிருந்து களவாடப்பட்டார்கள் அல்லது பலவந்தமாகப் பிரிக்கப்பட்டார்கள்.

பரமலிங்கத்திடம் இயல்பாகவே இருந்த விடுப்புப் பிடுங்கும் குணம் இங்கும் மெல்லத் தலைகாட்டியது.

குழந்தைகளின் தாய் அபொர்ஜினியாகவும், தந்தை முன்பின் தெரியாத வெள்ளை யனாகவும் இருந்ததுபோல, தாய் வெள்ளைக் காரியாகவும் தந்தை அபொர்ஜினியாகவும் இருந்ததுண்டா? எனக்கேட்டார்.

பரமலிங்கத்தின் இந்தக் கேள்விக்கு அதிரச் சிரித்தான் இளைஞன். அவன் பசுமைக்கட்சியின் தீவிரமான அங்கத்தவன். கம்யூனிசக் கொள்கைகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்கும் வெள்ளை இனத்தவன்.

குடியேறிய வெள்ளைக்காரிகள், தங்களை எஜமானிகளாகவும் புனிதமான வர்களாகவும் கருதினார்கள். கறுப்பு நிறம், அவர்களுக்கு அழுக்கின் அடையாளம். அவர்கள் எப்படி அபொர் ஜினி ஆணுடன் உடலுறவு கொண்டிருக்க முடியும்? அதுமட்டுமல்ல குடியேறிய வர்களுள் அதிக எண்ணிக்கையில் ஆண்கள் இருந்ததினால், வெள்ளைக்காரிகள் உடலுறவுக்காக வெளியே போக வேண்டிய தேவை இருக்கவில்லை, என்றான்.

களவாடப்பட்ட கலப்பினக் குழந்தைகளுக்கு என்ன நடந்தது? எனத் தொடர்ந்தும் கொக்கிபோட்டார் பரமலிங்கம்.

இவர்கள் தூர இடங்களிலுள்ள விடுதிகள், மற்றும் தேவாலயங்களில், பெற்ற தாயுடன் தொடர்பற்ற வகையில் வளர்க்கப்பட்டார்கள். அங்கு இவர்களுக்கு ஆங்கிலக் கல்வி புகட்டப்பட்டு, ஆங்கில கலாசாரத் தில் வாழப் பழக்கப்பட்டார்கள். கலப்பினக் குழந்தைகள் மேற்கத்திய சூழலில் வளர்ந்து கிறிஸ்தவர்கள் ஆனார்கள். இவர்களுள் எவருமே பின்னர் கறுப்பு நிற, அபொர்ஜினி சமூகத்தில் கலந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் ஆங்கிலேயர்களை மணந்து ஆங்கிலேயர்களாகவே வாழத் துவங்கினார்கள். இவர்களுக்கு இருந்த அபொர்ஜினி அடையாளம் சப்பை மூக்கு மட்டுமே. நிறம், பேச்சுமொழி உட்பட மற்றவையெல்லாம் பெரும்பாலும் வெள்ளையர்களதே என்றவன் சற்று நிறுத்தி, மேலும் தொடர்ந்தான்.

இதில் சுவாரஸ்யமான விஷயம் என்ன வென்றால், 'களவாடப்பட்ட குழந்தைகள்' என அழைக்கப்பட்ட இவர்களின் சந்ததியினரே, பின்னர் வெள்ளையர்களின் அரசுக்கு தலையிடியாய் இருப்பார்களென, வெள்ளையர்கள் அப்போது நினைக்கவில்லை, எனப் புதிர்போட்டான்.

அதெப்படி..? பரமலிங்கம் உஷாரானார்.

சர்வதேச அழுத்தங்களைத் தாக்குப் பிடிக்க முடியாத வெள்ளையர்களின் அரசு, ஆதிவாசிகளுக்குப் பல சலுகைகளை அள்ளித் தெளித்தார்கள். ஆனால் இன்று வரை இந்தச் சலுகைகளை அநுபவிப்பது பெரும்பாலும் கலப்பின அபொர்ஜினி சந்ததியினரே.

இது எப்படிச் சாத்தியமாகிறது? புரியும் படி விளக்கமாகச் சொல்லு எனத் தூபம் போட்டார் பரமலிங்கம். இது சம்பந்தமாக கல்விச்சாலை மட்டத்திலே நடப்பனவற்றை, பரமலிங்கம் அறிவார். இருப்பினும் தூய வெள்ளை இன இளைஞன், இதுபற்றி என்ன நினைக்கிறான்? என்பதை அறிய, இவ்வாறு கேட்டார்.

கலப்பின அபொர்ஜினி சந்ததியிலுள்ள பலருக்கு, முப்பாட்டி அல்லது கொள்ளுப் பாட்டி மாத்திரம் கறுப்புநிற, தூய அபொர்ஜினி பெண்ணாக இருப்பார். ஆனால் பாட்டியின் சந்ததியினர் வெள்ளையர்களை மணம் முடித்திருப்பார்கள்..!'

ஓ...! என ஆச்சரியப்பட்டார் பரமலிங்கம்.

இதிலுள்ள இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், இவர்கள் அனைவரும் தங்கள் இரத்தத்தில் இன்னமும் அபொர்ஜினி மரபணு இருப்பதாக உரிமை கோரி, அங்கீகாரம் பெற்றுள்ளதே.

இதனால் இவர்களுக்கு என்ன லாபம்?

மேற்கத்திய கலாசாரத்தில் கல்வி கற்று, முற்றுமுழுதாக ஆங்கிலேயர்களாக வாழும் இவர்களுக்கு, மேலதிகமாக அபொர்ஜினி சலுகைகளும், கொடுப்பனவுகளும் கிடைக்குமல்லவா?

உஷாரான ஆக்கள்தான்! ஆஸ்திரேலிய அரசு இதை அங்கீகரித்ததா?

ஆம், போராடிப் பெற்றுக் கொண்டார்கள். அவர்களுள் சிறந்த சட்ட வல்லுனர்கள் இருந்தார்கள். இவர்களே அபொர்ஜினி மக்களை பல சபைகளில் பிரதிநிதித்துவப்படுத்தினார்கள். அதனால் அங்கீகாரம் பெறுவது இலகுவாயிற்று. அது மட்டுமல்ல, இவர்களே அபொர்ஜினிகளின் உரிமைகளுக்காக உரத்துப் பேசி அரசியல் செய்தார்கள். இதில் பெரும்பாலும் இவர்களின் நன்மைகளே மேலேங்கி உள்ளன.

ஆனால்...?

ஆனால் என்ன? இது மனித சுபாவம் தானே என கதையை வளர்த்தார் பரமலிங்கம்.

இது ஒறிஜினல் அபொர்ஜினிகளை, இன்று வரை பாதிக்கின்ற விஷயம். பூர்வகுடி மக்களுக்காக, அரசாங்கத்தால் வழங்கப்படும் கல்விக்கான புலமைப் பரிசில்களையும், வேலைவாய்ப்பு முன்னுரிமைகளையும் பெரும்பாலும் தட்டிச் செல்வது இவர்களே. இது உங்களுக்குத் தெரியாத விஷயமா?

இளைஞன் சொன்னது அனைத்தும் உண்மை என்பதை பரமலிங்கம் அவ்வப்போது அறிந்துகொண்டவர். இம்முறை கல்விச் சாலையில் கோரப்பட்ட பூர்வ குடிமக்களுக்கான கல்வி புலமைப் பரிசில்களுக்கு (Scholarship) ஏராளமான விண்ணப்பங்கள் வந்திருந்தன. இவற்றுள் பெரும்பாலானவை, அபொர்ஜினி என உரிமைகோரும் கலப்பினத்தவர்களதே. கற்பூரம் அணைத்துச் சத்தியம் செய்தாலும், அவர்கள் அபொர்ஜினி என்று நம்ப முடியாதவர்கள். ஆனாலும் தாங்கள் ஒரு தூய அபொர்ஜினித் தாயின் சந்ததி என்று சான்றிதழ் சமர்ப்பித்தார்கள்.

ஆங்கிலச் சூழலில், வசதியாக வாழ்ந்த கலப்பின அபொர்ஜினிகளின் கல்விச் சான்றிதழ்களுக்கு முன்னால், புதர்களுக்கு மத்தியிலிருந்து வந்த 'கறுப்பு' அபொர்ஜினி மாணாக்கர்களின் விண்ணப்பங்கள் அடிபட்டுப்போயின.

கல்விச் சாலையில், பூர்வ குடிமக்களான அபொர்ஜினிகளின் புலமைப் பரிசில்களைத் தீர்மானிக்கும் நிர்வாக சபையில், இம்முறை பரமலிங்கமும் ஒருவர். நிர்வாக சபை தீர்மா னித்த முடிவில், அவருக்கு சிறிதும் உடன்பாடில்லை. இருந்தாலும் கொடுக்கப்பட்ட சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களின் படி மற்றவர்களுடன் அவர் ஒத்துப்போக வேண்டியதாயிற்று. இதனால் புலமைப் பரிசில் கொடுப்பனவுகள், மற்றும் சலுகைகள் அனைத்தும், விதிகளின் பிரகாரம் கலப்பின அபொர்ஜினிகளுக்கே கொடுக்கத் தீர்மானித்தார்கள். இதுவே பரமலிங்கத்தின் மனவேதனைக்கும் தூக்கமின்மைக்கும் காரணமாயிற்று.

தாங்கள் தாழ்த்தப்பட்டவர்கள், அதனால் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளோம் என, உலக நாடுகளில் உரிமை கோரிக் கூப்பாடு போடுபவர்கள் அனைவரும் அதைவைத்து ஆதாயம் அடைந்தவர்களே, என்பார் சிட்னியில் வாழ்ந்து மறைந்த முதுபெரும் எழுத்தாளர் எஸ்பொ. இது ஆஸ்திரேலிய கலப்பின ஆதிவாசிகளுக்கும் எப்படி பொருந்துகிறது என பரமலிங்கம் நினைத்துப் பார்த்தார்.

# சீனாவின் தெற்காசிய ஆதிக்கத்தை நிறுத்த ஜப்பானில் நேட்டோ அலுவலகம் திறப்பு !

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் திறக்கப்பட உள்ள புதிய நேட்டோ அலுவலகம் சீனாவை நோக்கிய நீண்ட கால திட்டமிடல் என்பதே உண்மையாகும். சீனா தாய்வானைக் கைப்பற்ற முயற்சிக்குமானால் இப்பிராந்தியத்தில் ஜப்பானே அமெரிக்காவின் முக்கியமான தளமாக இயங்கும்.

நேட்டோ அமைப்பின் பிராந்திய அலுவலகமொன்றை திறக்க ஜப்பான் முழுமையாக தயாராகுவதாக செய்திகள் தற்போது வெளிவந்துள்ளன. ஜப்பானில் புதிய அலுவலகத்தைத் திறப்பதன் மூலம் ஆசிய-பசிபிக் பகுதியில் நேட்டோ தனது இருப்பை விரிவுபடுத்துகிறது.

இதன் மூலம் ஆசிய பிராந்தியத்திலான நேட்டோவின் விரிவாக்கம் இங்குதான் ஆரம்பிக்கும். உக்ரெய்ன் போரின் விளைவாக ஜப்பானை நேட்டோ அங்கத்தவராக்கும் முயற்சியின் முதற்படி எனக் கூடக் கருதலாம்.

நேட்டோவுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம், டோக்கியோ அதன் வளர்ந்து வரும் இராணுவ உறுதிப்பாடு, கூட்டுத் தற்காப்பு என்ற அரசியலமைப்பு கருத்துடன் ஒத்துப்போக செய்யும்.

**கொரிய வளைகுடா ஆதிக்கம்:**

கொரிய வளைகுடாவில் அமெரிக்காவின் அணுவாயுத பலத்துடன் தம் ஆதிக்கம் நிலைபெறவேண்டும் என்பதிலேயே பென்டகன் கண்ணும் கருத்துமாக உள்ளது. இதன் மூலம் வடகொரியா மட்டுமல்ல சீனாவின் தென்னாசிய ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தலாம் என்பதுவே அவர்களது நோக்கம்.

மேலும், சீனாவின் எழுச்சி கண்டங் கடந்து ஐரோப்பிய பாதுகாப்பில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் எனவும் நேட்டோ அச்சமுறுகிறது. இதேவேளை பெய்ஜிங் வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் மாவோ நிங், டோக்கியோவில் புதிய தொடர்பு அலுவலகத்தை திறப்பதற்கான திட்டங்களை மிக காட்டமாக விமர்சித்துள்ளார்.

ஆசிய-பசிபிக் பகுதியில் நேட்டோவின் தொடர்ச்சியான கிழக்கு நோக்கிய விரிவாக்கம், பிராந்திய விவகாரங்களில் தலையிடுதல், பிராந்திய அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை அழிக்கும் முயற்சிகள் என்பன, இப்பிராந்தியத்தில் உள்ள நாடுகளில் இருந்து அதிக விழிப்புணர்வுக்கு அழைப்பு விடுக்கிறது என்றும் தெரிவித்தார்.

**சீனாவை சுற்றி வளைக்கும் அமெரிக்கா:**

மேலும், வாஷிங்டனின் அழுத்தத்தின் கீழ், டோக்கியோ மற்றும் சியோல் பல ஆண்டுகளாக, அமெரிக்க - சீனா இரு நாடுகளுக்கு இடையே நிலவும் பதட்டங்களைத் தணிக்க வேலை செய்து வந்தன.

கடந்த மார்ச் மாதம் டோக்கியோவில் கிஷிடாவிற்கும், தென் கொரிய அதிபர் யூன் சுக்-யோலுக்கும் இடையே நடந்த உச்சிமாநாட்டைத் தொடர்ந்து, இரு தரப்பினரும் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கும், இராணுவ உளவுத்துறை பகிர்வு ஒப்பந்தத்தை இயல்பாக்குவதற்கும், அமெரிக்காவுடன் இணைந்து மேலும் இராணுவப் பயிற்சிகளை மேற்கொள்வதற்கும் ஒப்புக்கொண்டனர்.

இங்கிலாந்து உள்ளிட்ட பிற நாடுகளுடனும் ஜப்பான் தனது ஒத்துழைப்பை வலுப்படுத்தி வருகிறது. கடந்த ஜனவரி மாதம் லண்டனுடன் ஒரு பரஸ்பர அணுகல் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட டோக்கியோ, பிலிப்பைன்ஸுடன் இதேபோன்ற ஒப்பந்தத்தை எட்டுவதற்கு பரிசீலித்து வருகிறது.

2014 ஆம் ஆண்டில், அப்போதைய ஜப்பானிய ஷின்சோ அபே நிர்வாகம் 'கூட்டு தற்காப்பு" என்று அழைக்கப்படுவதை அனுமதிக்க அரசியலமைப்பின் "மறு திருத்தத்தை" அறிவித்தது. அடுத்த ஆண்டு, ஜப்பானின் ஆளும் தாராளவாத ஜனநாயகக் கட்சி இந்த மாற்றத்தை குறியீடாக்க பாராளுமன்றத்தில் ஒரு சட்டத்தை இயற்றியது.

டோக்கியோவின் வாதப்படி, இது ஜப்பானை "தற்காப்பு" என்ற பெயரில் ஒரு நேச நாட்டுடன் இணைந்து யுத்தத்துக்கு முகங் கொள்ள அனுமதிக்கிறது.

**லித்துவேனியா நேட்டோ உச்சி மாநாடு:**

நேட்டோவும் ஜப்பானும் ஜூலை 11-12 தேதிகளில் லித்துவேனியா தலைநகர் வில்னியஸ் நகரில் நடைபெற்ற





நேட்டோ உச்சி மாநாட்டில் கலந்து கொண்டன. ஜப்பான், தென் கொரியா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகள் இந்த உச்சிமாநாட்டில் பங்கேற்றன.

நேட்டோவின் ஆசிய-பசிபிக் கூட்டாளிகள் அல்லது யீ4 என அழைக்கப்படும் இந்த நான்கு நாடுகளுக்கும் மற்றும் நேட்டோவிற்கும் இடையே அதிகரித்த ஒத்துழைப்பு தொடர்புகளை டோக்கியோ இணைப்பு அலுவலகம் எளிதாக்கும் என நம்பப்படுகிறது. கடந்த ஆண்டு மாட்ரிட்டில் நடந்த நேட்டோ உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள இந்த நான்கு நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

> **ஜப்பானில் நேட்டோ அலுவலகம் திறப்பு என்பது, சீனாவின் தென்னாசிய ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தவே எனும் அர்த்தமே புலப்படும். ஆயினும் டோக்கியோவில் நேட்டோ அலுவலகம் மூலமாக ஆசியாவை நோக்கி விரிவாக்கம் அடைகின்றதா என்றும் ஐயப்படலாம்.**

வாஷிங்டனும் தென் கொரியாவும் சமீபத்தில் வாஷிங்டனின் அணு ஆயுதக் களஞ்சியத்தைத் திட்டமிடல் மற்றும் பயன்படுத்துவதில் அதிகரித்த ஒத்துழைப்புக்களை அறிவித்துள்ளன.

அதிகரித்து வரும் அணுஆயுதப் போர் அச்சுறுத்தலுக்கு மத்தியில், ஜி7 நாடுகளின் தலைவர்கள் ஹிரோஷிமாவில் கடந்த மே மாதம் ஒன்று கூடி அளவளாவினர்.

**ஆசிய நேட்டோ விரிவாக்கம் :**

நேட்டோ டோக்கியோவில் ஒரு தொடர்பு அலுவலகத்தை திறக்க உத்தேசித்துள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ள வேளையில் இந்த அலுவலகம், ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் நேட்டோவின் முதல் அலுவலகமாக இருக்கும். அத்துடன், சீனாவிற்கு எதிரான அமெரிக்க தலைமையிலான போருக்கான தயாரிப்பில், நேட்டோ அமைப்பின் வளர்ந்து வரும் பங்கை இது பிரதிபலிக்கிறது. டோக்கியோவும் நேட்டோவும் இதற்கான திட்டங்களை உறுதிப்படுத்தியுள்ளன.

இந்த நடவடிக்கை ஜப்பான் நேட்டோ கூட்டணியில் இணைகிறது என்று அர்த்தம் இல்லை என்றாலும், டோக்கியோவில் உள்ள புதிய அதன் அலுவலகம் சீனாவுக்கு வழங்ப்படும் பாரிய அழுத்தமாகவும் வெளிப்படுகிறது.

ஜப்பான் போன்ற நாடுகளுடனான நேட்டோவின் ஒத்துழைப்புடன், தாய்வான் மீதான "ஒரே சீனா" கொள்கையை சவால் செய்வதன் மூலம் பெய்ஜிங்கை கட்டுப்படுத்தும் முயற்சிகளானது போர் ஆபத்தை தணிக்கவும் சாத்முயம் உண்டு.

அதேவேளை, டோக்கியோவில் அலுவலகம் திறப்பு என்பது ஒரு பரந்த நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாகும். இதில் அமெரிக்கா சீனாவை சுற்றி வளைக்கும் வகையில், இப்பிராந்தியத்தில் தொடர்ச்சியான கூட்டணிகளை உருவாக்கி ஒருங்கிணைத்து வருகிறது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகியவற்றை உள்ளடக்கிய நாற்கர பாதுகாப்பு கூட்டணி (குவாட்) மற்றும் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவைக் கொண்ட யுருமுருளு கூட்டணி ஆகியவை இதில் அடங்கும்.

**ரஷ்யாவின் எல்லைகளில் நேட்டோ:**

இரண்டாம் உலகப் போருக்குப் பின் மேற்கு ஐரோப்பாவைப் பாதுகாக்கவென ஏப்ரல் 4, 1949 இல் ஆரம்பிக்கப்பட்டது இந்த நேட்டோ எனப்படும் வட அத்லாந்திக் ஒப்பந்த அமைப்பு ஆகும். அப்போது இது "வாஷிங்டன் ஒப்பந்தம்' எனவும் அழைக்கப்பட்டது. ஆரம்பத்தில் இவ்வமைப்பில் பிரித்தானியா, பிரான்ஸ், நெதெர்




லாந்து, பெல்ஜியம், லக்ஸம்பேர்க் ஆகியவே அங்கத்துவ நாடுகளாக இருந்தன.

இரண்டாம் உலகப் போரில் ஜேர்மனியைத் தோற்கடிக்க ஸ்டாலினின் சோவியத் படைகள் பெருமுதவி செய்தன.

இருந்தும் மேற்கு உலகம், சோவியத் குடியரசைத் தொடர்ந்தும் நம்பாமல், சோவியத் குடியரசின் தாக்குதலைச் சமாளிக்க நேட்டோ நாடுகளால் இயலாது என்ற காரணங்களைக் கூறிக்கொண்டு அமெரிக்காவும் கனடாவும் அவ்வருடமே நேட்டோவில் இணைந்தன.
இப்போது அதில் 32 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

1991 இல் கோர்பச்சேவின் தலைமையில் சோவியத் குடியரசு உடைத்துத் தகர்க்கப்பட்டபோது நேட்டோவின் தேவை இனி இல்லை எனவும் கிழக்கு ஜேர்மனியைத் தாண்டி நேட்டோ விரிவாக்கம் மேற்கொள்ளப் படமாட்டாது எனவும் உத்தரவாதம் வழங்கப்பட்டது.

**சீனாவின் பதில் என்ன ?**



ஜப்பான் மற்றும் நேட்டோ ஆகியவை தங்கள் ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக, இணைய அச்சுறுத்தல்கள், சீர்குலைக்கும் தொழில்நுட்பங்கள் மற்றும் தவறான தகவல் நடவடிக்கைகள் என்பனவற்றில் இணைந்து செயல்படும் என அறிவித்துள்ளன. ஏகாதிபத்திய எதிர்ப்பு, போர் எதிர்ப்பு கண்ணோட்டங்கள் உட்பட "தவறான தகவல்களை" அணுகுவதை தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்களைத் தடுக்கும் அதே வேளையில், இணையம் மற்றும் சமூக ஊடகங்கள் ஏகாதிபத்திய பிரச்சாரத்தை பரப்புவதற்கு பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதில் இருதரப்பினரும் ஒன்றிணைந்து செயல்படுவார்கள் என்பதாகும்.

தென் கொரியா, பிலிப்பைன்ஸ், ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுடன் ஒப்பந்தங்களைச் செய்வதன் மூலம் இராணுவ ஒற்றுமை விடயங்கள், தளபாடங்களைக் கையாள்தல், நடவடிக்கைகளின்போது ஆதரவு தருதல் என இப்பிராந்தியத்தில், சீனாவின் தென்னாசிய ஆதிக்கத்தை கட்டுப்படுத்த அமெரிக்கா முயல்கிறது. ●

# திருக்குறள்மீது கைவைத்து சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார் சத்யசங்கரி

**கனடா மூர்த்தி**



கனடிய பிரதமர் ஜஸ்ரின் ட்டுடோவின் அரசாங்கத்தில் "முடிக்குரியோர்-பூர்வகுடியினர் உறவுகள்" அமைச்சராக (Minister of Crown-Indigenous Relations) "சத்யசங்கரி" எனும் அழகிய இயற்பெயர் கொண்ட ஈழத்தமிழ்க் கனடியரான ஹரி ஆனந்தசங்கரி நியமிக்கப்பட்டுள்ளார். கனடாவில் அமைச்சராகியிருக்கும் முதலாவது ஈழத்தமிழர் அவராகும்.

திருக்குறள்மீது கைவைத்து சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

கனடாவின் பூர்வகுடி மக்களுடன் இன்றைய நவீன கனடா கொண்டிருக்க வேண்டிய நல்லிணக்கத்தை முன்னெடுத்துச் செல்வது அவருக்குத் தரப்பட்டிருக்கும் வேலையாகும்.

கனடாவின் பூர்வகுடியின மக்கள் ஒரேவகையானவர்கள் அல்ல.. பல்வேறு குழுமங்கள் அவர்களிடையே உண்டு. ஒவ்வொரு குழுமமும் அவர்களுக்கேயுரிய தனித்துவமான வரலாறுகள் மொழிகள் கலாச்சார நடைமுறைகள் மற்றும் ஆன்மீக நம்பிக்கைகள் கொண்டவையாக இருக்கின்றன.

பூர்வகுடியின மக்களின் மூன்று இனக்குழுக்களை கனேடிய அரசியலமைப்பு அங்கீகரித்துள்ளது. (i) முதற்குடிகள் (First Nations), (ii) இன்யூட் (Inuit), (iii) மெடிஸ் (Métis) என்பனவே அவையாகும் (ஈழத்தமிழர்கள் (i)"தமிழீழநிலத்தமிழர்கள்", (ii)"முஸ்லிம்கள்", (iii)" மலையகத்தமிழர்கள்" என இருப்பதுபோல.)

முடிக்குரியோர் - பூர்வகுடியினர் உறவுகள் அமைச்சரின் பணியானது பூர்வகுடியின மக்களுடன் இணைந்து "கனடாவின் தேசியம் சார்ந்த ஒருமைப்பாடு", "நிர்வாக முறைமையில் இணக்கப்பாடு", "பூர்வகுடிகளுக்கான அங்கீகாரத்துடனான உறவு மேம்பாடு" என்பவற்றை கவனிப்பதாகும்.

இது ஒரு சிக்கலான பணியுமாகும். 'பூர்வகுடியினர்' சமீப காலம்வரை பல்வேறு குற்றச்சாட்டுகளை 'முடிக்குரியோர்' மீது வைத்து வருகின்றனர். பூர்வகுடிகளுடனான 'அதிகாரப்பரலாக்கம்' முதல் 'காணாமல் ஆக்கப்பட்டோர்' பிரச்சனைவரை பல பிரச்சினைகள் இன்று கொதிநிலையில் காணப்படுகின்றன.

புத்தம் புதிய அமைச்சரால் இவற்றில் எத்தனை பிரச்சனைகளை எந்த அளவிற்கு கையாள முடியும் என்பதும் கேள்விக்குறியே. இலங்கையின் மூத்த அரசியல்வாதியும் சாணக்கியருமான வீ.ஆனந்தசங்கரியின் மகன் தனது பொறுப்புக்களை உணர்ந்து பணியாற்றுவார் என்றாலும் ஹரி ஆனந்தசங்கரிக்கு கிடைத்திருக்கும் கால அவகாசம் அடுத்த தேர்தல் வரும்வரை மட்டுப்படுத்தப்பட்டதாயும் உள்ளது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்த தேர்தலை மனதில் கொண்டே ஹரி ஆனந்தசங்கரி உட்பட புதிய 7 அமைச்சர்களை பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ நியமித்திருக்கிறார் என்ற கருத்தும் தற்போது தெரிவிக்கப்படுகிறது. அதில் உண்மை இல்லாமலில்லை. சரிந்து வரும் தனது லிபரல் கட்சிக்கான 'செல்வாக்கை' உயர்த்தும் வகையில் 'வாக்கை' பெற வைக்கக்கூடியவர்களை தேர்ந்தெடுத்து முடிசூட்ட வேண்டிய தேவையும் ஜஸ்ரினுக்கு உள்ளது.

ஹரி ஆனந்தசங்கரி அமைச்சராக்கப்பட்டதற்கு இன்னொரு பக்கமும் உண்டு: சிறிலங்கா அரசியல்வாதிகள் பலர் சமீப காலமாக "தன் பூர்வகுடிகளுக்கு எதிராக கனடா நடந்து கொள்கிறது.." என்று குற்றம் சாட்டி கனடாவிற்கும், ஜஸ்ரின் ட்ரூடோவிற்கும் எதிராக இடும் கூச்சல்களும், ஆர்ப்பாட்டங்களும், ஹரி ஆனந்தசங்கரிக்கு சிறீலங்கா விதித்த பயணத் தடையும் கனடாவைப் பொறுத்தவரை ராஜதந்திர ரீதியில் சாதாரணமான விடயம் இல்லை. அதெற்கெல்லாம் ஜஸ்ரின் ட்ரூடோ தந்திருக்கும் பதிலடியே ஹரி ஆனந்தசங்கரியை அமைச்சராக்கியது என்றும் நாம் கருதிக் கொள்ளலாம்! இல்லையா..?






# தரமற்ற மருந்துகள் குறித்து விசாரணை; 15 பேர் கொண்ட விசேட குழு நியமனம்

கொழும்பு, ஜூலை 30

தரமற்ற மருந்துகளின் பயன்பாடு தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக 15 பேர் கொண்ட விசேட குழுவை கணக்காய்வாளர் நாயகம் நியமித்துள்ளார்.

விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ.பி.சி.விக்ரமரத்ன தெரிவித்தார்.

சுகாதார அமைச்சு, மருந்துகள் விநியோகப் பிரிவு, அரச மருந்தக கூட்டுத்தாபனம், மருந்து தயாரிப்புக் கூட்டுத்தாபனம், கொழும்பு தேசிய வைத்தியசாலை, நாட்டின் ஏனைய பிரதான வைத்தியசாலைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் மற்றும் வைத்தியர்கள் ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகார சபை மற்றும் சுகாதார அமைச்சு தொடர்பில் தேசிய கணக்காய்வாளர் அலுவலகம் முன்னெடுத்துள்ள விசாரணைகளில், தரமற்ற மற்றும் பதிவு செய்யப்படாத மருந்துகளின் பாவனை குறித்து பல்வேறு தகவல்கள் வெளிவந்துள்ளமையினால், தற்போது விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பாராளுமன்ற பொது கணக்குகள் பற்றிய குழுவில் கலந்துரையாடப்பட்டதாக கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்தார்.

மருந்து கொள்வனவு மற்றும் விநியோகம் என்பனவற்றுடன் தொடர்புடைய கணினிக் கட்டமைப்பு குறித்தும் தற்போது விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்த விசாரணைகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாகவும் கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்தார்.

விசாரணை அறிக்கை இன்னும் இரண்டு மாதங்களில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என கணக்காய்வாளர் நாயகம் குறிப்பிட்டார். (அ)

# மனித உரிமை ஆணைக்குழுவின் பிரச்னைகளுக்கு விரைவில் தீர்வு

## ஜனாதிபதி ரணில் உறுதி



கொழும்பு, ஜூலை 30

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று முன் தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தனர்.

இதுவரை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு சுமார் 11,000 முறைப்பாடுகள் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பணியாளர்கள் தட்டுப்பாடு காணப்படுவதாகவும் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

அதற்குரிய தீர்வுகளை விரைவில் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதன்போது, அரச அதிகாரிகள் மற்றும் பொலிஸாருக்கு அவசியமான வழிகாட்டல் கோவை ஒன்றை விரைவில் பெற்றுத்தருமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கேட்டுக்கொண்ட ஜனாதிபதி, அதனூடாக ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதற்கான இயலுமை தொடர்பிலும் எடுத்துரைத்தார். (அ)

# ரூபாயின் பெறுமதி மீண்டும் உயரும்

கொழும்பு, ஜூலை 30

எதிர்வரும் மாதம் 15ஆம் திகதி முதல் டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி மீண்டு அதிகரிக்கும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

வழங்கல் மற்றும் தேவைக்கு ஏற்ப டொலர் வீதத்தை தீர்மானிக்க அரசாங்கம் அனுமதித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

சமீபகாலமாக ரூபாய் மதிப்பில் ஏற்பட்டுள்ள ஏற்ற இறக்கத்திற்கு முற்றிலும் டொலர் பரிவர்த்தனையே காரணம் என்றும் அவர் கூறினார்.

கடந்த மூன்று நாட்களில் ரூபாய் மதிப்பு மீண்டும் உயர்ந்துள்ளது என்றும் கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சு வார்த்தைகள் நிறைவடைந்தவுடன், ரூபாயின் மதிப்பு மீள அதிகரிக்கும் என அவர் தெரிவித்தார்.

உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் இருந்து இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கான தொடர்ச்சியான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருவதாக ரஞ்சித் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டார். (அ)

# கைதாகிய ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர தேசிய வைத்தியசாலை அவசர விபத்து பிரிவில்!

கொழும்பு, ஜூலை 30

கைது செய்யப்பட்ட இளம் ஊடகவியலாளர் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் தரிந்து உடுவரகெதர கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர விபத்துகள் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சட்டவிரோத கூட்டமொன்றின் அங்கத்தவராக செயற்பட்டமை, அரச ஊழியருக்கு குற்றவியல் அழுத்தம் விடுத்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் நேற்று முன் தினம் அவர் கைதுசெய்யப்பட்டார்.

தரிந்து உடுவரகெதர கைது செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை, ஒன்றிணைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் உள்ளிட்ட சில தொழிற்சங்கங்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

தேசிய கடன் மறுசீரமைப்பு என்ற போர்வையில் ஊழியர் சேமலாப நிதியத்தை கொள்ளையிடுதல், அரச ஊழியர்களின் பிரச்னைகளை தீர்க்காமை, ஓய்வூதியத்தில் கை வைத்தல் மற்றும் அநீதியான தொழில் சட்ட மறு சீரமைப்பிற்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டம் கொழும்பு தேசிய வைத்திய சாலைக்கு முன்பாக ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

எனினும், அங்கு வருகை தந்த பொலிஸார் நீதிமன்ற உத்தரவை வாசித்து ஆர்ப்பாட்டத்திற்கு வரையறைகள் உள்ளதாக சுட்டிக்காட்டினர்.

இதனையடுத்து, ஆர்ப்பாட்டக்காரர்கள் பொரளை சந்திக்கு சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனிடையே, ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதரவின் நலன் தொடர்பில் ஆராய்வதற்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பொரளை பொலிஸ் நிலையத்துக்கு சென்றிருந்தார். (அ)

# பாதாளக் குழுத் தலைவரின் பிரதான உதவியாளர் கைது

கொழும்பு, ஜூலை 30

டுபாயில் இருந்து போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் பாதாள உலகக் குழுவின் தலைவரின் பிரதான உதவியாளர் ஒருவர் கலால்வரி திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

40 கிராம் ஹெரோயின், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் 03 ரவைகளுடன் சந்தேகநபரை கைது செய்ததாக கலால்வரி திணைக்களத்தின் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவிற்கான பொறுப்பதிகாரி அனுரகுமார அளுத்கே தெரிவித்தார்.

குறித்த சந்தேகநபருடன் மேலும் இருவரை கைது செய்ததாகவும் அவர் கூறினார். (அ)

# ரஷ்ய பிரஜை உட்பட இருவர் கார் விபத்தில் உயிரிழப்பு!

கொழுமு, ஜூலை 30

கண்டி, மீமுரே - ஹன்னஸ்கிரிய வீதியில் புஸ்ஸேஎல பிரதேசத்தில் கார் ஒன்று பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று பிற்பகல் இடம்பெற்ற குறித்த விபத்தில் ரஷ்ய இளைஞர் ஒருவரும் இலங்கைப் பெண்ணொருவருமே உயிரிழந்துள்ளனர்.

இதன்போது, காரில் பயணித்த மேலும் இருவர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்த ரஷ்ய இளைஞர் 28 வயதுடையவர் எனவும், இலங்கை பெண் 51 வயதுடையவர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

### நோயாளி கொலை:

# நான்கு சந்தேக நபர்களுக்கு ஓக.10 வரை விளக்கமறியல்

கொழும்பு, ஜூலை 30

அங்கொடை தேசிய மனநல நிலையத்தின் விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவர் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

புதுக்கடை நீதவான் முன்னிலையில் சந்தேகநபர்கள் நேற்று ஆஜர்படுத்தப்பட்டபோதே விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நோயாளி உயிரிழந்தமை தொடர்பில் மற்றுமொரு சந்தேகநபர் நேற்று கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். அவரையும் சேர்த்து இதுவரை மொத்தமாக நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் அனைவரும் வைத்தியசாலையின் சுகாதார உதவியாளர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

அங்கொடை தேசிய மனநல நிலையத்தில் சிகிச்சை பெற்று வந்த 48 வயதான ஒருவர் கடந்த 25 ஆம் திகதி கொலை செய்யப்பட்டார்.

கொலை தொடர்பில் முன்னர் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதுடன், விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக தேசிய மனநல நிலையத்தின் பணிப்பாளர் டொக்டர் தம்மிகா விஜேசிங்க தெரிவித்தார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினாலும், மனநல நிலையத்தின் விசேட வைத்திய நிபுணர்கள் குழுவொன்றினாலும் தனித்தனியே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நோயாளியின் கொலை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

தேசிய மனநல நிலையத்தின் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர், ஊழியர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# தேர்தலுக்காக....

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் தெரியாதவர்களல்லர். உறுமீன் வரும் வரையிலும் வாடியிருக்கும் கொக்காக இப்போது உள்ளனர். இள வரசன் நாமலுக்கு முடிசூட்டும் காலம் கனியுமட்டும் காத்திருந்து காய்களை நகர்த்துவர். சிங்கள மக்களின் மக்களின் வாக்குகளை மையப்படுத்தியே அவர்கள் செயற்படுவார்கள் என்பதால் 13 இன் முழுமையான அமுலாக்கத்துக்கு எதராகவே இருப்பர். அங்கும் பசில் நாமல் போட்டியிருந்தாலும் நாமலை மையமாக வைத்தே எதிர்காலத்தில் காய்கள் நகர்த்தப்படும். மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்குவதற்கான பெரமுனவினரின் கோரிக்கையும் இதையொட்டியதே. அதேவேளை பொதுஜன பெரமுனவுக்குள் காணப்படும் பிளவுகளும் போட்டிகளும் ரணிலுக்கு வாய்ப்பாக உள்ளது.

தனது நலனுக்காக பிரிவுகளை ஏற்படுத்தும் வல்லமையுள்ள ரணிலுக்கு தானகவே பிளவுகள் ஏற்படுவது இரட்டிப்பு மகிழ்ச்சியாக இருக்கும்.

பொதுஜன பெரமுன கூட்டிலிருந்து பிரிந்து வெவ்வேறு குழுக்களாக இயங்குபவர்களோ, சிறிலங்கா சுதந்திர கட்சியோ தனித்தோ அல்லது அவர்களுக்கள் கூட்டமைத்தோ ஜனாதிபதித் தேர்தலில்போட்டியிடுவதற்கான வாய்ப்பு இல்லை எனலாம். யாருடன் கூட்டுவைப்பது என அவர்கள் தேடிக்கோண்டிருக்கும் ஒரு நிலையே காணப்படுகிறது. இதனால் விமல் வீரவங்ச, உதய கம்மன்பில போன்ற கடும் போக்குவாதிகள் 13ஐ வெளிப் படையாகவே எதிர்ப்பார்கள். மற்ற வர்கள் அடக்கிவாசிப்பார்கள் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரை இது தொடரும்.

## எந்தவொரு...

மனிதாபிமான அவல நிலை உருவாகியுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை வழமைக்கு கொண்டு வர அரசாங்கத்தால் முடியாவிட்டால், புதிய ஆணையின் மூலம் புதிய தேசிய கொள்கையை நோக்கி பயணிக்க வேண்டும்.

அதற்காக மக்கள் ஆணைக்காக எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி தயார்-என்றார். (அ

## இலங்கையில்...

ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு அரசமுறை பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

தமது நாடு மின்சாரம், உட்கட்டமைப்பு மற்றும் அர்ப்பணிப்புள்ள முதலீட்டு வலயங்கள் போன்ற துறை களிலும், பசுமை மற்றும் டிஜிட்டல் பொருளா தாரங்களிலும் ஜப்பானிய முதலீட்டை நாடுவ தாக அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இலங்கை கடந்த ஆண்டு பெரும் பொருளாதார நெருக்கடியை சந்தித்திருந்த நிலையில், சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து உதவியை பெற்றுக்கொள்ள கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

"இலங்கையின் பொருளாதார மீட்சி, நம்பிக்கைக்குரிய தொடக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், எதிர்கால அபிவிருத்தி திட்டங்கள் ஜப்பான்-இலங்கை உறவை மேம்படுத்துவதற்காக வாய்ப்புகளை வழங்கும் என்று நம்புவதாக" அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இந்தியா, தென்னாப்பிரிக்கா, உகாண்டா, எத்தியோப்பியா மற்றும் மாலைத்தீவுகள் உட்பட பல நாடுகளின் இராஜதந்திர சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக ஜப்பானிய வெளியுறவு அமைச்சர் யோஷிமாசா ஹயாஷி இலங்கை வந்துள்ளார்.

"கடன் மறுசீரமைப்பு செயல்பாட்டின் முன்னேற்றத்திற்கான தனது எதிர்பார்ப்புகளை ஜப்பானிய வெளியுறவு அமைச்சர் யோஷிமாசா ஹயாஷி வெளியிட்டிருந்தார்.

அத்துடன், அனைத்து கடன் வழங்கும் நாடுகளையும் உள்ளடக்கிய வெளிப்படையான மற்றும் ஒப்பிடக்கூடிய கடன் மறுசீரமைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதாக" ஹயாஷி தெரிவித்துள்ளார்.

2020 ஆம் ஆண்டில் ஜப்பானின் இரண்டு பில்லியன் டொலர் பெறுமதியான இலகு ரயில் திட்டத்தை இலங்கை அரசாங்கம் ஒருதலைபட்சமாக இடைநிறுத்தியது.

இந்த நடவடிக்கையை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது. எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அனுகுமுறையால் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு அண்மைய மாதங்களில் மேம்பட்டுள்ளது.

இலகு ரயில் திட்டத்தை மீண்டும் செயற்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த மாதம் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளார்.

இந்தியப் பெருங்கடலில் உள்ள முக்கிய கப்பல் வழித்தடங்களில் அமைந்துள்ள இலங்கை, ஒருபுறம் இந்தியாவிற்கும் ஜப்பானுக்கும் இடையில் செல்வாக்கு செலுத்துவதற் கான இடமாக மாறியுள்ளது, மறுபுறம் சீனாவும் இலங்கை மீது கண் வைத்துள்ளது.

நிதி அமைச்சின் தரவுகளின்படி, சுமார் 2.7 பில்லியன் டொலர் கடனைக் கொண்டுள்ள ஜப்பான், சீனாவிற்கு அடுத்தபடியாக இலங்கையின் மிகப் பெரிய இருதரப்பு கடன் வழங்குநராக உள்ளது.

இந்தியா மூன்றாவது முக்கிய கடன் வழங்குநராக உள்ளமை குறிப்பிடத்தக்கது.(அ)

## அதிகாரப்...

அதை செயல்படுத்துவது என்பது தொடர்பில் சிந்தித்து, நிதானமாக செயல்பட வேண்டிய தருணத்தில் இருக்கிறோம்.

நாட்டின் அனைத்து மக்களும் சம உரிமையுடன் வாழ வேண்டும் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். அதுவே எனது நிலைப்பாடாகும். நாட்டில் சுமுகமான நிலை இருக்கும் போதே இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கபடவேண்டும்.

நாட்டில் நெருக்கடி நிலை காணப்படும் போது இவ்வாறான பிரச்சினைகளை எடுத்துக் கொள்ளும் போது இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் தரப்பினர் பலர் உள்ளனர்.

அது அவர்களுக்கு சாதகமாக மாறிவிடும். இதற்கு முன்னரும் இவ்வாறு இனவாத செயற்பாட்டை கொண்டே சிலர் ஆட்சிக்கு வந்தனர். இதனை செய்வதற்கு சரியான நேரம் இதுவல்ல என நான் நினைக்கிறேன். இருப்பினும் அதற்கான நியாயம் வழங்கப்படவேண்டும்-என்றார். (அ)

## அம்பாந்தோட்டை...

எதிர்காலத்திற்கான வெளிநாட்டு கடற்படைத் தளங்களைப் பாதுகாப்பது என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உலகெங்கிலும் உள்ள 46 நாடுகளிலுள்ள 78 சர்வதேச துறைமுகங்கள் ஆய்வு செய்யப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துறைமுகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்கட்டமைப்பை மேம்படுத்தவும், எண்ணெய், தானியம் மற்றும் உலோகப் பொருட்களின் இறக்குமதி - ஏற்றுமதிக்காகவும் சீன வர்த்தக நிறுவனங்கள் செய்துள்ள பாரிய முதலீடுகள் தொடர்பான விரிவான தகவல்கள் இந்த ஆய்வில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சீன வர்த்தக நிறுவனங்கள் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் 30 பில்லியன் அமெரிக்க டொலர்களை தமது ஆய்வில் சேர்க்கப்பட்டுள்ள 78 சர்வதேச துறைமுகங்களின் நிர்மாணத்திற்காக செலவிட்டுள்ளதாக அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு மேலதிகமாக அடுத்து வரும் 5 வருடங்களில் ஈக்வடோரின் கினி இராச்சியத்தின் வாடா துறைமுகம் , பாகிஸ்தானின் கௌடர் துறைமுகம் மற்றும் கெமரூன் இராச்சியத்தின் க்ரீப் துறைமுகங்களையும் அபிவிருத்தி செய்வதற்கு சீனா திட்டமிட்டுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு மேலதிகமாக பாகிஸ்தானின் கௌடர் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு சீனா அதிக கவனம் செலுத்தியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், பாகிஸ்தானுக்கும் சீனாவுக்கும் இடையில் காணப்படும் நட்பே அதற்கான காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீனா மேற்கொண்டுள்ள முதலீடு, இவ்வாறான திட்டமொன்றுக்காக சீனா செய்துள்ள மிகப்பெரிய முதலீடு என்பதுடன், இதன் பெறுமதி 2.19 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பெரும்பான்மை பலத்தை சீனாவுக்கு பெற்றுக்கொடுக்க இலங்கை அரசாங்கம் கடந்த 2017 ஆம் ஆண்டு இணக்கம் தெரிவித்ததாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனா ஏற்கனவே தனது முதல் வெளிநாட்டு இராணுவத்தளத்தை கிழக்கு ஆப்பிரிக்காவின் ஜிபூட்டி துறைமுகத்தில் நிறுவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.
(அ)

# பேராசிரியராகப் பதவி உயர்வு!



யாழ்ப்பாணம்,ஜூலை30

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். வணிக முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவரைப் பேராசிரியராகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை இன்று ஒப்புதல் வழங்கியது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று சனிக்கிழமை காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த மனித வள முகாமைத்துவத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி (திருமதி) தனேஸ்வரி இரவீந்திரனின் மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் இன்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் படி, மனித வள முகாமைத்துவத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி தனேஸ்வரி இரவீந்திரன் மனித வள முகாமைத்துவத்தில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

## அமைச்சு...

வழங்கப்படாது குறித்தும் அவர்கள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

அமைச்சுப் பொறுப்புக்கள் கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக ஜனாதிபதிக்கு ஆதரவளிக்காமல் இருப்பது பொதுஜன பெரமுனவின் நிலைப்பாட்டுக்கு ஏற்படுத்தும் பாதிப்பு எனவும் கட்சிக்கு கிடைத்த மக்கள் ஆணையின் படி செயற்பட்டு வருவதால், ஜனாதிபதிக்கு தொடர்ந்தும் ஆதரவை வழங்க வேண்டும் எனவும் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

எனினும் மக்கள் ஆணைக்கு புறம்பாக ஜனாதிபதி செல்லும் நிலையேற்படுமாயின் அது குறித்து கவனம் செலுத்தி அந்த சந்தர்ப்பத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கலாம் எனவும் பசில் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## இந்திய...

தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப் படும் முட்டைகள் அழுகும் முன் மக்களுக்கு விநியோகம் செய்யப்படவேண்டிய தாலேயே அதிகளவில் விற்பனை செய் யப்படுகின்றன.

அத்துடன் இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளில் சில ஏற்கனவே பழுதடைந்த நிலையில் உள்ளன. அவை காலாவதியாகும் திகதி அழிக்கப்பட்டு சந்தையில் விநியோகிக்கப்படுகின்றன.

இந்திய முட்டைகள் குறைந்த விலைக்கு வாங்கி சந்தையில் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன.இதன் மூலம் பறவைக்காய்சல் பரவும் அபாயம் உள்ளது-என்றார்.
(அ)

## இந்தியாவின்...

சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு இவ்வாறு கூறிய பேராசிரியர் ஆனந்த ஜயவிக்ரம மேலும் தெரிவிக்கையில்-

இந்தியாவின் உப மாநிலமாக இலங்கையை மாற்ற முயற்சிக்கின்றனர். பாலத்தை நிர்மாணிப்பதால் இந்தியாவின் நலன்களே நிறைவேறும். இலங்கையின் தேவைப்பாடுகள் பாலம் நிர்மாணிப்பதால் நிறைவேறாது.

இலங்கையின் தேவைப்பாட்டுக்காகவன்றி, இந்தியாவின் தேவைப்பாட்டுக்கு ஏற்பவே இந்த பால நிர்மாண விடயம் கையாளப்படுகிறது. இதனால் இலங்கையின் நலன்களை விட இந்தியா வின் நலன்களே மேலோங்கும்.

நாட்டின் மொத்த சனத்தொகையில் 6.7 வீதமானோர் தொழிலற்று இருக்கின்றனர். நாளாந்தம் வேலை வாய்ப்பை இழக்கும் தொகை அதிகரித்து வருகிறது.

2022 இறுதியில் 5.5 மில்லியன் மக்கள் புதிதாக வறுமைக்குட்பட்டுள்ளனர். இது 27.4 வீதமாக அதிகரிக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

பொருளாதாரம் சரியான நிலைப்பாட்டுக்கு இன்னும் வரவில்லை. ஜனாதிபதி இதற்குண்டான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதாக புலப்படவில்லை.

அஸ்வெசும பெறச் சென்று உயிரிழக்கின்றனர். ஜீவனோபாயத்தை நடத்த தேவையான ஒழுங்கில் பொருளாதார வளர்ச்சி நாட்டில் நடைபெறுவதாக இல்லை. அதிகாரத்தை பெறும் நோக்கிலான பொறுப்பற்ற விதமாக அரசியல் விளையாட்டிலேயே தற்போதைய ஜனாதிபதியும் அரசாங்கமும் மொட்டுக் கட்சியும் ஈடுபட்டுள்ளன.

பொருளாதாரத்துக்கு தீர்வாக அதானி போன்ற சர்வதேச மட்டத்தில் வட்டிக்கு பணம் வழங்குநர்களிடம் தேசிய வளங்களை விற்பதே இந்த அரசாங்கத்தின் கொள்கையாக மாறியுள்ளது.

சர்வதேச நாடுகளின் அதிகார போட்டியில் இலங்கை சிக்கியுள்ளது. பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் செயற்பாடுகளுக்கு முற்றிலும் மாறான செயற்பாட்டையே ஜனாதிபதி மேற்கொள்கிறார்.

கல்விச் சீர்திருத்தம் தேவை என்றாலும், கல்விச் சீர்திருத்தம் என்ற போர்வையில் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை இல்லாமல் செய்வதற்கு தற்போதைய தேசிய முன்னுரிமை வழங்கப்படுகிறது.

தொடர்ச்சியாக தேர்தலை காலம் தாழ்த்தி, சர்வ கட்சி மாநாட்டை நடத்தி, மக்களையும் சர்வதேச தலைவர்களையும் இந்தியாவையும் ஏமாற்றும் நடவடிக்கையிலேயே ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் வெட்கமின்றி ஈடுபட்டு வருகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலையேனும் நடத்துமாறு இந்திய பிரதமர் ஜனாதிபதிக்கு தெரிவித்தமை இலங்கையின் நன்மதிப்புக்கே களங்கம் ஏற்படுத்தியுள்ளது.

நாடும் நாட்டு மக்களும் நாமும் எதிர்பார்த்த போக்கில் நாட்டின் பொருளாதார மீட்சி இடம்பெறுவதாக இல்லை. அதற்கான உண்மையான காரண காரிய செயற்பாட்டிலான பிரவேசத்துக்கு செல்வதாக இல்லை. பொருளாதார மீட்சிக்கு தேசிய வளங்களை விற்பது தீர்வாகாது; நாடுகளுக்கு ஏலம் விடுவதும் தீர்வாகாது-என்றார்.
(அ)

ஈழநாடு
Eelanadu

# 13ஆவது திருத்தம் அமுல்படுத்தப்படின் தேசிய நல்லிணக்கம் பாதிக்கப்படும்!

## சுட்டிக்காட்டுகின்றார் கம்மன்பில



**கொழும்பு, ஜூலை 30**

**13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தினால் தற்போதுள்ள தேசிய நல்லிணக்கமும் இல்லாமல் போகும் என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.**

13 ஆவது திருத்தம் குறித்து தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடையாது என்றும் அதை நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும் என என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டும் என ஜனாதிபதி குறிப்பிடுகின்றார்.

ஆனால் பொலிஸ் அதிகாரம் மற்றும் காணி அதிகாரம் ஆகியவற்றை மாகாணங்களுக்கு பகிர்ந்தளிக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது.

வடக்கு - கிழக்கில் காணி தொடர்பில் ஏதேனும் பிரச்னைகள் காணப்படுமாயின் அதற்கான விசேட பொறிமுறை ஒன்று வகுக்கலாமே தவிர காணி அதிகாரங்களை வழங்கக்கூடாது.

இதேவேளை, மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளமைக்கு ஜனாதிபதி பொறுப்புக்கூற வேண்டும் - என்றார். (அ)

# வவுனியாவில் துப்பாக்கிச்சூடு; 21 வயது இளைஞர் உயிரிழப்பு!

வவுனியா, ஜூலை 30

வவுனியாவில் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகிய நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோவில் குஞ்சுக்குளம் பகுதியில் பொலிஸார் நேற்றுக் காலை மீட்டெடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த இளைஞருக்கு அருகே கட்டுத் துப்பாக்கியும் அவ் இளைஞரின் மோட்டார் சைக்கிளும் காணப்பட்ட நிலையில் இதனை அவதானித்த பொதுமக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதே கிராமத்தினை சேர்ந்த 21 வயதுடைய சற்குணராசா டிசாந்த் என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (அ)

# உணவுப்பொருட்களுக்கு விலைச்சூத்திரம் அறிமுகம்



யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். மாவட்டத்தில் சிற்றுண்டிகள் உள்ளிட்ட உணவுப்பொருள்களுக்கு எதிர்காலத்தில் விலைச்சூத்திரத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் அடுத்த மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் சிற்றுண்டிகளின் அதிகபட்ச சில்லறை விலை தொடர்பாக பிரதேச செயலர்களால் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன் பணித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலர்கள், பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர், சுகாதார மருத்துவ அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்களின் பிரதிநிதிகள், உணவகங்களின் உரிமையாளர்கள் இதில் பங்கேற்றனர்.

பொருளாதார நெருக்கடியின் போது பொருள்களின் விலை உயர்வாக இருந்தபோது விலை அதிகரிக்கப்பட்ட சிற்றுண்டிகளின் விலை யாழ். மாவட்டத்தில் பெருமளவில் குறைக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது. அதேபோன்று சோற்றுப் பொதிகளின் விலைகளும் குறைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் சிற்றுண்டிகள் மற்றும் உணவுப்பொதிகளுக்கு ஆகக் கூடிய சில்லறை விலையாக எவ்வளவு ரூபாவை நிர்ணயம் செய்யலாம் என்பது தொடர்பில் 15 பிரதேச செயலர்களையும் அறிக்கையிடுமாறு யாழ். மாவட்ட அரச அதிபர் பணித்துள்ளார். (அ)

# அதிகளவு சுற்றுலாப் பயணிகள் ஜூலை மாதத்தில் பதிவாகுவர்!

கொழும்பு, ஜூலை 30

ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளின் வருகை ஜூலை மாதத்தில் பதிவாகும் என எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அந்த அதிகார சபையின் தரவுகளுக்கு அமைய, ஜூலை மாதத்தின் முதல் 27 நாட்களில் 1 இலட்சத்து 23 ஆயிரத்து 503 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இந்த ஆண்டின் முற்பகுதியில், மார்ச் மாதம் 1 இலட்சத்து 25 ஆயிரத்து 495 சுற்றுலாப் பயணிகளின் வருகையை இலங்கை பதிவு செய்திருந்தது.

இந்தநிலையில், எஞ்சியுள்ள நாட்களுக்குள் அதிக சுற்றுலா பயணிகளின் வருகையை ஜூலை மாதம் பதிவு செய்யும் என எதிர்பார்ப்பதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த முதலாம் திகதியிலிருந்து 27ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்துள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன. (அ)

# லொறி - ஓட்டோ நேருக்கு நேர் மோதி தந்தையும் மகளும் பரிதாப மரணம்!

கொழும்பு, ஜூலை 30

லொறியும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் தந்தையும் மகளும் பரிதாபகரமாக உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் கொழும்பு - கடுவெல பிரதேசத்தில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

லொறியும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கோர விபத்தில் ஓட்டோவைச் செலுத்திச் சென்ற 48 வயதுடைய தந்தையும், அதில் பயணித்த 22 வயதுடைய மகளும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் தனது மகளை வேலை முடிந்த பின்னர் வீட்டுக்கு ஓட்டோவில் தந்தை அழைத்துச் சென்றபோதே விபத்தில் சிக்கி இருவரும் சாவடைந்துள்ளனர்.

லொறியின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# தேங்காய்க்கு தட்டுப்பாடு

கொழும்பு, ஜூலை 30

நாட்டில் தேங்காய்க்கு தட்டுப்பாடு நிலவுவதற்கான சாத்தியம் காணப்படுவதாக தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தெங்கு பயிர்ச்செய்கைக்கு தேவையான உரம் கிடைக்காமையினால் தெங்கு உற்பத்தி குறைவடைந்துள்ளது. வருடத்திற்கு 4.9 பில்லியன் தேங்காய்கள் எமது நாட்டிற்கு தேவைப்படுகின்றன.

இந்தநிலையில் உரப்பற்றாக்குறை நிவர்த்திக்கப்படாவிட்டால் தேங்காய்க்கான தட்டுப்பாடு நிலவக்கூடும் என தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.(அ)

# இலங்கை ரயில்வே துறையில் தனியார் முதலீட்டாளர்கள்!

கொழும்பு, ஜூலை 30

இலங்கையில் இயங்கும் அனைத்து ரயில்களையும், ரயில்வே திணைக்களத்தின் கீழ் வைத்திருக்கும் அதேவேளை வெளிநாட்டு முதலீட்டாளர்களை ரயில்வே சேவைக்காக கொண்டுவருவதற்கு போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது.

இலங்கையில் ரயில் சேவை வலுவாக இல்லாவிட்டாலும் இலங்கை மக்களுக்கு மின்சார ரயில் சேவையை வழங்கும் நோக்கில் இந்த திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளின் பிரகாரம் ரயில்வே திணைக்களத்தை மறுசீரமைத்து அதிகார சபையாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதுடன், சீன, இந்திய மற்றும் ஜப்பானிய முதலீட்டாளர்களுடனும் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வெளிநாட்டு நிறுவனங்களே அந்தந்த நாடுகளில் அதிநவீன ரயில் சேவைகளை வழங்குவதுடன், தற்போது ரயில்வே திணைக்களத்தின் கீழ் இயங்கும் ரயில்களுக்கு மேலதிகமாக, வெளிநாட்டு முதலீட்டு நிறுவனங்கள் பயன்படுத்தும் ரயில்களை இயக்கவும், அதன் மூலம் மேலும் மேம்படுத்தவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதேநேரம், இலத்திரனியல் முறையில் ரயில் டிக்கெட்டுகளை வழங்குவதுடன், புறநகர் ரயில் நிலையங்களையும் மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரயில்வே திணைக்களத்தின் கீழ், நாளாந்தம் சுமார் 370 ரயில் பயணங்கள் நடத்தப்படுவதுடன், பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்து மூலம் திணைக்களத்திற்கு ஒரு பில்லியன் ரூபா மாத வருமானம் கிடைக்கின்றது.

எவ்வாறாயினும், ஒரு பில்லியன் ரூபா வருமானம் முழுமையாக எரிபொருளுக்கு செலவிடப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# போலி விசா மூலம் வெளிநாடு செல்ல முயற்சித்தவர் கைது!

கொழும்பு, ஜூலை 30

போலி விசா அனுமதிப் பத்திரத்தை பயன்படுத்தி, வெளிநாடு செல்ல முயற்சித்த பெண் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் நேற்று முன் தினம் அவரை கைது செய்துள்ளனர்.

இதன்போது, முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், குறித்த பெண்ணுக்கு ஒத்துழைப்பு வழங்கிய, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்கள் இருவரும் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது, அவர்களை எதிர்வரும் 11ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (அ)

# சென்னை விமான நிலையத்தில் இரு இலங்கையர்கள் உயிரிழப்பு

சென்னை, ஜூலை 30

சென்னை விமான நிலையத்தில் இலங்கையர்கள் இருவர் உயிரிழந்துள்ளதாக தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இருவேறு சந்தர்ப்பங்களில் ஆண் ஒருவரும், பெண் ஒருவரும் மாரடைப்பு காரணமாக இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த பெண் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் எனவும், சில நாட்களுக்கு முன்னர் தமிழகம் சென்றிருந்த அவர், மீளவும் யாழ்ப்பாணம் திரும்புவதற்காக விமான நிலையம் வந்திருந்த போது திடீரென மயங்கி வீழ்ந்துள்ளார்.

விமான நிலைய வைத்தியர்கள் அவரை சோதனை செய்த போது மாரடைப்பு காரணமாக உயிரிழந்தமை தெரியவந்துள்ளது.

இதனிடையே, இலங்கையில் இருந்து சென்னை வந்த ஒருவரும் மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் சென்னை விமான நிலையத்தில் குடியுரிமை சோதனை முடிந்து சுங்கப் பிரிவுக்கு நடந்து சென்ற போது மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இந்த உயிரிழப்புகள் குறித்து சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.07.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.